REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

2024 ஜூலை 17 புதன்கிழமை

# தினகரன்

THINAKARAN 92 1932–2024 ANNIVERSARY

வரு. 92 இல. 169 | Wednesday 17, July, 2024 | 16 பக்கங்கள் | 50/-


## மைத்திரிக்கு எதிரான தயாசிறியின் மனு 23 இல், விசாரணைக்கு எடுக்க உத்தரவு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேக்கரவினால் அக்கட்சியின் முன்னாள் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்டோருக்கு எதிராக தாக்கல் செய்துள்ள இரண்டு முறைப்பாட்டு மனுக்களை, எதிர்வரும் (23)

06

## நீர் கட்டணங்களுக்கு விலை சூத்திரம்; 2025இல் அமுல்படுத்த அமைச்சரவை அனுமதி

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நீர் கட்டண கொள்கை மற்றும் நீருக்கான விலைச் சூத்திரத்தை 2025 முதல் நடைமுறைப்படுத்துவதற்கு நீர் வழங்கல், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை மீளாய்வுக்கிணங்க நீர் கட்டண கொள்கை மற்றும் நீருக்கான விலைச் சூத்திரம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதற்கே அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக

06

## ஜனாதிபதியின் பதவிக்காலம் குறித்து
## அரசியலமைப்பில் திருத்தம் செய்து வர்த்தமானியில் வெளியிட தீர்மானம்

### பாராளுமன்றில் சமர்ப்பிக்கவும் அமைச்சரவை அனுமதி

ஜனாதிபதியின் பதவிக்காலம் 06 வருடங்களுக்கு மேற்பட்ட என்பதற்குப் பதிலாக 05 வருடங்களுக்கு மேற்பட்டதென வரையறுத்து, இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பை திருத்தி சட்டமூலத்தை வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பின்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின்

06

## யுனெஸ்கோ பிரதிநிதி ஜனாதிபதியுடன் சந்திப்பு



இலங்கைக்கு விஜயம் செய்துள்ள யுனெஸ்கோ நிறுவன பணிப்பாளர் நாயகம் Ms.Audrey Azoulay ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து பேச்சு நடத்தினார். கொழும்பு கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் இந்த சந்திப்பு நேற்று நடைபெற்றுள்ளது.

06




06 மின் கட்டண குறைப்புக்கமைவாக
நீருக்கான கட்டணத்தை திருத்த நீர் வழங்கல் சபை தீர்மானம்





03 அடுக்கு மாடிகளில் வசிக்கும் 50,000 பேருக்கு ரன்தொர உறுமய உறுதி
சுகததாச விளையாட்டரங்கில் இன்று கையளிப்பு


# நோயாளருக்கான ஜனாதிபதி நிதிய கொடுப்பனவு 100 வீதமாக அதிகரிப்பு

## விண்ணப்பம் கிடைத்து ஒரு வாரத்திலேயே வழங்க ஏற்பாடு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஜனாதிபதி நிதியத்தின் மூலம் நோயாளர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவை 50 வீதத்திலிருந்து 100 வீதமாக அதிகரித்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதமளவில் இந்த கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்வதற்காக ஜனாதிபதி நிதியத்துக்கு இருதய நோய் மற்றும் சிறுநீரக நோயாளர்களிடமிருந்து 8,000க்கும் அதிகமான விண்ணப்பங்கள் கிடைத்ததாகவும் அதற்கான கொடுப்பனவுகளை அந்த வருடத்திலேயே வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த கொடுப்பனவுகள் வழங்கப்பட்ட போது அதனை 50 வீதத்திலிருந்து 100 வீதமாக அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தெரிவித்துள்ள இராஜாங்க அமைச்சர், விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்ற ஒரு வார காலத்திலேயே இந்த கொடுப்பனவுகளுக்கான நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

அந்த நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்கு தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் விண்ணப்பங்கள் கிடைத்து ஒரு வார காலத்தில் அதனை வழங்குவதற்கு வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி நிதியத்தின் மூலம் பாடசாலை மாணவர்களுக்காக வழங்கப்படும் புலமைப் பரிசில் வேலைத் திட்டத்தின் கீழ், கேகாலை மாவட்டத்தில் 4,000 மாணவர்களுக்கு புலமைப் பரிசில் மற்றும் பாடசாலை உபகரணங்களை வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வையடுத்து ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே நிதி இராஜாங்க அமைச்சர் இவ்வாறு

06

## மின்சாரக் கட்டணக் குறைப்பின் மூலம்
## அதிகரித்த பொருட்கள், சேவைகள் கட்டணத்தை 20% குறைக்க முடியும்



அதிகரித்துள்ள பொருட்கள் மற்றும் சேவைக் கட்டணங்களை, மின்சாரக் கட்டணத் திருத்தத்தினூடாக 20 சதவீதத்தினால் குறைக்க முடியுமென மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர தெரிவித்தார்.

மின் கட்டணம் அதிகரிக்கும் தினத்தன்று பொருட்கள் மற்றும் சேவைகளின் கட்டணங்கள் அதிகரித்தன. இதே போன்று மின் கட்டணம் குறைக்கப்படும் அதே தினத்திலிருந்து இவற்றை குறைக்க நடவடிக்கை எடுக்குமாறும் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் வர்த்தக சமூகத்திடம் கேட்டுக்கொண்டார்.

06

## ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பு இம்மாத இறுதிக்குள் வெளியிடப்படும்

### இன்று 17 முதல் ஆக. 20 வரை அறிவிப்பை வெளியிட ஆணைக்குழுவுக்கு அதிகாரம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பு இம்மாத இறுதிக்குள் வெளியிடப்படும் என தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க

06

## அரச நிதி முகாமைத்துவம், இலங்கையின் எதிர்காலம்

### நாடளாவிய ரீதியில் பத்திரிகை கட்டுரை போட்டி நடத்த ஏற்பாடு

நிதி முகாமைத்துவ சட்டமூலங்கள் மற்றும் பொருளாதார மாற்ற சட்ட மூலங்கள் குறித்து மாணவர்களுக்கு தெளிவுபடுத்த கட்டுரைப்போட்டி நடத்தப்படவுள்ளது. நாடளாவிய ரீதியில் இக்கட்டுரைப் போட்டியை நடத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

"முறையான அரச நிதி முகாமைத்துவம் மற்றும் நிலையான பொருளாதார மாற்றத்தின் மூலம் 2048 இல், வளர்ச்சியடைந்த எனது நாடு" என்ற கருப்பொருளின் கீழ் நடத்தப்படும் இந்த தேசிய அளவிலான பத்திரிகைக் கட்டுரைப் போட்டியில் வெற்றி

06

## வேலை நிறுத்தங்களில் பங்கேற்காத அரச ஊழியர்களுக்கு ரூபா 10,000

### ஒரே தடவையில் வழங்க அமைச்சரவை அனுமதி


**லோரன்ஸ் செல்வநாயகம்**

சில தினங்களுக்கு முன்னர் அரசாங்க ஊழியர்கள் மேற்கொண்ட வேலை நிறுத்தத்தில் பங்கேற்காது, கடமைக்கு சமுகமளித்த நிறைவேற்றுத் தரத்துக்கு கீழுள்ள அரசாங்க ஊழியர்களுக்கு கொடுப்பனவு வழங்குவதற்கு

06

## அரசின் மீது மக்களின் அங்கீகாரம் அதிகரிப்பு

### Verite Research ஆய்வில் தெரிவிப்பு



அரசாங்கத்தின் மீதான மக்களின் அங்கீகாரம் மூன்று மடங்கு அதிகரித்துள்ளதாக வெரிடே ரிசர்ச் என்ற (Verit Research) சுயாதீன ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது. நாட்டின் பொருளாதாரம் மற்றும் அதனுடன் தொடர்பட்ட அரசாங்கத்தின் செயற்பாடு குறித்து இந்த நிறுவனம் சமீபத்தில் மேற்கொண்ட ஆய்வில் பொது மக்கள் நம்பிக்கையை வெளிப்படுத்தியிருப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது.

அரசாங்கத்தின் சமீபத்திய

06

## அஸ்வெசும உதவிபெறும் குடும்ப மாணவருக்கும் சுரக்ஷா காப்புறுதி

### ஜனாதிபதி, கல்வி அமைச்சரின் யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம்

சுரக்ஷா மாணவர் காப்புறுதி திட்டத்தை மீள அமுல்படுத்துவதற்கும், இதற்காக இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்திடமிருந்து விலைமனு கோருவதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. இதற்கமைய, இலங்கை காப்புறுதி கூட்டுத்தானம்

06

## தலவாக்கலையில் 03 சிறுமிகள் உட்பட நான்கு சிறார்கள் மாயம்

### காணவில்லையென பெற்றோர் முறைப்பாடு


பொகவந்தலாவ நிருபர்

தலவாக்கலை கிறேட்வெஸ்டன் லூசா தோட்டத்திலுள்ள 03 சிறுமிகளும் ஒரு சிறுவனும் காணாமலாகியுள்ளதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

06

## அரபிக் கடல், வங்காள விரிகுடாவில் பலத்த காற்றுடன் கடல் கொந்தளிப்பு

### கடற்றொழிலாளருக்கு கடும் எச்சரிக்கை



அரபிக் கடல், வங்காள விரிகுடா பகுதிகளில் பலத்த காற்றுடன் கடல் கொந்தளிப்பாக காணப்படுமென்பதால் கடற்படை மற்றும் கடற்றொழிலாளர்களுக்கு

06

## மின்சார கட்டண குறைப்புடன் சிற்றுண்டிகள் விலையும் குறைப்பு

- கொத்து, பிறைட்ரைஸ், சாப்பாடு 25 ரூபா
- பரோட்டா, முட்டைரொட்டி 10 ரூபா

கொத்துரொட்டி, பராட்டா உட்பட உணவுப் பொருட்கள் சிலவற்றின் விலைகளைக் குறைக்க அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள்

06




# காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் பிரகாரமே 'உறுமய' திட்டத்தில் மக்களுக்கு நிலஉரிமை உறுதிகள்

'உறுமய' வேலைத் திட்டம் 2002ஆம், 2003 ஆம் ஆண்டுகளில் இந்த நாட்டில் அமுல்படுத்தப்பட்ட வேலைத்திட்டம் எனவும், நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் அதனை நிறுத்த வேண்டி ஏற்பட்டதாகவும், அன்று அந்தத் திட்டத்தை செயல்படுத்தியிருந்தால் 20 வருடங்களுக்கு முன்னர் மக்களுக்கு நிரந்தர காணி உறுதி கிடைத்திருக்கும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நீதித்துறையின் அதிகாரம் பாராளுமன்றத்தில் உள்ளது என்பதை நினைவுபடுத்திய ஜனாதிபதி, பாராளுமன்றத்தின் நிறைவேற்று அதிகாரத்தில் நீதித்துறை தலையிடக் கூடாது என்ற நிலைப்பாட்டில் தான் எப்போதும் இருப்பதாகவும் தெரிவித்தார்.

மஹியங்கனை பொது விளையாட்டரங்கில் கடந்த 14 ஆம் திகதி நடைபெற்ற உறுமய நிரந்தர காணி உறுதி வழங்கும் நிகழ்வில் உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார். 20 இலட்சம் நிரந்தர காணி உறுதி வழங்கும் 'உறுமய' தேசிய திட்டத்தின் கீழ் பதுளை மாவட்டத்தில் தகுதி பெற்ற 65,393 பேரில் 662 பேருக்கு நிரந்தர காணி உறுதிகள் வழங்கப்பட்டன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடையாளமாக சிலருக்கு காணி உறுதிகளை வழங்கி வைத்தார்.

இத்துடன் இணைந்ததாக பதுளை மாவட்டத்திலுள்ள நான்கு பாடசாலைகளுக்கான விளையாட்டு உபகரணங்களையும் ஜனாதிபதி வழங்கி வைத்தார். அத்துடன் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மஹியங்கனை பொதுவிளையாட்டரங்கின் பிரதான கேட்போர் கூடத்தையும் அவர் திறந்து வைத்தார்.

உறுமய நிரந்தர காணி உறுதிகளை வழங்கும் நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி மேலும் கூறியதாவது:

"காணி உறுதிகளை வழங்கும் வேலைத்திட்டம் இந்த நாட்டில் 2002 ஆம், 2003 ஆம் ஆண்டுகளில் நடைமுறைப்படுத்தப்பட்ட ஒரு திட்டமாகும். ஆனால் நீதிமன்றம் அதை தடுத்து நிறுத்தியது. இந்த நாட்டின் காணி கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நான் செயற்பட்டேன். காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டம் எனது தாத்தா எஸ்.ஏ.விக்கிரமசிங்கவினால் தயாரிக்கப்பட்டது. அவர் அப்போது வடமத்திய மாகாண அரசாங்கத்தின் அரசாங்க அதிபராக பணியாற்றினார்.

டி.எஸ். சேனாநாயக்க விவசாய அமைச்சராக அநுராதபுரத்தில் உள்ள பழைய குளங்களை மேற்பார்வை செய்வதற்காக வந்தார். சில குளங்கள் புனரமைக்கப்பட்டன. பராக்கிரம சமுத்திரம் உட்பட மற்றவை புனரமைக்கப்படவிருந்தன. அதன் பின்னரே, அந்த பகுதி மக்களை குடியமர்த்துவதில் கவனம் செலுத்தப்பட்டது.

காணி அபிவிருத்தி திணைக்களம் என்ற புதிய திணைக்களம் என்ற பெயரில் புதிய நிறுவனமொன்றை நிறுவவுள்ளதாக எனது தாத்தா சீ.எல். விக்ரமசிங்கவுக்கு, டி.எஸ். சேனநாயக்க அறிவித்தார். அதனை பொறுப்பேற்க வருமாறு கோரினார். அதற்குத் தேவையான சட்டங்களைத் தயாரிக்கவும் அவர் கேட்டுக் கொண்டார். அதன்படி சட்டங்களைத் தயாரித்து நிறைவேற்றி முதல் காணி அபிவிருத்தி ஆணையாளராகப் பதவியேற்று மக்களை இந்தப் பகுதிக்கு அழைத்து வந்து குடியமர்த்தினார்.

ஈர வலயத்தின் நிலமற்ற மக்களைக் குடியமர்த்தி, இந்தப் பகுதிகளில் கிராமங்களை நிறுவி, அந்தக் கிராமங்களையும் மேம்படுத்துவதே இதன் நோக்கமாக இருந்தது. அந்த வேலைத்திட்டத்திற்காகவே இந்த சட்டம் தயாரிக்கப்பட்டது.

அவருடைய ஆவணங்களைப் படித்தபோது, ஒரு சிக்கல் எழுந்தது. அந்தச் சமயம் இலங்கையில் பலருக்கு எழுதப் படிக்க த் தெரியாது. எனவே, பல்வேறு நபர்கள் வந்து அந்த நபர்களை பல்வேறு ஒப்பந்தங்களில் இணைத்து அவர்களுக்குக் கடன் கொடுத்து நிலத்தை அபகரிக்க மு யன்றனர். அதன் காரணமாகவே நில உரிமை முறை உருவாக்கப்பட்டது.

1935இற்கும் இன்றைக்கும் இடையில் பாரிய வித்தியாசம் இருக்கிறது. இன்று இந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு குடும்பங்களிலும் நன்கு படித்த பட்டதாரிகள், மருத்துவர்கள், வழக்கறிஞர்கள் போன்றவர்கள் இருக்கின்றனர். எனவே, இன்று அவ்வாறான நிலை ஏற்படாது. ஆனால் மக்களுக்கு அப்போது அவ்வாறான அறிவு இல்லாததால் மக்கள் ஏமாற்றப்படும் வாய்ப்பு இருந்தது. இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வாய்ப்பு கிடைத்திருந்தால் 20 வருடங்களுக்கு முன்னரே மக்களின் இலவச காணி உரிமையை உறுதிப்படுத்தும் வாய்ப்பு கிடைத்திருக்கும். காணி கட்டளைச் சட்டத்தின் கீழ் அரச காணியை ஷங்கிரிலா ஹோட்டலுக்கு வழங்க முடியுமானால் ஜனாதிபதி என்ற முறையில் 20 இலட்சம் மக்களுக்கு காணி உரிமையை ஏன் வழங்க முடியாது என நான் கேட்க விரும்புகின்றேன். இதற்கு எதிராக நீதிமன்றத்தை நாடுவோம் என்றார்கள். ஆனால் அதிகார வரம்பு நீதிமன்றத்திற்கு அன்றி பாராளுமன்றத்திற்கே உள்ளது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். பாராளுமன்றத்தின் நிறைவேற்று அதிகாரத்தில் நீதித்துறை தலையிடக் கூடாது என்ற நிலைப்பாட்டில் நான் எப்போதும் இருக்கிறேன்.

## மஹியங்கணையில் ஜனாதிபதி தெரிவிப்பு





## 'காணி கட்டளைச் சட்டத்தின் கீழ் அரசகாணியை ஷங்கிரிலா ஹோட்டலுக்கு வழங்க முடியுமானால், ஜனாதிபதி என்ற முறையில் 20 இலட்சம் மக்களுக்கு காணி உரிமையை ஏன் வழங்க முடியாது?'

20 ஆண்டுகளுக்கு முன் செயல்படுத்தப்படக்கூடிய திட்டத்தை செயல்படுத்த முடியாமல் போனது வருத்தம் அளிக்கிறது. இப்போது இந்த நில உரிமைகளை மக்களுக்கு வழங்கி வருகிறோம். நான் முதன் முதலில் இந்தப் பிரதேசத்திற்கு 60 ஆண்டுகளுக்கு முன்பு வந்தேன். அப்போது இந்த பிரதேசம் அடர்ந்த காடாக இருந்தது. மீண்டும் 1978 ஆம் ஆண்டு அமைச்சர் காமினி திஸாநாயக்க உள்ளிட்ட குழுவுடன் இங்கு வந்து உளுஹிட்டிய திட்டத்தை ஆரம்பித்து வைத்தோம். உளுஹிடியில் இருந்து வந்த அனைவருக்கும் நிரந்தர காணி உறுதி வழங்கும் திட்டத்தை ஆரம்பிக்க இங்கு வந்துள்ளேன். இது உங்கள் உரிமை. கொத்மலை நீர்த்தேக்கத்தை நிர்மாணிப்பதற்காக பொதுமக்களின் காணிகள் அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டன. அத்துடன் தெல்தெனிய நீர்த்தேக்கத்தை நிர்மாணிப்பதற்காக காணிகள் பெறப்பட்டன. அந்த மக்கள் இந்தப் பகுதிகளுக்கு அனுப்பப்பட்டனர். இவை உங்களுக்குச் சொந்தமான நிலங்கள். அந்த உரிமையை உறுதி செய்யும் வகையில் இன்று இந்த நிரந்தர காணிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதை உங்கள் முன்னேற்றத்தின் தொடக்கமாக மாற்றுமாறு கேட்டுக் கொள்கிறேன். அதற்குத் தேவையான சூழலை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்."

இவ்வாறு ஜனாதிபதி தெரிவித்தார்.

**அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா:**

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக்கருவின் பேரில் நடைமுறைப்படுத்தப்படும் 'உறுமய' நிரந்தர காணி உறுதித் திட்டத்தின் கீழ் பதுளை மாவட்ட மக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். பதுளை மாவட்டத்தில் சமூக அநீதிக்கு ஆளான மக்கள் உள்ளனர். உலக வரலாற்றில் நிலம் கையகப்படுத்தும் காரணங்களால் போராட்டங்கள் வெடித்தன. நாடு இக்கட்டான சூழ்நிலையில் இருந்த நேரத்தில் தற்போதைய ஜனாதிபதி பாரிய பொறுப்பை ஏற்றார்.

குறுகிய அரசியல் நோக்கங்களின்றி பல புதிய எண்ணக்கருக்களை நாட்டுக்கு முன்வைத்தார். அரசியலை ஒதுக்கி வைத்துவிட்டு நாட்டுக்காக சரியான முடிவுகளை எடுத்தார். தான் ஏற்றுக்கொண்ட சவாலை நிறைவேற்றிய தலைவர் அவர். சரிந்த நாட்டின் பொருளாதாரத்தை நிலைப்படுத்தினார். விவசாயிகளுக்கு உரம் மற்றும் எரிபொருள் வழங்கப்பட்டது. இவ்வளவு உறுதியான பணியை ஆற்றிய தேசத்தின் மீது கடனும் பயமும் இல்லாத ஒரே தலைவர் ரணில் விக்கிரமசிங்க மட்டுமே."

**அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ:**

"அன்று ஜனாதிபதி ஏற்றுக்கொண்ட சவால் சாதாரணமான ஒன்றல்ல. நாட்டு மக்களை தூக்கி நிறுத்தவும், நாட்டை மீளக் கட்டியெழுப்பவும் அவர் தனியாகவே தீர்மானம் எடுத்தார். உலகத்தின் முன் இலங்கையின் பெயரை உயர்த்த அவர் பாடுபட்டார்.

நெருக்கடியான சூழ்நிலையில், மஹியங்கனை மக்கள் பாரிய விடயங்களை எதிர்பார்க்கவில்லை. விவசாயிகள் உரம் மற்றும் எரிபொருளை மட்டுமே கேட்டனர். இன்று நீங்கள் பெற்றுக்கொள்ளும் இந்த காணிப் பத்திரம் சாதாரணமான ஒன்றல்ல.

இது உங்கள் உரிமை. பரம்பரை பரம்பரையாக கைமாற்றப்பட வேண்டிய காணி உறுதி இது. உங்களின் வாரிசுக்கு இதனை நீங்கள் கொடுக்க வேண்டும் என்பதால் இந்த திட்டத்திற்கு 'உறுமய' என்று பெயர் வைக்கப்பட்டது.

இது அரசியல் நோக்கத்திற்காக செயல்படுத்தப்பட்ட திட்டம் அல்ல. இந்தத் திட்டத்தில் அரசியலை புகுத்த வேண்டாம் என அரச அதிகாரிகளிடம் கேட்டுக்கொள்கிறேன்."

இராஜாங்க அமைச்சர்களான சாமர சம்பத் தசநாயக்க, தேனுக விதானகமகே ஆகியோரும் உரையாற்றினர்.

ஊவா மாகாண ஆளுநர் ஏ. ஜே. எம். முஸம்மில், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, பாராளுமன்ற உறுப்பினர்களான மேஜர் சுதர்சன தெனிபிட்டிய, நாலக கோட்டேகொட, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிகச் செயலாளர் சந்திரா ஹேரத், மகாவலி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் மகேந்திர அபேவர்தன, பதுளை மாவட்ட செயலாளர் பண்டுக ஸ்ரீ பிரபாத் அபேவர்தன மற்றும் ஆதிவாசி தலைவர் ஊருவரிகே வன்னில எத்தோ, பிரதேச அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள், காணி உறுதிப் பத்திரம் பெறுவோர் என பெருந்திரளானோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.





**ஜனாதிபதி ஊடகப் பிரிவு**

# 2024 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் விவசாய ஏற்றுமதியில் தெளிவான வளர்ச்சி

## விவசாய மற்றும் பெருந்தோட்ட அமைச்சின் செயலாளர் பி.எல்.ஏ.ஜே. தர்மகீர்த்தி



கடந்த இரண்டு வருடங்களுடன் ஒப்பிடும்போது, 2024 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் விவசாய ஏற்றுமதித்துறையில் தெளிவான வளர்ச்சி ஏற்பட்டுள்ளதாக விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் செயலாளர் பி.எல்.ஏ.ஜே. தர்மகீர்த்தி தெரிவித்தார்.

2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023 ஆம் ஆண்டு பதிவாகியிருந்த விவசாய ஏற்றுமதி வருமானத்தின் பாதகமான நிலைமையைக் கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட துரித நடவடிக்கைகளின் காரணமாக இந்த முன்னேற்றம் சாத்தியமாகியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

'இரண்டு வருட முன்னேற்றமும் எதிர்காலமும்' என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்றுமுன்தினம் (15) நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.



இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அவர், "2022 உடன் ஒப்பிடும்போது, 2023 இல் விவசாய ஏற்றுமதி வருமானம் குறைந்துள்ளது. அதன்படி எடுக்கப்பட்ட துரித நடவடிக்கைகள் காரணமாக 2024 இன் முதல் ஆறு மாதங்களில் விவசாய ஏற்றுமதித் துறையில் தெளிவான வளர்ச்சியை உருவாக்க முடிந்தது.

இக்காலத்தில் நிலவிய காலநிலை விவசாயத்துக்கு சாதகமாக இல்லை என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட வேண்டும். இத்தகைய சவால்களை எதிர்கொண்டு அடைந்த முன்னேற்றம் உண்மையில் வெற்றியாகும் என்பதையும் கூற வேண்டும்.

உதாரணமாக, 2023 ஏப்ரல் மாதமாகும்போது, தேயிலை மூலம் கிடைத்த 407.6 மில்லியன் அமெரிக்க டொலர் ஏற்றுமதி வருமானம், 2024 ஏப்ரல் மாத்தில் 450.5 மில்லியனாக அதிகரித்துள்ளது.

மேலும், 2023 ஏப்ரல் மாதத்திற்குள் தேங்காய் ஏற்றுமதி மூலம் 212 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் கிடைத்தது. அது 2024 ஏப்ரல் மாதமாகும்போது 263 மில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது.

2023 ஏப்ரல் மாதத்தில் 299 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்த இறப்பர் ஏற்றுமதி வருமானம் 2024 ஏப்ரல் இல் 335 மில்லியனாக அதிகரித்துள்ளது.

மேலும், இதே காலப்பகுதியில் கறுவா ஏற்றுமதி வருமானம் 53.3 மில்லியன் அமெரிக்க டொலரில் இருந்து 56.1 மில்லியனாகவும், மிளகு ஏற்றுமதி வருமானம் 13.3 மில்லியன் அமெரிக்க டொலரில் இருந்து 14 மில்லியனாகவும் அதிகரித்துள்ளது.

ஒவ்வொரு 50 கிலோ உர மூடைக்கும் 2000 ரூபா மானியத்தில் உரம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. தற்போது, 10,000 மெட்ரிக் தொன் தேயிலை உரம் பயிர்ச்செய்கையாளர்களுக்கு வழங்கப்பட்டது. எஞ்சிய 20,000 மெட்ரிக் தொன் மேற்குறிப்பிட்ட தரப்பினருக்கு மேலதிகமாக தேயிலை தொழிற்சாலை உரிமையாளர்களை இணைத்துக் கொண்டு, உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

மொத்தமாக தேயிலை உற்பத்தியை அதிகரிக்கும் வகையில், 2022 ஆம் ஆண்டு முதல் தற்போது வரை 745 ஹெக்டேயரில் தேயிலை மீள்நடுதல் மற்றும் நேரடி பயிர்ச்செய்கை தொடர்பான மானியத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அதன் கீழ் 324 விவசாயிகளுக்கு 140 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டிற்கு 60 மில்லியன் ரூபாயை ஒதுக்கி 800,000 தேயிலை செடிகளை நடும் புதிய திட்டமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அத்துடன், இலங்கை தேயிலைச் சபையின் நிதி ஒதுக்கீட்டின் கீழ், சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபை நேரடி தேயிலை பயிர்ச்செய்கை திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளது. இதற்காக 750 மில்லியன் ரூபாய் பயன்படுத்தப்படவுள்ளது. தற்போது, தேங்காய் சிரட்டை மற்றும் தேங்காய் மட்டை சார்ந்த உற்பத்திகளும் இந்நாட்டிற்கு வெளிநாட்டு வருமானத்தை ஈட்டித் தருகின்றன. 2022 ஆம் ஆண்டில், தேங்காய் சார்ந்த ஏற்றுமதி மூலம் 817 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் கிடைத்துள்ளது".

***இலங்கை தேயிலை சபையின் தலைவர் நிராஜ் டி மெல்;***

"ஈரானுக்கும் இலங்கைக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம், தேயிலை ஏற்றுமதியின் ஊடாக ஈரானுக்குச் செலுத்த வேண்டிய எண்ணெய்க்கான கடனை இலங்கை கடந்த வருடம் ஆகஸ்ட் 5 ஆம் திகதி முதல் செலுத்த ஆரம்பித்துள்ளது. அந்த உடன்படிக்கையின் கீழ், தேயிலை ஏற்றுமதியின் மூலம் பெற்றோலியத்துக்காக ஈரானுக்குச் செலுத்த வேண்டிய 250.9 மில்லியன் அமெரிக்க டொலரை செலுத்த எதிர்பார்க்கப்படுகிறது. அந்த கடனில் இதுவரை 55 மில்லியன் அமெரிக்க டொலர் செலுத்தப்பட்டுள்ளது. 2024 இன் முதல் 4 மாதங்களில், 4.1 மில்லியன் கிலோ தேயிலை ஈரானுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது, இது 2023 இன் முதல் 4 மாதங்களில் ஈரானுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் அளவை விட மூன்று மடங்கு அதிகமாகும்."

***தெங்கு அபிவிருத்திச் சபையின் தலைவர் ரொஷான் பெரேரா;***

"தெங்கு சார்ந்த உற்பத்தியாளர்களின் உற்பத்திச் செலவைக் குறைத்து தரம், திறன், அளவு, தேவையான மேம்பாடுகள், இயந்திரங்களை கொள்வனவு செய்தல், புதுப்பிக்கத்தக்க ஆற்றலைப் பயன்படுத்துவதற்கான நிதி உதவியைப் பெறுதல் உள்ளிட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பிராந்திய அபிவிருத்தி வங்கியுடன் கடன் திட்டமொன்று முன்னெடுக்கப்படுகிறது.

இதனால், ஒரு தொழில் முனைவோருக்கு 6% மானிய வட்டியில் அதிகபட்சமாக 35 இலட்சம் ரூபாய் கடனுதவி வழங்கப்படுவதுடன், கடன் தொகையை அதிகபட்சமாக 100 இலட்சம் ரூபாயாக அதிகரிக்க எதிர்பார்க்கப்படுகிறது.

***இறப்பர் அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் சீ. சி முஹந்திரம்;***

"2024 ஆம் ஆண்டில் மொனராகலை, அம்பாறை, பதுளை பிரதேசங்களில் பாரம்பரியமாக இறப்பர் பயிரிடப்படாத பிரதேசங்களில் இறப்பர் செய்கையை விரிவுபடுத்தும் விசேட வேலைத்திட்டமாக 115 ஹெக்டேயரில் புதிதாக இறப்பர் செய்கையை மேற்கொள்ள இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம் திட்டமிட்டுள்ளது. அதற்காக 18 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த புதிய இறப்பர் செய்கையின் ஊடாக உள்ளூர்ஈறப்பர் உற்பத்தியை 86,825 கிலோவினால் அதிகரிக்க எதிர்பார்க்கப்படுகிறது".

***கறுவா அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் எம். எம். ஜே.கே லிந்தர;***

"கறுவா பயிர்ச்செய்கையை மேம்படுத்துவதற்காக கறுவா அபிவிருத்தி திணைக்களம் அண்மையில் ஸ்தாபிக்கப்பட்டது. இது 2023 வரவு செலவுத் திட்ட முன்மொழிவாக ஆரம்பிக்கப்பட்டது.

அதன் கீழ், சர்வதேசச் சந்தையில் இலங்கை கறுவா நாமத்தை பிரபலப்படுத்தல் விளம்பரப்படுத்துதல் ஆகியவற்றின் முதன்மை நோக்கத்துடன், காலி பின்னதுவ அதிவேக நெடுஞ்சாலை நுழைவாயிலுக்கு அருகில் இதன் தலைமையகம் நிறுவப்பட்டுள்ளது. கறுவா ஏற்றுமதியாளர், உற்பத்தியாளர், தொழிற்துறையுடன் தொடர்புடைய தரப்பினர் இந்த திட்டத்தின் ஊடாக நன்மை அடைவர்".

***ஏற்றுமதி விவசாயத்துறைப் பணிப்பாளர் (அபிவிருத்தி) ஆர். கே.டபிள்யூ. ரன்கொத்துகும்புர;***

"மத்திய, சப்ரகமுவ, மேல், தென், ஊவா, வடமேல், வடமத்திய மாகாணங்களிலும், கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்திலும் உற்பத்தி மற்றும் ஏற்றுமதித் திறனை அதிகரிக்கும் நோக்குடன் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தினால் பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

ஏற்றுமதி விவசாயப் பொருட்களின் தரத்தைப் பாதுகாத்து அதிக அந்நியச் செலாவணியைப் பெறும் நோக்குடன் இந்தத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்.

இதன் கீழ் கறுவா, மிளகு, கோப்பி, கொக்கோ, சாதிக்காய், கிராம்பு, ஏலக்காய், மஞ்சள், இஞ்சி, வெற்றிலை, பாக்கு, குடம்புளி உள்ளிட்ட 15 வகையான பயிர்கள் பயிரிடப்படுகின்றன.

ஏற்றுமதி விவசாயப் பயிற்செய்கைகளுக்குத் தேவையான புதிய தொழில்நுட்ப அறிவை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2024 இல் இதுவரை 1500 விவசாயப் பயிற்சித் திட்டங்களை முன்னெடுத்துள்ளோம்."

**ஜனாதிபதி ஊடகப் பிரிவு**

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 ஜூலை 17 புதன்கிழமை

தினகரன்
THINAKARAN
තිනකරන්



தொழுகை நேரம்
சுபஹ் - 04.39
லுஹர் - 12.17
அஸர் - 03.44
மஃரிப் - 06.32
இஷா - 07.48

இன்றைய சுபதினம்
குரோதி வருடம் ஆடி 01
ராகுகாலம் : பகல் : 12.00 - 1.30வரை
சுபநேரம் : மாலை : 4.30 - 6.45வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

# அடுக்குமாடிகளில் வசிக்கும் 50,000 பேருக்கு 'ரன்தொர உறுமய உறுதி

## ஜனாதிபதி தலைமையில் இன்று வைபவம்

கொழும்பு நகரில் அடுக்குமாடி குடியிருப்பில் வசிக்கும் குறைந்த வருமானம் பெறும் 50,000 குடும்பங்களுக்கு உரிமைப்பத்திரம் வழங்கும் "ரன்தொர உறுமய" நிகழ்ச்சித் திட்டம் இன்று (17) பிற்பகல் 3.00 மணிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இதன் முதற்கட்டமாக 1,117 "ரன்தொர உறுமய" உரிமைப்பத்திரங்கள் வழங்கப்படவுள்ளதாக வீடமைப்பு, நகர அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க குறிப்பிட்டார்.

நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழுள்ள 937 அடுக்குமாடி குடியிருப்புகளுக்கும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் 180 அடுக்குமாடி குடியிருப்புகளுக்குமே இந்த உறுதிகள் வழங்கப்படவுள்ளன.



இதன்படி, நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான மிஹிந்து செத்புர, சிறிசர உயன, மெட்ரோ வீட்டுத் தொகுதிகள் மற்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் உள்ள 31 அடுக்குமாடி குடியிருப்புகளில் வசிப்பவர்களுக்கு இந்த " ரன்தொர உறுமய" உரிமைப் பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் 2024 வரவு செலவுத் திட்ட முன்மொழிவின்படி, 20 இலட்சம் பேருக்கு காணி உரிமையை வழங்கும் "ரன்தொர உறுமய" பத்திரப்பதிவுத் திட்டத்தின் மற்றுமொரு கட்டமாக இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. கொழும்பில் உள்ள குறைந்த வருமானம் பெறும் அடுக்குமாடி குடியிருப்பில் வசிக்கும் அரை மில்லியன் குடும்பங்கள் இந்த "ரன்தொர உறுமய" உரித்துரிமை உறுதிகளைப் பெறவுள்ளதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க குறிப்பிட்டார்.

# நீதிமன்றம் தடை விதித்தால் தவிர,தேர்தல் நிறுத்தப்படாது

## தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு



(லோரன்ஸ் செல்வநாயகம்)

நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பித்தாலேயன்றி வேறு எந்த காரணத்துக்காகவும் தேர்தல் நிறுத்தப்படமாட்டாது என, தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆர். எம். ஏ.எல் ரத்நாயக்க தெரிவித்தார்.

உச்ச நீதிமன்றத்தை மீறி எதனையும் செய்ய முடியாது என்பதை சுட்டிக்காட்டிய அவர், நீதிமன்றத்தின் தடையுத்தரவு அன்றி வேறு எதுவும் தேர்தலை நடத்துவதற்கு தடையாக அமையாது என்றும் அவர் தெரிவித்தார்.

தேர்தல் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டின் போது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

06

# மைத்திரிக்கு எதிரான தயாசிறியின் மனு 23 இல், விசாரணைக்கு எடுக்க உத்தரவு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேக்கர அக்கட்சியின் முன்னாள் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்டோருக்கு எதிராக தாக்கல் செய்துள்ள இரண்டு முறைப்பாட்டு மனுக்களை, எதிர்வரும் (23) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுமாறு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக தயாசிறி ஜயசேகர பதவி வகித்தபோது,

06

## நோயாளர்பாதுகாப்பு, நல்வாழ்வு உறுதி

# தெற்காசிய பிராந்திய முதலாவது சாசனத்தின் வரைபுக்கு அனுமதி

நோயாளரின் பாதுகாப்பு, நல்வாழ்வை உறுதிப்படுத்தும் சாசனத்தின் இறுதி வரைபுக்கு சுகாதாரம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு அண்மையில் (09) அனுமதி வழங்கியுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் மயந்த திசாநாயக்க தலைமையில் இக்குழு அண்மையில் பாராளுமன்ற த்தில் கூடிய போதே இந்த அனுமதி வழங்கப்பட்டது.



சாசனத்தின் இறுதி வரைபு சுகாதாரம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் நியமிக்கப்பட்ட உப குழுவின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி உபுல் கலப்பத்தியினால் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன மற்றும் சுகாதாரம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் மயந்த திசாநாயக்க ஆகியோருக்கு கையளிக்கப்பட்டது.

சுகாதாரம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் உப குழு மற்றும் அதன் நிபுணர்கள் குழுவினால் உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ்,இந்த வரைபு தயாரிக்கப்பட்டுள்ளது.இதற்கமைய, நோயாளரின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை உறுதிப்படுத்துவதற்குத் தயாரிக்கப்பட்ட தெற்காசியப் பிராந்தியத்தில் முதலாவது சாசனம் இதுவென கருதப்படுகிறது.

# போலந்து நாட்டுக்கான இலங்கையின் தூதுவராக பிரியங்கிகா பொறுப்பேற்பு

போலந்து குடியரசின் இலங்கைக்கான தூதுவராக நியமிக்கப்பட்டு பல்கேரியா குடியரசின் ஒரே நேரத்தில் அங்கீகாரம் பெற்ற பிரியங்கிகா தர்மசேன, கடந்த (10) வார்சாவிலுள்ள இலங்கை தூதரகத்தில் கடமைகளை பொறுப்பேற்றார். கடமைகளைப் பொறுப்பேற்றதைத் தொடர்ந்து தூதரக ஊழியர்களிடம் உரையாற்றினார்.

தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள பிரியங்கிகா தர்மசேன, இலங்கை வெளிவிவகார சேவையில் 26 வருடங்கள் சேவையாற்றிய ஒரு தொழில் இராஜதந்திரி என்பதுடன், வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரகங்கள் மற்றும் வெளிவிவகார அமைச்சின் இக்காலப்பகுதியில் அவர் பல பதவிகளை வகித்துள்ளார். வார்சாவில் நியமனம் செய்யப்படுவதற்கு முன்னதாகவே தூதுவர் தர்மசேனா வெளிவிவகார அமைச்சின் தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு சங்கத்தின் (SAARC) பிரிவின் பணிப்பாளர் நாயகமாக பணியாற்றினார்.



06

# எட்வோகேட் நிறுவனத்தின் விசேட விழிப்புணர்வு கருத்தரங்கு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

அரச நிறுவனங்களின் மறுசீரமைப்பானது நாட்டின் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகும் என எட்வோகேட் நிறுவனம் தெரிவித்துள்ளது.

நாட்டின் பொருளாதார நிதி நெருக்கடியில் அரச நிறுவனங்கள் நாட்டின் நிதி தொடர்பில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதை மறுக்க முடியாது என்றும், இதற்கிணங்க அரச நிறுவனங்களை விரைவாக மறுசீரமைப்பது பொருளாதார ரீதியில் விவேகமான செயற்பாடு என்றும் அந்நிறுவனம் சுட்டிக் காட்டியுள்ளது.

அந்த வகையில் அரச நிறுவனங்களின் மறு சீரமைப்பு செயற்பாடுகள் அவசரமாக முன்னெடுக்கப்பட வேண்டியவை என்பது தொடர்பில், மேலும் விழிப்புணர்வையும் விவாதத்தையும் ஏற்படுத்துவதற்கான நிகழ்வொன்றை அந்த நிறுவனம் இன்றைய தினம் (17) ஏற்பாடு செய்துள்ளது.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இன்று நடைபெறவுள்ள இந்நிகழ்வில் சிறப்பு பேச்சாளர்களாக மேற்படி நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி தனநாத் பெர்னாண்டோ, சிரேஷ்ட ஆய்வாளர் ரெஹானா தௌபீக், நிதி தொடர்பான பத்திரிகையாளர் சிஹார் அனீஸ் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

06

# இந்தியாவின் புதிய வெளியுறவு செயலராக விக்ரம் மிஸ்ரி நியமனம்

இந்தியாவின் புதிய வெளியுறவு செயலாளராக விக்ரம் மிஸ்ரி நியமிக்கப்பட்டுள்ளார்.

சீனா மற்றும் தேசிய பாதுகாப்பு விவகாரங்களில் நிபுணராக கருதப்படும் இவர் தனது கடமையை நேற்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

வெளியுறவுத் துறையின் செயலாளராக இருந்த வினய் குவாத்ரா கடந்த மார்ச் மாதத்துடன் ஓய்வு பெற இருந்த போதும் அவருக்கு ஜூலை 14 ஆம் திகதி வரை பணி நீட்டிப்பு வழங்கப்பட்டது.

வினய் குவாத்ரா நேற்று முன்தினம் ஓய்வு பெற்றதையடுத்து புதிய வெளியுறவு செயலாளராக விக்ரம் மிஸ்ரி நேற்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

06

SRI LANKA EXPORT DEVELOPMENT BOARD
ශ්‍රී ලංකා අපනයන සංවර්ධන මණ්ඩලය
இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை
MINISTRY OF INVESTMENT PROMOTION

சனாதிபதி ஏற்றுமதி விருதுகள் 2023/24

**சனாதிபதி ஏற்றுமதி விருதுகளானது (PEA)** நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கும் ஏற்றுமதி துறைக்கும் தமது சிறந்த பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில் ஏற்றுமதியாளர்களுக்கு இலங்கையின் அதிமேதகு சனாதிபதியினால் வழங்கப்படும் மிக உயர்ந்த மற்றும் மிக மதிப்பு மிக்க விருதாகும்.

**2023/24 நிதி ஆண்டுக்கான சனாதிபதி ஏற்றுமதி விருதுக்கு** தேர்வு செய்யப்படுவதற்காக இலங்கை ஏற்றுமதியாளர்களிடம் இருந்து **இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் (EDB)** விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சனாதிபதி ஏற்றுமதி விருது வெற்றியாளர்கள் பின்வரும் பிரிவுகளில் தெரிவு செய்யப்படுவார்கள்.

**A. அனைத்துமடங்கிய விருதுகள்**

பின்வருமாறு 2023/24 நிதியாண்டுக்காக இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட சிறந்த ஏற்றுமதி நிறுவனங்களுக்கு பதினான்கு (14) அனைத்துமடங்கிய விருதுகள் வழங்கப்படவுள்ளன.

1. வருடத்திற்கான ஏற்றுமதியாளர்.
2. வருடத்திற்கான நிகர அந்நியச்செலாவணி ஈட்டுநர்
3. வருடத்திற்கான பூகோளரீதியாக பாரியளவில் வியாபித்துள்ள வர்த்தக நாமம்.
4. வருடத்திற்கான சந்தை பல்வகைப்படுத்தப்பட்ட ஏற்றுமதியாளர்.
5. பல்வகை உற்பத்தியில் சிறந்த ஏற்றுமதியாளர்.
6. வருடத்திற்கான சிறந்த பெறுமதி-சேர்க்கப்பட்ட ஏற்றுமதியாளர்.
7. ஏற்றுமதிகளில் நிலைபெறுதகு அபிவிருத்திக்கான பங்களிப்பாளர்.
8. வருடத்திற்கான புத்தாக்க ஏற்றுமதி உற்பத்தி
9. வருடத்திற்கான புத்தாக்க ஏற்றுமதி சேவை
10. ஏற்றுமதி வழங்கல் சங்கிலிக்காக பிராந்தியங்களின் பங்களிப்பாளர்
11. வளர்ச்சியடைந்து வரும் சந்தைகளில் சிறந்த செயற்பாட்டு ஏற்றுமதியாளர்.
12. வருடத்திற்கான பெண் ஏற்றுமதியாளர்.
13. வருடத்திற்கான வளர்ந்துவரும் ஏற்றுமதியாளர்.
14. வருடத்திற்கான சிறந்த SME ஏற்றுமதியாளர்.

**B. உற்பத்தி / சேவை துறை விருதுகள்**

இலங்கையில் ஏற்றுமதித் துறைக்கு தமது பங்களிப்பை அங்கீகரிப்பதற்குத் தனிப்பட்ட ஏற்றுமதி நிறுவனங்களுக்கு 2023/24 ஒவ்வொரு நிதியாண்டுக்காகவும் கீழுள்ள பிரிவுகளில் ஐம்பத்தொரு (51) உற்பத்தி/ சேவை துறைகளுக்காக "சிறந்த ஏற்றுமதி விருது" வழங்கப்படும்.

1. தொழில்துறை உற்பத்திகள்
2. விவசாய மற்றும் மீன்பிடி உற்பத்திகள்
3. ஏற்றுமதி சேவைகள்

**C. தகுதிச் சான்றிதழ்கள்**

சனாதிபதி ஏற்றுமதி விருது ஆண்டில் (2023/24) ஒட்டுமொத்த ஏற்றுமதிகள் மற்றும் விண்ணப்பதாரர் நிறுவனங்களின் செயல்திறனில் அந்தத் துறைகளின் பங்களிப்பை கருத்தில்கொண்டு சனாதிபதி ஏற்றுமதி விருது நடுவர்கள் குழுவால் அங்கீகரிக்கப்பட்டவாறு தகுதியுடைய துறைகளுக்காக தகுதிச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை**

விண்ணப்ப நிறுவனங்கள் ஒன்லைனில் விருதுகளுக்காக விண்ணப்பிப்பது அவசியமாகும். ஒன்லைனில் விருதுகளுக்காக விண்ணப்பித்த பின், **2024 ஒகஸ்ட் 15 அல்லது அதற்கு முன்னர் ஏற்றுமதி அபிவிருத்தி சபை, தலைவர்/ தலைமை நிறைவேற்று அதிகாரிக்கு** அனைத்து தொடர்புடைய ஆவணங்களுடனும் முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தில் அச்சிடப்பட்ட பிரதியை சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பக் கட்டணம் ஒன்றாக நிறுவனம் ஒன்றிடம் **25,000 ரூபா** அறவிடப்படும்.

**வழிகாட்டல்கள் மற்றும் மதிப்பீட்டு** அளவுகோலை ஏற்றுமதி அபிவிருத்தி சபை, **சந்தை அபிவிருத்தி பிரிவில்** இருந்து பெற முடியம் அல்லது **"Announcements"** இன் கீழ் www.srilankabusiness.com என்ற ஏற்றுமதி அபிவிருத்தி சபை இணையதளத்தில் இருந்து தரவிறக்கம் செய்ய முடியும்.

**தொடர்பு கொள்க:** சவும்யா கன்னன்கர - 011-2300721
அப்சரா அரம்பத் - 011-2300722 அல்லது 011-2300705-11, நீடிப்பு: 271
மனுக்க பெரேரா - 011-2300722 அல்லது 011-2300705-11, நீடிப்பு: 267

**மின்னஞ்சல்:** awards@edb.gov.lk/saumya@edb.gov.lk/apsara@edb.gov.lk/manuka@edb.gov.lk

**தலைவர்/ தலைமை நிறைவேற்று அதிகாரி**
**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை**
**இல. 42, நவம் மாவத்தை, கொழும்பு 02**
**தொ.: 0112300705 தொலைநகல்: 0112300715**
**www.srilankabusiness.com**

# மணமக்கள் பயணித்த வாகனம் கொள்ளுப்பிட்டியில் விபத்து

(லோரன்ஸ் செல்வநாயகம்)

கொழும்பு கொள்ளுப்பிட்டி பகுதியில் நேற்று மணமக்கள் பயணித்த காரொன்று விபத்துக்குள்ளானதில் மணமக்கள் உட்பட ஐந்து பேர் காயங்களுக்குள்ளாகியதாக பொலிஸார் தெரிவித்தனர். நேற்றைய தினம் காலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளதுடன் மேற்படி மணமக்கள் பயணித்த காருக்கு முன்பாக, சுமார் 15 வாகனங்கள் பயணித்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த வாகனங்கள் பம்பலப்பிட்டியிலிருந்து கொள்ளுப்பிட்டி நோக்கி பயணித்த போது மணமக்கள் பயணித்த காரில் திடீரென 'ப்ரேக்' செயலிழந்ததால் இந்த விபத்து ஏற்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். இவ்விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் ஒருவரும் காயமடைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

அறிவித்தல்

ஹஜ் — 2024

ஆலோசனைகள் / முறைப்பாடுகள்

ஹஜ் - உம்ரா கமிட்டி
முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட ஹஜ் முகவர்களூடாக 2024ஆம் ஆண்டு ஹஜ் கடமைகளை மேற்கொண்டவர்கள் தாங்கள் பயணித்த முகவர்கள் தொடர்பான ஆலோசனைகள், கருத்துக்கள் மற்றும் முறைப்பாடுகளை தகுந்த ஆதாரங்களுடன் நேரடியாக, பதிவுத் தபால் மூலமாக அல்லது மின்னஞ்சல் மூலமாக "பணிப்பாளர்" முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம், இலக்கம் 180, டீ.பி.ஜாயா மாவத்தை, கொழும்பு 10 என்ற முகவரிக்கு 2024.07.31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். முறைப்பாட்டுப் பிரதிகளை தலைவர், ஹஜ் மற்றும் உம்ரா குழுவுக்கும் அனுப்பவும்.

**பணிப்பாளர்**
**முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்**

**தலைவர்**
**ஹஜ்-உம்ரா கமிட்டி**

180, டீ.பி.ஜாயா மாவத்தை,கொழும்பு 10
Email: director@muslimaffairs.gov.lk
chairmanhajj@gmail.com

தினகரன்
THINAKARAN
35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் ஆடி மாதம் 01ஆம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 முஹர்ரம் பிறை 10

**குறள் தரும் சிந்தனை**



சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி

ஒரு பக்கம் சாய்ந்து விடாமல் நாணயமான தாரசு முள் போல இருந்து நியாயம் கூறுவதுதான் உண்மையான நடுவுநிலைமை என்பதற்கு அழகாகும்.

# மலையக மக்களின் மேம்பாட்டில் அதிக அக்கறை கொண்ட தலைவர்

இலங்கை பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கு உட்பட்டிருந்த போது இங்கு அமைக்கப்பட்ட பெருந்தோட்டங்களில் பணியாற்றுவதற்காக இந்திய வம்சாவளி மக்கள் அழைத்து வரப்பட்டனர். அந்த மக்கள் அழைத்து வரப்பட்டு சுமார் இரு நூறு வருடங்களாகியுள்ளன. அந்த மக்களின் சந்ததியினர் இன்றும் அடிப்படை வசதிகள் அற்ற லயன் காம்பறாக்களில் தங்கியுள்ளனர். அவர்களில் பெரும் பகுதியினருக்கு காணி உரிமை கிடைக்கப்பெறாத நிலைமை இன்னும் நீடித்து வருகிறது.

இந்நாட்டின் இந்திய வம்சாளி மக்களுக்கு பிரஜா உரிமை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள போதிலும், மலையகப் பெருந்தோட்ட பிரதேசங்களிலுள்ள மக்களில் பெரும் பகுதியினர் நாட்டின் ஏனைய மக்கள் பெற்றுக்கொள்ளும் உரிமைகளும் வசதிகளும் கிடைக்கப்பெறாத நிலை காணப்படவே செய்கிறது.

ஆனால் இந்நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்காகவும் அந்நியச் செலாவணியை ஈட்டித் தருவதற்காகவும் அயராது உழைத்துவரும் மக்கள் பிரிவினராக இவர்கள் விளங்குகின்றனர். இருந்தும் கூட அவர்களது வாழ்க்கைத்தரம் நாட்டின் ஏனைய மக்களின் மட்டத்திற்கு இன்னும் உயர்ந்ததாக இல்லை.

தற்போதைய பொருளாதார சூழலில் தங்களது நாட்சம்பளத்தை ரூ. 1700.00 ஆக அதிகரிக்குமாறு மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் கோரிக்கையை முன்வைத்து தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். இது தொடர்பில் பெருந்தோட்ட தொழிற்சங்கங்களும், தொழில் அமைச்சும் முதலாளிமார் சம்மேளனத்துடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டன. ஆனால் அந்த சம்பள உயர்வை வழங்க முதலாளிமார் சம்மேளனம் இணக்கம் தெரிவிக்காத சூழலே நீடித்து வருகின்றது.

கடந்த மே மாதம் முதலாம் திகதி நடைபெற்ற இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மே தினக் கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ரூ. 1700.00 சம்பள உயர்வு பெற்றுக் கொடுக்கப்படும். அதற்கான வர்த்தமானியும் வெளியிடப்பட்டுள்ளது' என்று அறிவித்தார்.

அண்மைக்கால வரலாற்றில் உலக தொழிலாளர் தினத்தில் தொழிலாளர்களின் சம்பள உயர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கான வர்த்தமானி அறிவித்தல் இலங்கையில் வெளியிடப்பட்டது இதுவே முதற் தடவையாகும். அந்த வர்த்தமானியுடன் மாத்திரம் நின்றுவிடாமல் அதே மாதம் பிற்பகுதியில் மற்றொரு வர்த்தமானி அறிவித்தலையும் வெளியிட்டு பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ரூ. 1700.00 நாட்சம்பளம் வழங்கப்பட வேண்டும் என்பதும் உறுதிப்படுத்தப்பட்டது. இதன் ஊடாக மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளார்கள் என உறுதிபடக் கூறலாம்.

மேலும் மக்கள் பெருந்தோட்ட யாக்கம் (ஜே.ஈ.டி.பி), அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் (எஸ்.பி.சி) என்பவற்றின் தொழிலாளர்கள் முகம்கொடுத்துள்ள ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கவென ஐயாயிரம் மில்லியன் ரூபாவும், பெருந்தோட்ட மக்களின் காணிப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கவென நாலாயிரம் மில்லியன் ரூபாவும் மலையகத்தின் கல்வி மற்றும் சுகாதாரத்துறை மேம்பாட்டுக்கென சுமார் இரண்டாயிரம் மில்லியன் ரூபாவும் என்றபடி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஏற்பாட்டில் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மலையகப் பெருந்தோட்ட மக்களின் மேம்பாட்டில் ஜனாதிபதி விஷேட கவனம் செலுத்தியிருப்பதன் வெளிப்பாடே இந்த ஒதுக்கீடுகளாகும்.

இவ்வாறான சூழலில் கண்டி பொது வர்த்தக நிலையத்திற்கு முன்பாக நடைபெற்ற வைபவமொன்றில் உரையாற்றிய நீர் வழங்கல் மற்றும், தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஜீவன் தொண்டமான், 'மலையகத் தமிழன் என்பது எனது அடையாளம். நம்மைப் பொறுத்த வரை எமக்கு அடையாளப் பிரச்சினை இருக்கிறது. அதற்கு கட்டாயம் தீர்வு கிடைக்கப் பெற்றாக வேண்டும். அதற்காக நாட்டின் அடுத்த ஜனாதிபதியாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவி வகிக்க வேண்டும்' என்றுள்ளார்.

நாட்டினதும் மக்களினதும் தேவைகளுக்கும் எதிர்பார்ப்புக்களுக்கும் அமைய வேலைத்திட்டங்களை முன்னெடுப்பவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்பதற்கு அமைச்சர் ஜீவனின் இக்கூற்று நல்ல எடுத்துக்காட்டாகும். அவர் இந்நாட்டு அரசியலில் பரந்த அனுபவத்தையும் ஆழமான அறிவையும் பெற்றிருப்பதன் வெளிப்பாடாகவே பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளான நாட்டை குறுகிய காலப்பகுதிக்குள் மீட்டெடுத்து மறுமலர்ச்சிப் பாதையில் இட்டுச் சென்றுள்ளார் எனலாம்.

ஆகவே நாட்டினதும் மக்களினதும் நலன்களுக்கு உண்மையாகவே முன்னுரிமை அளித்து செயற்படும் ஜனாதிபதி மலையகப் பெருந்தோட்ட மக்களின் தேவைகளையும் எதிர்பார்ப்புக்களையும் நிச்சயம் நிறைவேற்றி வைப்பார் என்ற நம்பிக்கை பரவலாகக் காணப்படுகிறது. அதற்கு அமைச்சர் ஜீவனின் கூற்றும் சிறந்த ஆதாரமாகும்.

editor.tkn@lakehouse.lk

# காலநிலை மாற்றத்தினால் தொழில் முயற்சியாளர்கள் எதிர்கொள்ளும் தாக்கங்கள்

காலநிலை மாற்றத்தால் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் எதிர்கொள்ளும் தாக்கங்கள் தொடர்பிலும், அதிலிருந்து அவர்களைப் பாதுகாக்கும் பொருட்டு அறிவியல் தெளிவூட்டல்களை வழங்குவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்ட செயலமர்வு புத்தளம் பிரதேசத்திலுள்ள கல்பிட்டி மற்றும் நாவற்காடு பிரதேசங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் முழுமையான நெறிப்படுத்தலில் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி திட்டத்தின் பங்களிப்பில் இந்தச் செயலமர்வு நடைபெற்றது.

'பெண்கள் தலைமையிலான சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களில் பருவநிலை மாற்றத்தின் தாக்கம் மற்றும் தணிப்பு உத்திகளுக்கான காலநிலை நிதி வாய்ப்புக்கள்' என்ற தொனிப்பொருளில் இந்த அமர்வுகள் நடைபெற்றன.

தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் மேற்படி செயலமர்வு முதலாவதாக கல்பிட்டி பிரதேச செயலகக் கேட்பார் கூடத்தில் பிரதேச செயலாளர் சமில விஜயசிங்கவின் உரையுடன் ஆரம்பமானது.



அவர் அங்கு கருத்துத் தெரிவிக்கையில், "காலநிலை மாற்றமானது தொழில் முயற்சியாளர்களை பாதிப்பது தொடர்பில் அறிவூட்டல் மிக முக்கியமானது. கொழும்பு பல்கலைக்கழகம் இவ்வாறானதொரு முயற்சியினை முன்னெடுத்தமை பாராட்டுக்குரியமை. இதனை யதார்த்தத்தின் ஊடாக கண்டு கொள்ளும் பிரதேச =மான கல்பிட்டியினை தெரிவு செய்தமையானது வரவேற்புக்குரியது" எனக் குறிப்பிட்டார்.



இந்த நிகழ்விற்கு கொழும்பு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் யு.கே.பியதாச, வானிலை அவதான நிலையத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் சரத் பிரேமலால், சுற்றாடல் அமைச்சின் காலநிலை மாற்றம் தொடர்பிலான ஆலோசனைக் குழுவின் தலைவர் ரஞ்சித் புண்ணியவர்தன, சுற்றாடல் தொடர்பிலான ஆய்வாளர் இந்தூசன் சாந்த குமாரன் மற்றும் நிகழ்ச்சிகளின் இணைப்பாளர் பேராசிரியர் சாமினி கே.ஹேமச்சந்திர ஆகியோரும் சமுகமளித்திருந்தனர்.

குழு ரீதியான கலந்துரையாடல்களில் தற்போதைய தொழில் முயற்சியாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், அதனை காலநிலைய மாற்றத்தில் எவ்வாறு தணிப்பது என்பது பற்றிய கருத்துக்கள் பறிமாறப்பட்டதுடன், இது தொடர்பிலான செயற்பாடுகளை கொழும்பு பல்கலைக்கழகம் தயாரித்து உரிய தரப்பினருக்கு சமர்ப்பிக்கும் என்று அங்கு தெரிவிக்கப்பட்டது.

(தெஹிவளை - கல்கிசை விசேட நிருபர்)

# ஜம்மு காஷ்மீரில் தீவிரமடையும் பயங்கரவாதத் தாக்குதல்கள்!

## இந்திய இராணுவத்தினர் பலர் பலி!

இந்திய எல்லையில் உள்ள ஜம்மு காஷ்மீரில் கடந்த 32 மாதங்களில் பயங்கரவாதிகளின் தொடர்ச்சியான தாக்குதல்களில் இந்திய இராணுவ வீரர்கள் 48 பேர் மரணம் அடைந்துள்ளனர். கடந்த ஆண்டு ஏப்ரல் மே மாதங்களில் பயங்கரவாதிகள் தாக்குதல்கள் நடத்தியதில் 10 இராணுவ வீரர்கள் மரணம் அடைந்தனர். காஷ்மீரின் தோடாவில் நேற்றுமுன்தினம் இரவு பயங்கரவாதிகளுடனான மோதலில் 4 வீரர்கள் மரணத்தைத் தழுவி இருக்கின்றனர்.

ஜம்மு காஷ்மீரில் சிறிது காலம் அமைதி திரும்பியிருந்தது. ஆனால் அண்மைக் காலமாக தொடர்ச்சியாக ஜம்மு காஷ்மீரில் பயங்கரவாதிகள் தொடர்ச்சியாக தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். கடந்த 78 நாட்களில் 10 இற்கும் மேற்பட்ட தாக்குதல்களை பயங்கரவாதிகள் மேற்கொண்டிருக்கின்றனர்.

இதேவேளை ஜம்மு காஷ்மீரில் பயங்கரவாதிகளின் தாக்குதல்களில் இராணுவ வீரர்கள் தொடர்ந்து மரணம் அடைந்து வரும் சம்பவங்களுக்கு ஆளும் பா.ஜ.க அரசுதான் பொறுப்பேற்க வேண்டும் என லோக்சபா எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி வலியுறுத்தி உள்ளார்.



"பா.ஜ.க அரசின் தவறான கொள்கைகளால்தான் ஜம்மு காஷ்மீரில் நமது இராணுவ வீரர்கள் தொடர்ந்து மரணம் அடைவதாகவும் ராகுல் காந்தி குற்றம் சாட்டி உள்ளார்.

ஜம்மு காஷ்மீரில் கடந்த சில மாதங்களாக தொடர்ந்து பயங்கரவாதிகள் தாக்குதல்கள் நடத்தி வருகின்றனர். இந்த தாக்குதல்களில் இராணுவ வீரர்களின் மரணங்கள் துயரம் தருகின்றன. வீரமரணம் அடைந்த இராணுவ வீரர்களுக்கு ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஜம்மு காஷ்மீரில் தொடர்ந்து பயங்கரவாத தாக்குதல்கள் நீடித்து வருவது என்பது அம்மாநிலத்தின் நிலைமை மோசமாக இருப்பதையே வெளிப்படுத்துகிறது. பாஜக அரசின் தவறான கொள்கைகளால்தான் நமது இராணுவ வீரர்கள் வீரமரணம் அடைந்து வருகின்றனர் என்று ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

ஜம்மு காஷ்மீர் இராணுவ வீரர்களின் மரணங்களுக்கு மத்திய அரசுதான் பொறுப்பேற்க வேண்டும் என்பதுதான் தேசப்பற்றுள்ள ஒவ்வொரு இந்தியரின் வேண்டுகோள். நமது இராணுவத்துக்கும் இராணுவ வீரர்களுக்கும் பேரிழப்பை ஏற்படுத்தக் கூடியவர்கள் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும். ஒட்டுமொத்த தேசமும் பயங்கரவாதத்துக்கு எதிராக ஒருங்கிணைந்து நிற்க வேண்டும் என்று ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

# விலங்குகளிலிருந்து மனிதருக்கு தொற்றும் ஆபத்தான வியாதிகள்!

## முழுமையான பாதுகாப்பு பெறுவது அவசியம்

ஒரு நோய் அல்லது தொற்று இயற்கையாக விலங்குகளிடம் (முள்ளந்தாண்டுள்ள விலங்குகள்) இருந்து மனிதனுக்கு தொற்றுதலடையும் எனின் அது 'விலங்குகளிடம் இருந்து மனிதனுக்கு தொற்றுதலடையும் நோய்' எனப்படும்.

மனிதன் விலங்குகளுடன் ஒன்றித்து வாழ வேண்டிய சூழல் தவிர்க்க முடியாத ஒன்றாக காணப்படுகின்ற நிலையில், மனிதனில் 60 வீதத்திற்கு மேற்பட்ட நோய்கள் விலங்குகளிடம் இருந்து தொற்றுதலடையும் நோயாக்கிகள் மூலமாகவே உண்டாகின்றன. இவ்வாறான நோயாக்கி நுண்ணுயிர்களுக்கு உதாரணங்களாக பக்டீரியா, வைரஸ், பங்கசு, புரட்டோசோவா(ஒருவகை தனிக்கல நுண்ணுயிர்), ஒட்டுண்ணிப்புழுக்கள் முதலியவற்றைக் குறிப்பிடலாம்.



இவ்வாறான நுண்ணுயிர்களின் பரம்பல், தொற்றுகை, தோன்றல் மற்றும் மீளத்தோன்றல் (Emergence and ReEmergence) நோயாக்கும் விதம் என்பன காலநிலை மாற்றம், நகரமயமாக்கல், விலங்குகளின் குடியேற்றற்றம் ஏனைய மனித செயற்பாடுகள் என்பவற்றில் தங்கியுள்ளன. ஒவ்வொரு வருடமும் உலகில் 2.4 பில்லியன் மக்கள் இவ்வாறான தொற்றுநோய்களுக்கு இலக்காவதோடு, 2.7 மில்லவின் மக்கள் உயிரிழக்கின்றனர்.


வறுமை, பூரண சுகாதாரமற்ற அல்லது முறையான பராமரிப்பு அற்ற கால்நடை வளர்ப்பு மற்றும் அவற்றின் மூலமான உணவு உற்பத்தி போன்றன இவ்வாறான தொற்றுகள் மேலும் மனித உடலை ஆக்கிரமிக்க வழிகோலுகின்றன. இதனால் மக்களின் ஆரோக்கியம் மேலும் கேள்விக்குறியாவதோடு மட்டுமல்லாது, நாட்டின் உணவு உடற்பத்தி, போசாக்கையும் வெகுவாக பாதிக்கிறது.

புதிய நோய்த் தொற்று ஒன்று உருவாவதில் அல்லது தொற்று நோய் காரணி மேலும் வீரியம் அடைவதில் பின்வரும் 3 கூறுகள் பிரதான பங்கு வகிக்கின்றன. மனித செயற்பாடுகள், விலங்குகள், பறவைகள் என்பவையே அவையாகும்.

மனிதனுக்கு தொற்று ஏற்படுத்தும் நோய்க்காரணிகளில் 70 வீதத்திற்கும் மேற்பட்டவை வணவிலங்குகளில் இருந்து பரம்பலடைபவை ஆகும். உதாரணமாக இன்புளுவென்சா வைரஸ் நோயானது வனப்பறவைகளில் இருந்து அவற்றின் எச்சம் மூலமாக பண்ணைகளில் வளர்க்கப்படும் கோழிகளுக்கு தொற்றுதலை ஏற்படுத்துகின்றது. இது வனப்பறவைகளின் எச்சம், உமிழ்நீர் என்பவற்றின் மூலமாக பண்ணைக் கோழிகளுக்கு தொற்றுதலை ஏற்படுத்துகின்றது. எனவே இப்பண்ணைக்கோழிகளில் இருந்து அவற்றை(இறைச்சி,முட்டை)உணவாக உட்கொள்ளும் மனிதருக்கும் இந்நோய் இலகுவாக தொற்றுதல் அடையும்.



எம்.எம்.முகம்மட் அமஹர்
(பேராதனை பல்கலைக்கழக விலங்கு மருத்துவம் மற்றும் விஞ்ஞான பீட மாணவன்)



முறையான சுகாதார பராமரிப்பு இன்றி அறுவைக்குக் கொண்டு செல்லப்படும் கால்நடைகள் ஒட்டுண்ணிப்புழுக்கள் மற்றும் பக்டீரியாக்களுக்குரிய காவிகளாக செயற்படலாம். அதாவது, அவற்றின் இறைச்சி மற்றும் ஏனைய உடற் பாகங்களில் ஒட்டுண்ணி புழுக்களின் (Cestode And Nematode) இடைநிலைகள் காணப்படலாம். இவை முறையாக சமைக்கப்படாத இறைச்சியின் மூலமாக இலகுவாக மனித உடலை சென்றடைந்து நோய் நிலைமைகளை உண்டாக்கும்.

சமைக்கப்படாத அல்லது நான்கு சமைக்கப்படாத விலங்கு உணவுப்பொருட்கள் மூலமாக சிலவகை பக்டீரியாக்கள் இலகுவாக மனித குருதி சுற்றோட்டத்தை அடைந்து குருதி நஞ்சாதல் (septicemic) நிலைமையை ஏற்படுத்தும். இதனால் திடீர் மரணம் சம்பவிக்கலாம். உதாரணமாக நன்கு அவிக்காத முட்டை அல்லது சமைக்காத முட்டை அல்லது முறையாக சமைக்காத முட்டையிலிருந்து உற்பத்தி செய்யப்படும் உணவுப்பொருட்கள் மூலமாக பாக்டீரியாக்களின் தொற்றுக்கள் ஏற்படுகின்றன.

இலங்கையைப் பொறுத்தவரை கால்நடை சுகாதார உடற்பத்தித் திணைக்களம் இவ்வாறான விலங்குத்தொற்று நோய்களை அடையாளப்படுத்தும் மற்றும் கட்டுப்படுத்தும் முழு பொறுப்பையும் கொண்ட திணைக்களமாகும். இதன் கீழ் ஒவ்வொரு பிரதேசத்திற்கும் பொறுப்பான அரச கால்நடை வைத்திய அதிகாரிகள் ஒவ்வொரு பிரதேச செயலக எல்லைக்குள்ளும் விலங்குத்தொற்று நோய்களை கட்டுப்படுத்தல், அவற்றுக்கெதிரான தடுப்பூசி வழங்கல், கால்நடை சுகாதாரத்தை மேம்படுத்தல் போன்ற சேவைகளை மேற்கொள்வர்.எனவே பண்ணையாளர்கள் தமது பண்ணை விலங்குகள் மற்றும் கால்நடைகளை முறையாக கால்நடை வைத்திய அதிகாரி காரியாலயத்தில் பதிவு செய்வதன் மூலம் விலங்குகளில் இருந்து மனிதருக்கு தொற்றுதல் அடையும் நோய்களை இயன்றளவு கட்டுப்பாட்டிதற்குள் கொண்டுவர முடியும்.

ஜெஸ்மி எம்.மூஸா
பெரியநீலாவணை தினகரன் நிருபர்

# இலங்கை நிருவாக சேவைக்கு மூதூரில் தெரிவான முதல் பெண்

அண்மையில் நடைபெற்ற மட்டுப்படுத்தப்பட்ட இலங்கை நிருவாக சேவை போட்டிப் பரீட்சையின் மூலம் மூதூரில் முதல் பெண்ணாக இலங்கை நிருவாக சேவையில் சித்தியடைந்த றசீம் றொஸானாவை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் ஆனைச்சேனை சமூக அமைப்பின் தலைவர் எச்.நபீர் தலைமையில் ஆனைச்சேனை கல்வி அபிவிருத்தி மன்றத்தின் ஏற்பாட்டில் யங்லைன் விளையாட்டுக் கழகத்தின் அனுசரணையுடன் மூதூரில் நடைபெற்றது. றசீம் றொஸானா தனது ஆரம்பக்கல்வியை மூதூர் அறபா நகர் வித்தியாலயம், அல்ஹிதாயா மகாவித்தியாலயம், முஸ்லிம் மகளிர் கல்லூரி ஆகியவற்றில் கற்று உயர்கல்வியை திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்துக் கல்லூரியில் விஞ்ஞானப் பிரிவில் கற்றிருந்தார். அத்துடன் பொதுநிருவாகத்தில் இளமாணி பட்டத்தையும் பெற்றிருந்தார்.





அரச போட்டிப் பரீட்சையின் மூலம் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராக கடந்த 10 வருட காலம் சேவையாற்றிய நிலையில், இலங்கை நிருவாக சேவைக்கு அவர் தெரிவானார். அவர் பொன்னாடை அணிவித்து, நினைவுச் சின்னம் மற்றும் பாராட்டு பத்திரங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டார். இக் கௌரவிப்புவிழாவில்மூதூர்கிளிவெட்டி மகாவித்தியாலய பான்ட் வாத்திய மாணவர் குழுவினர் வரவேற்பு வழங்கினர்.

இந்நிகழ்வில் மூதூர் காதி நீதிமன்ற நீதிபதி ஜே.எம்.இக்பால், மூதூர் வலயக்கல்வி அலுவலக முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிருவாகம்) எஸ்.எஸ்.எம். தாரிக், மூதூர் சிங்கள மகா வித்தியாலய அதிபர் ஹரிசன் பியதாஸ, மூதூர் ஆசிரியர் வாண்மைவிருத்தி நிலைய இணைப்பாளர் எம்.எஸ்.வதூத் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

எஸ்.கஸ்ஸாலி
மூதூர் தினகரன் நிருபர்

# அமைச்சரவை முடிவுகள்

**01. இலங்கை சுதேச மருத்துவ தேசியக் கொள்கை (2024 – 2034)**

2023 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க ஆயுள்வேத (திருத்தச்) சட்டத்தின் திருத்தப்பட்ட 1961 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் நாட்டில் சுதேச மருத்துவ முறையை நடைமுறைப்படுத்தும் சட்ட ரீதியான சட்டகம் தயாரிக்கப்பட்டுள்ளது. புத்திஜீவிகளின் பரந்தளவான பங்கேற்பின் மூலம் தயாரிக்கப்பட்டுள்ள இலங்கையின் சுதேச மருத்துவ தேசியக் கொள்கை 2024 2034 இனை நடைமுறைப்படுத்துவதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரான ஜனாதிபதியினால் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**02. பட்டம் வழங்குகின்ற நிறுவனங்களுக்கு வெளிநாட்டு மாணவர்களை உள்ளீர்ப்பதற்கான வசதிகளை வழங்கல்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் 17 பல்கலைக்கழகங்களில் 5% வீதமான வெளிநாட்டு மாணவர்களுக்கு தற்போது ஆண்டுதோறும் இடஒதுக்கீடு வழங்கப்படுகின்றது. ஐக்கிய நாடுகள் சபையின் 193 உறுப்பு நாடுகளில் பல்கலைக்கழக அனுமதிக்காக பயன்படுத்தப்படும் குறைந்தபட்ச தகைமைகள் இலங்கைப் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25(அ) பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனங்கள் மூலம் நடாத்தப்படுகின்ற பட்டப்படிப்புக்காக உள்ளீர்த்துக் கொள்வதற்கான குறைந்தபட்ச தகைமையாகக் கருத்தில் கொள்வதற்கும், குறித்த தகைமைகள் மூலம் உள்ளடக்கப்படாத விதிவிலக்கான சந்தர்ப்பங்களுக்கு UK NARIC நிறுவனத்தின் மூலம் சான்றுப்படுத்திக் கொள்வதற்கும் கல்வி அமைச்சரின் யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம்.

**03. இலங்கை முதலீட்டு சபையால் அனுமதி வழங்கப்பட்டுள்ள வீடமைப்புக் கருத்திட்டத்திற்காக களனி, வெதமுல்ல பிரதேசத்தில் அமைந்துள்ள காணியை எச்.எம்.கே. புரொப்பர்டி டிவலொப்பேர்ஸ் (தனியார்) கம்பனிக்கு வழங்கல்**

இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான களனி, வெதமுல்ல பிரதேசத்தில் அமைந்துள்ள 12 ஏக்கர் காணியை எச்.எம்.கே. புரொப்பர்டி டிவலொப்பேர்ஸ் (தனியார்) கம்பனிக்கு வழங்குவதற்காக முதலீட்டு ஊக்குவிப்பு தொடர்பான அமைச்சரவை உபகுழுக் கூட்டத்தில் இதற்கு முன்னர் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. உத்தேச கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக அடையாளங் காணப்பட்டுள்ள 08 ஏக்கர் 02 றூட் 16.26 பேர்ச்சர்ஸ் காணியை பிரதம அரச விலை மதிப்பீட்டாளர் சமர்ப்பித்துள்ள சமகால மதிப்பீட்டின் பிரகாரம் குறித்த கம்பனிக்கு வழங்குவதற்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம்.



**04. களனி, முதுன்எல பிரதேசத்தில் அமைந்துள்ள காணியை Storight Logistics (Pvt) Ltd இற்கு குத்தகைக்கு வழங்கல்**

இலங்கை முதலீட்டு சபையின் அனுமதியுடன் விநியோக சேவைகள் மற்றும் களஞ்சிய வசதிகளுக்காக கொழும்புத் துறைமுகத்தை அண்டிய பகுதியில் அமைந்துள்ள காணியை வழங்குமாறு Storight Logistics (Pvt) Ltd இனால் விண்ணப்பமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அக்காணியை அரச பிரதம விலைமதிப்பீட்டாளரின் மதிப்பீட்டுக்கமைய Storight Logistics (Pvt) Ltd இற்கு 30 ஆண்டுகாலக் குத்தகைக்கு வழங்குவதற்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரினால் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம்.

**05. கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் வருகைப் பிரதேசத்தில் சுங்க நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் நாணயப் பரிமாற்று கருமபீடத்தை செயற்படுத்தல்**

2024.01.08 அன்று இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய, கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் வருகைப் பிரதேசத்தில் சுங்க நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் நாணயப் பரிமாற்று கருமபீடத்தை செயற்படுத்துவதற்காக வரையறுக்கப்பட்ட விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியால் மட்டுப்படுத்தப்பட்ட போட்டி விலைமுறி கோரப்பட்டுள்ளது. மூன்று (03) வருடங்களுக்கு கீழ்வரும் வகையிலான ஒப்பந்தங்களை வழங்குவதற்காக துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம்.

**06. வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் விமான சேவையில் தானியங்கி மூலம் உயர்தர ஆசன ஒதுக்கீடு செய்வதற்கான விலைமுறி வைக்கும் சேவைகள் மற்றும் அதுதொடர்பான துணைச் சேவைகளை வழங்குவதற்கான ஒப்பந்தம்**

தானியங்கி மூலம் உயர்தர ஆசன ஒதுக்கீடு செய்வதற்கான விலைமுறி வைக்கும் சேவைகள் மற்றும் அதுதொடர்பான துணைச் சேவைகளை வழங்குவதற்கு வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் விமான சேவையால் தற்போது Plusgrade முறைமை பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இச்சேவைகளை மேற்கொண்டு செல்வதற்காக சர்வதேசப் போட்டி முறையின் கீழ் விலைமுறி கோரப்பட்டுள்ளது. ஒப்பந்தத்தை Plusgrade Inc இற்கு ஒப்படைப்பதற்காக துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம்.

**07. கொடகம – ஹோமாகம வீதியின் அரைவாசி பூர்த்தி செய்யப்பட்டுள்ள 1 ஆம் பகுதி வேலைகளைப் முழுமையாக அபிவிருத்தி செய்து பூர்த்தி செய்வதற்காக சவுதி நிதியத்தின் நிதியை ஒதுக்கீடு செய்தல்**

திருகோணமலை மாவட்டத்தில் குறிஞ்சாக்கேணி பாலக்கட்டுமானம் செய்தல் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு சவுதி நிதி பயன்படுத்தப்பட்டுள்ளது. குறித்த கருத்திட்டத்தின் பெறுகைச் செயன்முறை பூர்த்தி செய்யப்பட்ட பின்னர், மேலும் 10.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கடன் மீதியாக எஞ்சியுள்ளது. 1 ஆம் பகுதியின் வேலைகளைப் பூர்த்தி செய்வதற்காக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம்.

**08. நானுஓயா புகையிரத நிலையத்தை நவீனமயப்படுத்தும் வேலைத்திட்டத்தைப் பூர்த்தி செய்தல்**

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் இலங்கை சுற்றுலா மேம்பாட்டுப் பணியகத்தின் நிதியைப் பயன்படுத்தி நானுஓயா புகையிரத நிலையத்தை நவீனமயப்படுத்தும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 2023.04.03 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்குத் தேவையான மேலதிக தொகையை இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மற்றும் இலங்கை சுற்றுலா மேம்பாட்டுப் பணியகத்தின் மூலம் பெற்றுக் கொள்வதற்கும் சுற்றுலா மற்றும் காணி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம்.

**09. தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் SMART Youth Exhibitions & Nights – 2024 நிகழ்ச்சித்திட்டத்தை நாடளாவிய ரீதியில் விரிவாக்கம் செய்தல்**

2019 ஆம் ஆண்டு தொடக்கம் இரண்டு வருடங்களாக உலகளாவிய ரீதியில் பரவிய கொவிட் நிலைமையின் முக்கிய பாதிப்புக்களாக பயணத்தடைகள், பரஸ்பர தொடர்புகள் இன்மை, தனிநபர் சந்திப்புக்களின்மை, மற்றும் குழுக்களாக ஒன்றுகூடுதல் போன்றன மட்டுப்படுத்தப்பட்டமையால், இளைஞர் சமுதாயம் மிகவும் அழுத்தங்களுக்கு உள்ளாக நேரிட்டது. அவர்கள் அவ்வாறான அழுத்தங்களுக்கு உள்ளாவதைத் தடுக்கும் வகையில் அவர்களுடைய பொழுதுபோக்கு, இரசனை மற்றும் உளநல ஆரோக்கியத்தை விருத்தி செய்வதற்கும், அவர்கள் ஒன்றிணைந்து செயலாற்றுவதற்கும் வாய்ப்புக்களை வழங்கும் நோக்கத்துடன் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை நடாளாவிய ரீதியில் நடாத்துவது உகந்ததெனக் கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, நாடளாவிய ரீதியில் SMART Youth Exhibitions & Nights – 2024 நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துவதற்காக விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம்.

# சிலாபம், முன்னேஸ்வரம் திருவிழா

## 23 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பம்

**(உடப்பு குறூப், கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்கள்)**

சிலாபம், முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகா சமேத முன்னைநாதசுவாமி தேவஸ்தானத்தின் ஆவணி மகோற்சவம் எதிர்வரும் 23 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளதாக ஆலயத்தின் பிரதம குருவும், தர்மகர்த்தாவுமான பிரம்மஸ்ரீ ச.பத்மநாப குருக்கள் தெரிவித்தார்.

மகோற்சவம் தொடர்பில் தெளிவுபடுத்தும் விஷேட ஊடகவியலாளர் சந்திப்பு (14) மாலை ஆலயத்தில் நடைபெற்ற போதே அவர் இவ்வாறு கூறினார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னேஸ்வரம் தேவஸ்தானம் இலங்கையிலுள்ள ஐந்து பெரும் சிவாலயங்களில் (பஞ்ச ஈஸ்வரங்களில்) ஒன்றாகும். முன்னேஸ்வரம் தேவஸ்தானத்தின் வருடாந்த மகோற்சவம் 23 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாவதுடன், தொடர்ந்து 28 தினங்கள் உற்சவங்கள் மற்றும் விஷேட பூஜைகள் உட்பட திருவிழாக்கள் நடைபெறுவது வழக்கமாகும். எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி மாலை 4.30 க்கு விநாயகர் உற்சவமும், 12 ஆம் திகதி 4.30 க்கு சுப்பிரமணிய உற்சவமும், 13 ஆம் திகதி 4.30 க்கு மஹா விஷ்ணு உற்சவமும், 14 ஆம் திகதி மாலை 3.30 க்கு தீ மிதிப்பு உற்சவமும் நடைபெறும்.

ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி மாலை 4.30 க்கு பிஷாடனர் உற்சவமும், 16 ஆம் திகதி மாலை 4.30 க்கு நடேசர் உற்சவமும், 17 ஆம் திகதி மாலை 3.30 க்கு வேட்டைத் திருவிழாவும், 18 ஆம் திகதி காலை 10 மணிக்கு தேர்த் திருவிழாவும், 19 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும்.



ஆகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி மாலை 04 மணிக்கு பூங்காவனம் சண்டேஸ்வரர் பூஜை வைரவர் மடை போன்ற நிகழ்வுடன் உற்சவம் இனிதே நிறைவு பெறும்.

திருவிழாவுக்கு பல்லாயிரக்கணக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அடியார்கள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. முன்னேஸ்வரம் ஆலயத்துக்கு வருகை தரும் பக்தர்களின் நலன் கருதி விஷேட உள்ளூர் பஸ் சேவைகளும் இலங்கை போக்குவரத்து சபை மற்றும் ரயில்வே திணைக்களமும் போக்குவரத்துக்காக ஒத்துழைப்புக்களை வழங்கவுள்ளன.

திருவிழாவுக்கு வருகை தரும் அடியார்களின் வாகனங்களை பாதுகாப்பாக நிறுத்தி வைப்பதற்கு விஷேடமாக வாகன தரிப்பிடமும் அமைக்கப்படவுள்ளதுடன், அடியார்களின் பாதுகாப்பு நலன் கருதி ஆலயத்தை சுற்றி பொலிஸாரும் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

சிலாபம் பிரதேச செயலகம், மாதம்பை பிரதேச சபை உட்பட அரச அலுவலகங்கள் ஒன்றிணைந்து இந்த உற்சவத்துக்கு வருகை தரும் பக்தர்களுக்கான சகல சேவைகளையும் வழங்குவதற்காக கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றனர்.

இங்கு வரும் அனைத்து அடியார்களும் இயற்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் பொலிதீன் மற்றும் பிளாஸ்டிக் என்பனவற்றின் பாவனைகளை தவிர்த்து இயற்கைக்கு மதிப்பளித்து செயற்பட வேண்டும். எனவே, இந்த திருவிழாவை சிறப்பாக நடத்தி முடிப்பதற்கு திருவிழாவுக்கு வருகை தரும் அடியார்கள் முழுமையான ஒத்துழைப்புகளை வழங்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

# ஒன்லைன் மூலம் கடன் பெற்று திருப்பிச் செலுத்தாதோருக்கு OnCredit நிறுவனம் வழக்கு

ஒன்லைன் மூலம் கடன் வழங்கும் நிறுவனங்களின் மூலம் கடனை பெற்று அதனைச் செலுத்தத் தவறிய நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த நபர்களுக்கு அழைப்பாணை விடுத்த கொழும்பு மேலதிக மாவட்ட நீதிபதி அருண விக்கிரமசிங்க, அவர்களை செப்டம்பர் 13 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகி விளக்கமளிக்குமாறு நேற்று உத்தரவிட்டார்.

கொழும்பு 07, ஒன் கிரடிட் ஒன்லைன்( OnCredit online) நிறுவனம், நாட்டின் பல்வேறு பகுதிகளில் வசிக்கும் பெரும் எண்ணிக்கையிலான நபர்களுக்கு எதிராக தாக்கல் செய்திருந்த வழக்குகளுக்கு நீதிபதி அழைப்பாணை அனுப்புமாறு பணித்தார். எவ்வித பாதுகாப்பு உத்தரவாதமும் வழங்காமல் கையடக்க தொலைபேசி செயலி மற்றும் இணையத்தளத்தின் ஊடாக கடன் பெற்ற கொழும்பு, கம்பஹா, களுத்துறை, ஹம்பாந்தோட்டை, காலி, மாத்தறை, பெலியத்த, அவிசாவளை, கேகாலை, மாவனெல்லை, பொலன்னறுவை, ஹகுரங்கெத்த , மன்னார், புத்தளம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த பல நபர்களுக்கு எதிராக இந்த வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஒன்லைன் ஊடாக ரூ. 25,000 முதல் ரூ 2 இலட்சத்திற்கு குறைவான தொகையைப் பெற்று உரியவாறு கடனை செலுத்தாதது தொடர்பில் 2022 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க சிறு உரித்து செயன்முறைக்கு அமைவாக இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

கொழும்பு 07 ஒன்லைன் கிரடிட் பிரைவேட் லிமிடெட் சார்பில் சட்டத்தரணி தில்ஷான் வீரசேகர முன்வைத்துள்ள முறைப்பாடுகளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் கீழ் மனுதாரரான ஒன்கிரெடிட் நிறுவனம் 2021 ஆம் ஆண்டு முதல் சிறிய அளவிலான கடன்களை வழங்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளது.oncredit quick cash, https://www.oncredit.lk கைபேசி மென்பொருள் ஊடாக பிரதிவாதிகள் முன்வைத்த தரவுகளை ஒப்பிட்டு கடன் வழங்கப்பட்டுள்ளது. கடன் வழங்கும்போது கடன் பெறுநர்களிடமிருந்து எந்த பாதுகாப்பு உத்தரவாத பத்திரமும் எடுக்கப்படுவதில்லை. அவர்கள் வழங்கிய வங்கிக் கணக்கு எண்ணிற்கு குறுகிய காலத்திற்குள் கடன் தொகை வரவு வைக்கப்பட்டுள்ளது எனவும் மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சீனன்கோட்டை ஆரம்ப பாடசாலையில் வருடாந்த பரிசளிப்பும் பாராட்டு நிகழ்வும்











பேருவளை, சீனன்கோட்டை ஆரம்ப பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா மற்றும் மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் விழா ஆகியன கடந்த (11) வியாழக்கிழமை பாடசாலையின் இரீபதுல் ஹைரா ஞாபகார்த்த மண்டபத்தில் பாடசாலை அதிபர் ஜனாபா எம்.வை.எஸ். ஜெஸீலா தலைமையில் வெகுவிமர்சையாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மேல் மாகாண கல்வித் திணைக்களத்தின் தமிழ் மொழி மூலப் பாடசாலைகளுக்கு பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஏ.எஸ். நஜீப் கலந்துகொண்டார். விசேட அதிதியாக களுத்துறை கல்வி வலய ஆரம்பக் கல்விக்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி உபேகா குமாரி தல்கந்துரவும் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ். ஜெயகுமார், உதவி கல்விப் பணிப்பாளர் எம்.டி.எம். இல்யாஸ் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து சிறப்பித்தனர்.

மேலும், அருகிலுள்ள பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், ஊர்ப் பிரமுகர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பாடசாலை நலன்புரி சங்க உறுப்பினர்கள் உட்பட பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது 2024ம் ஆண்டின் புதிய மாணவத் தலைவர்களாக தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு சின்னம் சூட்டல், புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மற்றும் 100க்கு மேற்பட்ட புள்ளிகளை பெற்ற மாணவர்களையும், அவர்களுக்கு கற்பித்த ஆசிரியர்களையும் கௌரவித்தல், கடந்த 2023ம் ஆண்டில் பாடசாலை மட்ட கணிப்பீடுகளில் கூடுதலான புள்ளிகளை பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் கிண்ணங்கள் வழங்கி கௌரவித்தல் ஓய்வு பெறவுள்ள களுத்துறை கல்வி வலய தமிழ் மொழி மூலப் பாடசாலைகளுக்கு பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.டி.எம். இல்யாஸின் சேவை நலனைப் பாராட்டல் போன்ற நிகழ்வுகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

### மின் கட்டண குறைப்புக்கமைவாக

# நீருக்கான கட்டணத்தை திருத்த நீர் வழங்கல் சபை தீர்மானம்



மின் கட்டண குறைப்புக்கமைவாக நீர்க்கட்டணத்திலும் மாற்றம் மேற்கொள்ளப்படவிருப்பதாக தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது.

இதுதொடரபாக சபையின் பொது முகாமையாளர் பொறியியலாளர் பாரதிதாசன் நேற்று (16) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில், அரசாங்கத்தின் 2023 கொள்கைக்கமைவாக பொது மக்களுக்கு வழங்கப்படும் சுகாதார பாதுகாப்பு நீருக்கான கட்டணம் அதற்கான விநியோக செலவை உள்ளடக்கிய வகையிலேயே அமைவதாக சுட்டிக்காட்டியுள்ளது.

தேசிய நீர் வழங்கல்,வடிகாலமைப்பு சபையினால் பொது மக்களுக்கு வழங்கப்படும் நீர் அலகொன்றுக்கான செலவு உள்ளடங்கக்கூடிய வகையில் நீர் கட்டணத் திருத்தத்தை மேற்கொள்வதற்காக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை திட்டமிட்டுள்ளது.

அதற்கமைய நேற்று 16 ஆம் திகதி முதல் மின்சார கட்டண குறைப்புக்கு அமைவாக நீர் பாவனையாளர்களுக்கும் அதன் பிரதிபலனை வழங்கக்கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றதா? என்பது தொடர்பாக விரிவாக ஆய்வு செய்யப்படுகிறது.

ஆய்வின் முடிவுக்கு அமைவாக அதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் புதிய நீர்க்கட்டண திருத்தம் சம்பந்தமாக மக்களை தெளிவூட்டுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்று பொது முகாமையாளர் பொறியியலாளர் பாரதிதாசன் அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார்.

## மின்சாரக் கட்டணக் குறைப்புடன்...

சங்கம் தீர்மானித்துள்ளதாக அறிவித்துள்ளது.

செவ்வாய்க்கிழமை (16) நள்ளிரவு முதல் இந்த விலை குறைப்பு அமுல்படுத்தப்படுவதாகவும் அறிவித்துள்ளது.

மின்சார கட்டணம் குறைக்கப்பட்டதால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக மேற்படி சங்கம் தெரிவித்துள்ளது. இந்த விலை குறைப்பின் படி , பிரைட் ரைஸ், கொத்து , உணவுப் பொதி ஆகியவற்றின் விலைகள் 25 ரூபாவினாலும், பராட்டா ரொட்டி, முட்டை ரொட்டி உள்ளிட்ட சிற்றுண்டிகளின் விலைகள் 10 ரூபாவாலும் குறைக்கப்படவுள்ளதாக அச் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

## அரசின் மீது மக்களின்...

பொருளாதார செயற்பாடுகள் குறித்து நாடு முழுவதும் "நாட்டு மக்கள் என்ன நினைக்கின்றார்கள்" என்ற தலைப்பில் இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது.

இதற்கமைவாக, கடந்த பெப்ரவரி மாத்தில் அரசாங்கத்தின் மீதான மக்களின் அங்கீகாரம் 07 வீதத்தினால் அதிகரித்துள்ளதாக நிறுவனம் தெரிவித்துள்ளது. ஆய்வுகளுக்கு அமைவாக இது 24 வீதமாக அதிகரித்துள்ளது என்று நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

ஆய்வில் பங்கேற்றவர்களில் 28 வீதமானோர் தற்போதைய பொருளாதார நிலையை விசேடமானது அல்லது சிறப்பானது என வகைப்படுத்தியுள்ளனர்.

இது கடந்த பெப்ரவரி மாதத்தில் காணப்பட்ட மட்டத்திலிருந்த 09 வீத மதிப்பை விட மூன்று மடங்கு அதிகமாகும் என்றும் வெரிடே ரிசர்ச் நிறுவனம் குறிப்பிட்டுள்ளதுடன், நாட்டின் பொருளாதார நிலை மேலும் மேம்படும் என நம்பும் மக்களின் எண்ணிக்கை மூன்று மடங்காக அதிகரித்துள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் 09 வீதமாக இருந்த நிலையில் இம்மாதம் இது முப்பது வீதமாக அதிகரித்துள்ளதாக வெரிட்டி ரிசர்ச் சர்வே நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த ஆய்வு ஜுன் மாதம் 28 முதல் ஜுலை 06 வரை மேற்கொள்ளப்பட்டதாக வெரிட்டி ரிசர்ச் நிறுவனம் தெரிவித்துள்ளது.

## யுனெஸ்கோ பிரதிநிதி...

யுனெஸ்கோவில் இலங்கை உறுப்புரிமை பெற்று 75ஆவது ஆண்டு நிறைவடைவதை முன்னிட்டு யுனெஸ்கோ நிறுவன பணிப்பாளர் நாயகம் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இன்றைய பலன்கள்

## (17.07.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா (ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம் :** சுப செலவுகள் அதிகரிக்கும். பணப்பற்றாக் குறை ஏற்பட்டாலும் அதை சமாளிக்கும் ஆற்றல் உங்களுக்கு உண்டு.

**ரிஷபம் :** கணவன் மனைவி ஒற்றுமை பலப்படும். பெற்றோர் உடல் நலனில் கவனம் தேவை. வாரிசுகளின் வளர்ச்சி மகிழ்ச்சி தரும்.

**மிதுனம் :** குடும்ப ஒற்றுமை பலப்படும். தொழில் முன்னேற்றம் உண்டு. கடன் சுமை குறையும். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள்.

**கடகம் :** பெண்களுக்கு குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறும். கணவன் மனைவி இருவரும் விட்டுக் கொடுத்துச் செல்வது நன்மை தரும். பணம் வந்த மறுநிமிடமே செலவாகிவிடும்.

**சிம்மம் :** பெண்களுக்கு மனக்கலக்கம் அதிகரிக்கும். தொழில் கூட்டாளிகளால் பிரச்சினை வரலாம். ஆதாயம் குறைவாகவும் அலைச்சல் கூடுதலாகவும் இருக்கும்.

**கன்னி :** பெண்களுக்கு அதிக விரயம் உண்டு. நிம்மதி குறையும். தொழிலைப் பொறுத்தவரை யாரை நம்பியும் எதுவும் செய்ய இயலாது. பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள்.

**துலாம் :** குடும்ப விஷயங்களை மூன்றாம் நபரிடம் சொல்ல வேண்டாம். இடமாற்றம், வீடு மாற்றம் ஏற்படும் பணி புரிபவர்களுக்கு பதவி உயர்வு, ஊதிய உயர்வு கிடைக்கும்.

**விருச்சிகம் :** உங்களின் திறமைக்கு ஓர் அங்கீகாரம் கிடைக்கும். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். குடும்பத்தில் குழப்பத்தை ஏற்படுத்தியவர்களை கண்டறிந்து ஒதுக்குவீர்கள்.

**தனுசு :** யாரேனும் உங்களுடைய தவறுகளை சுட்டிக் காட்டினால் மாற்றிக் கொள்வது நல்லது. தவறு செய்யாமலேயே நீங்கள் தவறு செய்தாக சிலர் வீண் பழி சுமத்துவார்கள்.

**மகரம் :** தந்தையாருக்கு சின்ன அறுவை சிகிச்சை, மூச்சுத் திணறல், வாயுக் கோளாறால் நெஞ்சு வலி வந்துப் போகும். எவ்வளவு பணம் வந்தாலும் பற்றாக்குறை இருந்துக் கொண்டேயிருக்கும்.

**கும்பம் :** விட்டுக் கொடுத்து போவது நல்லது. அனுமதி பெறாமல் வீடு கட்டத் தொடங்க வேண்டாம். தாயாரின் உடல் நிலை பாதிக்கும். மனத்தாபங்களும் வந்து நீங்கும்.

**மீனம் :** கணவன் மனைவிக்குள் அன்யோன்யம் அதிகரிக்கும். சிலர் தனிக் குடித்தனம் செல்வீர்கள். திருமணம் தள்ளிப் போனவர்களுக்கு நல்ல விதத்தில் முடியும்.

## அரச நிதி முகாமைத்துவம்,...

பெறும் மாணவர்கள் மற்றும் வெற்றி பெற்ற பாடசாலைகள் என்பவற்றுக்குப் பெறுமதி வாய்ந்த பரிசுகள் மற்றும் சான்றிதழ்களை வழங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஞஅனைத்து அரச பாடசாலைகள் மற்றும் பிரிவென் கல்வி நிறுவனங்கள், கல்வி அமைச்சின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் மற்றும் பிக்குகள் மற்றும் பிக்குணிகள் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம்.

ஜனாதிபதி அலுவலகம், கல்வி அமைச்சு மற்றும் அரசாங்க தகவல் திணைக்களம் ஆகியவற்றால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இப்போட்டிக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான கடைசித் திகதி எதிர்வரும் 31 என அறிவிக்கப்பட்டுள்ளது. போட்டி நிபந்தனைகள் மற்றும் விண்ணப்பப் படிவம், ஆக்கங்களை அனுப்ப வேண்டிய விதம் தொடர்பான மேலதிக தகவல்களையும் சட்டமூலங்களையும் அரசாங்க தகவல் திணைக்களத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம்.

## அஸ்வெசும உதவிபெறும் குடும்ப...

சமர்ப்பித்துள்ள விலை முன்மொழிவு மதிப்பீடு செய்யப்பட்டு 2025,2026 மற்றும் 2027 ஆண்டுகளுக்கு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இதற்கென,ரூபா 6.027 பில்லியன் (பெறுமதி சேர் வரி நீங்கலாக) தொகையில் அமுல்படுத்துவதற்கு விதந்துரை செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய, மேலே குறிப்பிடப்பட்ட வகையில் 03 ஆண்டு காலத்துக்கு சுரக்ஷா மாணவர் காப்புறுதிக்கான ஒப்பந்தத்தை ஸ்ரீ லங்கா இன்சூரன்ஸ் கோப்பரேஷன் ஜெனரல் லிமிட்டட் நிறுவனத்துக்கு வழங்குவதற்கும், சுரக்ஷா மாணவர் காப்புறுதியின் கீழ் வருடாந்தம் 1,80,000 ரூபாவுக்கு குறைவான வருமானமுள்ள குடும்ப மாணவர்களின் பெற்றோரின் இறப்பு நன்மைகள் "அஸ்வெசும" நலன்புரி நன்மைகளைப் பெறுகின்ற குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு வழங்குவதற்கும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மற்றும் கல்வி அமைச்சர் சமர்ப்பித்த ஒருங்கிணைந்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## அரபிக் கடல், வங்காள விரிகுடாவில்...

வளிமண்டலவியல் திணைக்களம் 'சிவப்பு' எச்சரிக்கை விடுத்துள்ளது.

தென் மேல் பருவப்பெயர்ச்சி வலுவடைந்து காணப்படுவதால் இப்பகுதிகளில் மணிக்கு 70 தொடக்கம் 80 கிலோ மீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும். கடல் மிகவும் கொந்தளிப்பாகவும் இருக்குமெனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வளிமண்டளவியல் திணைக்களம் வெளியிட்டுள்ள வரைபடத்தில் 'சிவப்பு' நிறத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கடல் பகுதிகளுக்கு மறு அறிவித்தல் வரும் வரை, செல்ல வேண்டாமென கடற்படையினர் மற்றும் கடற்றொழிலாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

மேற்குறிப்பிட்ட கடல் பகுதிகளில் இருப்பவர்கள் உடனடியாக கரையோரங்களுக்கு திரும்பவும் அல்லது பாதுகாப்பான பகுதிகளுக்கு செல்லுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் வெளியிடும் எதிர்கால வானிலை கணிப்புகள் தொடர்பில் அவதானமாக இருக்குமாறும் கடற்படை மற்றும் மீனவ சமூகங்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## நோயாளருக்கான ஜனாதிபதி நிதிய...

தெரிவித்துள்ளார். ஜனாதிபதி நிதியத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ள குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் ஒரு இலட்சத்து 16 ஆயிரம் மாணவர்களுக்கு புலமைப் பரிசில் தற்போதைய அரசாங்கத்தினால் வழங்கப்படுகிறது. எதிர்கால சந்ததியினரின் நலன் கருதி மேற்கொள்ளப்படும் இந்த முதலீடு நாட்டின் எதிர்கால பயணத்துக்கான சாதகமான வேலைத் திட்டம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் ஜனாதிபதி நிதியத்தினால் வழங்கப்பட்ட கொடுப்பனவு தொடர்பில் நோக்கும்போது, நோயாளர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக, குறிப்பாக இருதய நோய் சத்திர சிகிச்சைக்காக இந்த நிதியத்தின் மூலம் அதிகளவு கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. எனினும் அந்த கொடுப்பனவை வழங்குவதில் பெரும் தாமதம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

அந்த வகையில் முறையான வகையில் சிறந்த முறைமையைப் பின்பற்றி குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லும் வகையில், ஜனாதிபதி நிதியத்தின் மூலம் ஒரு இலட்சத்து 16 ஆயிரம் மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்குவது பெருமைப்படக்கூடிய விடயம். தற்போதைய அரசாங்கம் எமது நாட்டு மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு உதவும் வகையில் மேற்கொள்ளும் சிறந்த நடவடிக்கை இது என்றும் இதுவே அனைவரும் எதிர்பார்க்கும் மாற்றம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வேலை நிறுத்தங்களில் பங்கேற்காத...

அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதன்படி அந்த தினங்களில் கடமைக்கு சமுகமளித்த அரசாங்க ஊழியர்களுக்காக ஒரே தடவையில் 10,000 ரூபா கொடுப்பனவையும் சான்றிதழையும் வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

நிதி அமைச்சரென்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்துள்ள யோசனைக்கே, அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.இதன் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார். அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், நாட்டு மக்களின் இயல்பு வாழ்க்கை மற்றும் அவர்களுக்கான அன்றாட சேவைகளை வழங்குவதற்கு அரசாங்கம் முன்னுரிமையளித்து செயற்பட்டு வருகிறது. சில முக்கியமான சேவைகள் அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. எனினும் சில கோரிக்கைகளை முன் வைத்து அரசதுறை தொழிற்சங்கங்கள் சில வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டன. இதனால் பொதுமக்கள் தமது அன்றாட சேவைகளை பெற்றுக் கொள்வதில் அசௌகரியங்களை எதிர் கொள்ள நேர்ந்தது. எனினும் அரசாங்க ஊழியர்களில் சில தரப்பினர் வேலை நிறுத்தப் போராட்டங்களில் கலந்து கொள்ளாது,குறித்த அந்த தினங்களிலும் கடமைக்கு சமுகமளித்தனர். இவர்களுக்கு விசேட கொடுப்பனவொன்றை வழங்குவதாக அரசாங்கம் அறிவித்திருந்தது. இதன்படியே அவர்களுக்கு பத்தாயிரம் ரூபா கொடுப்பனவும் சான்றிதழும் வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பு...

தெரிவித்தார். இன்று ஜுலை 17ஆம் திகதி முதல் ஆகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி வரை தேர்தலுக்கான அறிவிப்பை வெளியிடுவதற்கு தேர்தல் சட்டங்களுக்கு அமைய தேர்தல்கள் ஆணைக் குழுவிற்கு அதிகாரம் கிடைத்துள்ள நிலையில், இந்த மாத இறுதிக்குள் தேர்தலுக்கான அறிவிப்பை வெளியிடுவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அந்த வகையில் அந்த தினத்திலிருந்து 16 முதல் 21 தினங்களுக்குள் வேட்புமனு தாக்கல் தொடர்பான திகதி நிர்ணயிக்கப்படும் என்றும் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார். இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்கு ஒரு கோடியே 71 லட்சத்து 40 ஆயிரம் பேர், தகைமை பெற்றுள்ளதுடன் புதிதாக 76 ஆயிரம் பேர் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

தேர்தலுக்காக கடந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 10 பில்லியன் ரூபா நிதியை அரசாங்கம் ஒதுக்கியுள்ளது. தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளுக்காக இந்நிதி தற்போது செலவிடப்பட்டு வருகிறது.

தேர்தலுக்கான நடவடிக்கைகள் தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களம்,பொலிஸ் மா அதிபர், தபால் மா அதிபர், அச்சகக் கூட்டுத்தாபனம் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் நிறுவனங்களுடனும் பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளன.

அந்த வகையில் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலை நடத்துவதற்கு அனைவரதும் ஒத்துழைப்பை தேர்தல் ஆணைக்குழு எதிர்பார்க்கின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

தேர்தல்கள் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற விஷேட ஊடகவியலாளர் சந்திப்பின்போதே தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

அந்த வகையில் வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்ட தினத்திலிருந்து 46 வாரங்களுக்குள் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் விளக்கமளித்த அவர்,

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் பல்வேறு தரப்பினராலும் எழுப்பப்படும் மாறுபட்ட கருத்துக்கள் சம்பந்தமாக மக்களை தெளிவுபடுத்தும் பொறுப்பு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உள்ளது. அரசியலமைப்புக்கு அமைய எதிர்வரும் செப்டெம்பர் 17 ஆம் திகதி முதல் ஒக்டோபர் 16 ஆம் திகதி வரையிலான காலப் பகுதியில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. தேர்தல் வாக்கெடுப்பு,வேட்பு மனு தாக்கல், தேர்தலுக்கான திகதி ஆகியவற்றைத் தீர்மானிப்பதற்கு பல விடயங்களைக் கருத்திற் கொள்ள வேண்டியுள்ளது. பிரசார நடவடிக்கைகளுக்கு போதுமான கால அவகாசம் வழங்குதல்,வாக்கெடுப்புடன் தொடர்புடைய சட்டரீதியிலான நடவடிக்கைகளுக்கு போதுமான காலவகாசம் வழங்குவதைப் போன்றே அனைவரும் வாக்களிப்பதற்கு பொருத்தமான ஒரு தினத்தை தீர்மானித்தல் ஆகியவை தொடர்பில் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளது.

## மைத்திரிக்கு எதிரான தயாசிறியின் மனு...

விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுமாறு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக தயாசிறி ஜயசேகர பதவி வகித்தபோது, அவரது கட்சி உறுப்புரிமையை இரத்துச் செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு எதிராக இந்த முறைப்பாட்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்த முறைப்பாட்டு மனுக்கள் தொடர்பான இடைக்கால கோரிக்கைகள் மீதான உத்தரவு நேற்று அறிவிக்கப்படவிருந்த நிலையில், எதிர்த்தரப்பு சமர்ப்பித்த ஆவணங்கள் வழக்குப் பதிவில் சேர்க்கப்படவில்லை என நீதவான் தெரிவித்துள்ளார். இதன்படி, உரிய ஆவணங்களைத் தாக்கல் செய்ய இருதரப்புக்கும் அனுமதியளித்த நீதிமன்றம், மேற்படி மனு மீதான விசாரணையை எதிர்வரும் 23 இல், முன்னெடுக்குமாறும் உத்தரவிட்டுள்ளது.

## நீர் கட்டணங்களுக்கு விலை சூத்திரம்;...

அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பிலேயே, அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அமைச்சர்,

தேசிய நீர் வழங்கள் வடிகாலமைப்பு சபை புதிய கட்டணக் கொள்கை மற்றும் விலைச் சூத்திரம் தொடர்பில் கடந்த ஏப்ரல் (08) இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. இதன்போது சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு தேவையான திருத்தங்கள் உள்ளடக்கப்பட்டன. இதற்கமைய புதிய கட்டணக் கொள்கை மற்றும் விலைச் சூத்திரத்தை அறிமுகப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்காக தயாரிக்கப்பட்டுள்ள திருத்தப்பட்ட நீர் கட்டணக் கொள்கை மற்றும் திருத்தப்பட்ட நீர் கட்டண சூத்திரம் ஆகியவற்றை 2025 முதல் நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## அரசியலமைப்பில் திருத்தம் செய்து...

அரசியலமைப்பின் 83 ஆம் உறுப்புரையின் (ஆ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள "ஆறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட" எனும் சொல்லுக்கு மாற்றாக "ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட" எனும் சொல்லை பதிலீடு செய்து அரசியலமைப்பின் 83 ஆம் உறுப்புரையின் (ஆ) பந்தியைத் திருத்தம் செய்வதற்காக 2024.07.09 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கொள்கை ரீதியான அங்கீகாரம் வழங்கப்பட்டது.

இதன்படி,சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்துக்கு சட்ட மாஅதிபரின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றுள்ளது. இச்சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்துக்காக சமர்ப்பிப்பதற்கும் ஜனாதிபதியும் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரும் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## அதிகரித்த பொருட்கள், சேவைகள்...

மின்சாரம் மற்றும் எரிபொருட்களின் விலைகளை பாரியளவில் குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இருப்பினும் இந்நாட்டில் பொருட்கள் மற்றும் சேவைக் கட்டணக் குறைப்பின் பலன் இன்னும் நுகர்வோருக்கு கிடைக்கவில்லையெனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (16) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர், "ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி, ஏப்ரல், ஜுலை, ஒக்டோபர் மாதங்களில் மின் கட்டணங்கள் திருத்தப்பட வேண்டும் என்று அரசாங்கம் முடிவு செய்துள்ளது. கடந்த மார்ச் மாதம் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் பின்னர், பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் கோரிக்கையின் பேரில், ஏப்ரல் மாதத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படாமல் ஜுலை மாதம் திருத்தம் செய்ய இணக்கம் காணப்பட்டது. இந்த மின் கட்டணத் திருத்தம் ஜுலை 16 முதல் அமுலுக்கு வருகிறது. அடுத்த கட்டணத் திருத்த முன்மொழிவை ஒக்டோபர் மாதத்தில் வெளியிட எதிர்பார்க்கப்படுகிறது. மின் கட்டணக் குறைப்புக்கு பல முக்கிய காரணங்கள் உள்ளன. 2022 இல் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால், கடந்த காலங்களில் வங்கி வட்டி விகிதம் 36% வரை அதிகரித்தது.

## தலவாக்கலையில் 03 சிறுமிகள்...

வீட்டிலிருந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை வெளியே சென்றிருந்த இவர்கள் இதுவரை வீடு திரும்பவில்லையென பெற்றோர் முறைப்பாடு செய்துள்ளனர்.

திங்கட்கிழமை (15) தலவாக்கலை பொலிஸ் நிலையத்தில் இதுகுறித்து முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதில் முரளி கிருஷ்ணன் லக்சிக்கா(வயது16), இராஜகுரு மிதுஷா (வயது16), சுந்தர்ராஜ் தரஷினி (வயது16), என்ற 03 சிறுமிகளும் கோபிசாகர் (வயது 15) என்ற சிறுவனுமே கானாமல் போயுள்ளதாக தலவாக்கலை பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. சிறுவன் உட்பட சிறுமிகள் தமது பெற்றோருக்குத் தெரியாமல் வீட்டிலிருந்து வெளியே சென்று காணாமல் போயுள்ளதாக பெற்றோர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர். இவர்கள் தொடர்பாக தகவல் தெரிந்தால் 0764612289. 0771546724. ஆகிய இலக்கங்களுக்கு தொடர்பு கொண்டு தகவல்களை வழங்குமாறு பெற்றோர் கோரியுள்ளனர்.

## நீதிமன்றம் தடை... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன் இரட்டைப் பிரஜாவுரிமையைக் கொண்டவர்கள் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அவர், 2019 நடைமுறையிலிருந்த நியதியே இம்முறை தேர்தலிலும் பின்பற்றப்படுகிறது. எனினும் இது தொடர்பான சட்டத்தில் திருத்தங்களை கொண்டு வருவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். ஊடகவியலாளர் ஒருவர் இது தொடர்பில் கேள்வி எழுப்புகையில்,ஜனாதிபதித் தேர்தலை நிறுத்துவதற்கான தடையுத்தரவை பிறப்பிக்கக் கோரி சட்டத்தரணிகள் நீதிமன்றம் செல்கின்றனர். இது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு மேற்கொண்ட நடவடிக்கை என்ன? என கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர்,

அவ்வாறான மனுக்களை தோல்வியுறச் செய்வதற்காக நாம் உரிய தரப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்தினோம்.

இது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்துடனும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

அந்த வகையில் அவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட இரண்டு மனுக்களையுமே நீதிமன்றம் விசாரணையின்றி நிராகரித்துள்ளது.

அதன்படி நீதிமன்றம் தடையுத்தரவு விதித்தாலே அன்றி வேறு எந்த காரணத்திற்காகவும் தேர்தல் நிறுத்தப்பட மாட்டாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## போலந்து நாட்டுக்கான... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கு முன்னர், அவர் அமைச்சின் கிழக்கு ஆசியப் பிரிவின் பணிப்பாளர் நாயகமாகவும் பணியாற்றியுள்ளார். சீனாவின் குவாங்சோவில் இலங்கையின் தூதரகத் தூதராகவும், தென் கொரியா, நோர்வே மற்றும் ஐக்கிய இராச்சியத்தில் உள்ள இலங்கை தூதரகங்களில் பல இராஜதந்திர பதவிகளையும் வகித்துள்ளார். தூதுவர் பிரியங்கிகா தர்மசேன இலங்கையின் பேராதனை பல்கலைக்கழகத்தில் பட்டதாரி மற்றும் கொழும்பு 07, மகளிர் கல்லூரியின் முன்னாள் மாணவி என்பதும் குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவின் புதிய ... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

1989 பேட்ச் ஐ.எப்.எஸ் அதிகாரியான. விக்ரம் மிஸ்ரி, துணை தேசிய பாதுகாப்பு ஆலோசகராக பணியாற்றி வந்தார்.அதற்கு முன் 2019 முதல் 2021 வரை 03 ஆண்டுகள் சீனாவில் இந்தியத் தூதராக பணியாற்றினார். 2020 ஜூன் மாதம் கல்வான் பள்ளத்தாக்கு மோதலை தொடர்ந்து இந்திய – சீன பேச்சுவார்த்தையில் முக்கியப் பங்காற்றினார்.

விக்ரம் மிஸ்ரி, ஸ்பெயின் மற்றும் மியான்மரில் இந்தியத் தூதராக பணியாற்றியுள்ளார். பெல்ஜியம், பாகிஸ்தான் அமெரிக்கா இலங்கை மற்றும் ஜெர்மனியிலுள்ள இந்திய தூதரகங்களில் அதிகாரியாக பணியாற்றியுள்ளார்.

1997 இல் ஐ.கே.குஜ்ரால் 2012 இல் மன்மோகன் சிங் 2014 இல் நரேந்திர மோடி என 03 பிரதமர்களுக்கு தனிச் செயலாளராக பணியாறியுள்ளார். விக்ரம் மிஸ்ரிக்கு வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் வாழ்த்து தெரிவித்தார்.

## எட்வோகேட் நிறுவனத்தின்... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரச நிறுவனங்களை மறு சீரமைப்பு செய்யாமல் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது அர்த்தமற்றது.

அந்த வகையில் அரச நிறுவனங்களின் மறுசீரமைப்பை எவ்வாறு துரிதப்படுத்த வேண்டும்? அத்துடன் எந்த அரசாங்கம் ஆட்சியில் இருந்தாலும் நிறுவனங்களின் மறுசீரமைப்பு உரிய வகையில் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும் ஆகிய விடயங்களை உள்ளடக்கி இங்கு கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளன.

## மைத்திரிக்கு எதிரான... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவரது கட்சி உறுப்புரிமையை இரத்துச் செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு எதிராக இந்த முறைப்பாட்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்த முறைப்பாட்டு மனுக்கள் தொடர்பான இடைக்கால கோரிக்கைகள் மீதான உத்தரவு நேற்று அறிவிக்கப்படவிருந்த நிலையில், எதிர்த்தரப்பு சமர்ப்பித்த ஆவணங்கள் வழக்குப் பதிவில் சேர்க்கப்படவில்லை என நீதவான் தெரிவித்துள்ளார்.

இதன்படி, உரிய ஆவணங்களைத் தாக்கல் செய்ய இருதரப்புக்கும் அனுமதியளித்த நீதிமன்றம், மேற்படி மனு மீதான விசாரணையை எதிர்வரும் 23 இல், முன்னெடுக்குமாறும் உத்தரவிட்டுள்ளது.

# தொழில்சார் கல்வியின் விசேடத்துவம் மூலம் DIMO Academy முன்னெடுக்கும் முயற்சிகள் சர்வதேசத்தின் கவனத்திற்கு

இலங்கையில் முன்னணியில் உள்ள பல் துறை கூட்டு நிறுவனமான DIMO நிறுவனத்தின் கல்விப் பிரிவான DIMO Academy ஆனது, Automobile Mechatronics மற்றும் Plant Engineering போன்ற பல்வேறு துறைகளில் இலங்கை இளைஞர்களின் திறமைகளை வலுவூட்டுவதன் மூலம் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தொழிற்கல்வியில் தனித்துவமான மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. தொழிற்கல்வியில் சர்வதேச ஒத்துழைப்பை ஊக்குவிப்பதற்காக செயற்படும் iMOVE நிறுவனத்தினால், அண்மையில் இந்த தனித்துவமான பணியை அங்கீகரித்து DIMO Academy பற்றி அதன் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டிருந்தது. iMOVE ஆனது, ஜேர்மனியின் பயிற்சி மற்றும் சர்வதேச பங்காளிகளுக்கு இடையே தொழிற்கல்வி மற்றும் பயிற்சி (VET) தொடர்பான சர்வதேச ஒத்துழைப்பை அதிகரிக்கும் நோக்கத்துடன் German Federal Ministry of Education and Research (BMBF) இனால் நிறுவப்பட்ட இணையத்தளமாகும்.

DIMO Academy இனால் மாணவர்களுக்கு வழங்கப்படும் பயிற்சியின் மூலம், நடைமுறை ரீதியாக சிக்கல்களை தீர்க்கும் திறன் காணப்படுவதன் காரணமாக, இந்த மாணவர்களுக்கு இத்துறையில் முன்னணி நிறுவனங்களில் தொழில்களை பெறுவதற்கு அதிக கேள்வி காணப்படுகின்றது. புதிய சுயகற்றல் முறை மூலம் நிறுவனத்தின் கற்றல் செயன்முறை முன்னெடுக்கப்படுவதோடு, பயிற்சியின் உள்ளடக்கம் தொடர்ச்சியாக புதுப்பிக்கப்பட்டும் வருகிறது. அத்துடன், DIMO நிறுவனத்தின் சர்வதேச அளவிலான திட்டங்களின் மூலம் பெறப்படும் தொழில்துறை ரீதியான பயிற்சி அனுபவமும் மாணவர்களுக்கு பல்வேறு நன்மைகளை வழங்குகிறது. DIMO Academy இல் ஏற்கனவே பயின்ற மாணவர்கள் தற்போது



ஐரோப்பா, மத்திய கிழக்கு, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகளில் தொழில்துறை வாய்ப்புகளைப் பெற்றுள்ளதோடு, வெற்றிகரமான தொழில்முனைவோராகவும், உள்ளூர் நிறுவனங்களில் வேலை வாய்ப்புகளை பெறவும் வாய்ப்பை பெற்றுள்ளனர்.

தனது பாடத்திட்டத்தை பாரம்பரிய முறைகளுக்கு அப்பால் கொண்டு செல்வதன் மூலம் உள்ளூர் தொழிற்கல்வித் துறையை மேம்படுத்துவதில் முக்கிய பங்களிப்பை DIMO Academy வழங்கியுள்ளது. மனித வள முகாமைத்துவம், சந்தைப்படுத்தல், நிதி மற்றும் உள்நாட்டு தொழிலாளர் சட்டம் போன்ற பல்வேறு பாடங்களை DIMO Academy அதன் பாடத் திட்டத்தில் கொண்டுள்ளது. இதன் மூலம் மாணவர்கள் தாங்கள் ஈடுபட்டுள்ள துறைகளில் நிபுணத்துவம் பெறவோ, தொழில்முனைவோராக மாறவோ அல்லது தங்களின் கல்வியை மிக உயர்ந்த நிலைக்கு தொடர்ச்சியாக முன்னெடுக்கவோ அவர்களை வலுவூட்டுகிறது.

தற்போது, தொழிற்கல்வி தொடர்பில் சமூகத்தில் நிலவும் கருத்துகளை DIMO Academy மாற்றியமைத்துள்ளது. ஆங்கிலம் மற்றும் ஜேர்மன் மொழிப் பாடங்களை DIMO Academy உள்ளடக்கியுள்ளது. அத்துடன், STEM துறைகளை பெண்கள் மத்தியில் ஊக்குவிப்பதிலும், Automobile Mechatronics போன்ற துறைகளில் கற்கைகளைத் தொடர்வதற்கு அவர்களை ஊக்குவிப்பதிலும் DIMO Academy உறுதியாக உள்ளது. Automobile Mechatronics தொடர்பில் இலவச தொழிற்கல்வியை வழங்குகின்ற சமூகப் பொறுப்புணர்வு நடவடிக்கையில், DIMO Academy அதன் ஆரம்பம் முதல் பங்களித்து வருகின்றது.

Adhara மதிப்பீடு பெற்ற ஜேர்மனிய பயிற்சிக் கல்வியகமான DIMO Academy, ஜேர்மன் தொழிற்கல்வியின் மிக உயர்ந்த தரத்தை பேணிப் பாதுகாக்க உறுதி பூண்டுள்ளது. அதற்கமைய, விசேட தெரிவு முறை மூலம் மாணவர் இணைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதோடு, விண்ணப்பதாரர்கள் அடிப்படைத் தகுதிகள் மற்றும் எழுத்துப் பரீட்சைகள் மற்றும் நேர்முகப் பரீட்சைகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படுகிறார்கள்.

தொடர்ச்சியான மதிப்பீட்டுச் செயன்முறை மற்றும் தெரிவுகள் மூலம் மாணவர்களின் விசேடத்துவம் உறுதிப்படுத்தப்படுவதோடு, உயர் மட்டத்திலுள்ள பயிற்சி வழங்குனர்கள் ஜேர்மனிய தரத்திற்கு ஏற்ப அதனை முன்னெடுக்கின்றனர்.

1990 இல் ஸ்தாபிக்கப்பட்ட DIMO Academy ஆனது, 34 வருட நீண்ட வரலாற்றுடன், திறமையான தொழில்நுட்ப வல்லுனர்களை உருவாக்குவதில் பெரும் பங்காற்றி வருகிறது.

# வடக்கு சிறுவர்களுக்கு க்ளோகார்ட் நடமாடும் பல் மருத்துவ சிகிச்சை திட்டத்தை ஆரம்பித்தது

தேசத்தின் மிகவும் நம்பகமான வாய்ச் சுகாதார பராமரிப்பு வர்த்தக நாமங்களில் ஒன்றான, Hemas Consumer Brands நிறுவனத்தின் க்ளோகார்ட், சுகாதார மருத்துவ அதிகாரிகளுடன் (MOH) இணைந்து, பற் சூத்தைகள் அற்ற தேசத்தை உருவாக்குவதற்கான அதன் தொடர்ச்சியான திட்டமான, பாடசாலை மாணவர்களுக்கான சிறந்த வாய்ச் சுகாதாரம் தொடர்பான விழிப்பூட்டலை முன்னெடுத்து வருகின்றது.



இந்த நிகழ்ச்சித்திட்டம் 10 வருடங்களுக்கும் மேலாக முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், இலங்கை முழுவதிலும் உள்ள சிறுவர்களுக்கு சிறந்த வாய்ச் சுகாதார பராமரிப்புக்கான வாய்ப்பினை வழங்குகின்றது. அவர்கள் அனைவரும் ஆரோக்கியமான புன்னகையை கொண்டிருப்பதற்கான வாய்ப்பை வழங்குவதில் க்ளோகார்ட் கொண்டுள்ள அசைக்க முடியாத அர்ப்பணிப்புக்கு இது ஒரு சான்றாகும்.

MOH மருத்துவர்களால் நடத்தப்படும், சிறந்த வாய்ச் சுகாதார நடைமுறைகள் தொடர்பான வலுவான அறிவூட்டல் நிகழ்வுகளை இந்த திட்டம் கொண்டுள்ளது.





**MINISTRY OF WATER SUPPLY AND ESTATE INFRASTRUCTURE DEVELOPMENT**

**INVITATION FOR BIDS**

***DESIGN, SUPPLY, INSTALLATION, TESTING AND COMMISSIONING OF ON- GRID SOLAR SYSTEMS & ACCESSORIES AT NORTH WESTERN REGION***

**CONTRACT NO.: DGM/M&E/SOLAR/2021/02 R**

1. Drainage Board (NWSDB), Galle Road, Rathmalana, Sri Lanka on behalf of NWSDB will receive sealed bids for the DESIGN, SUPPLY, INSTALLATION, TESTING AND COMMISSIONING OF ON- GRID SOLAR SYSTEMS & ACCESSORIES AT NORTH WESTERN REGION up to closing of bids at 10.00 hours on 07.08.2024.
2. Bids should be submitted in the documents available at the office of the Assistant General Manager (Tenders and Contracts), National Water Supply & Drainage Board (NWSDB), Galle Road, Ratmalana, Sri Lanka between 09:00 hours and 15:00 hours on normal working days up to 06.08.2024, upon payment of a non-refundable fee of Rs. 35,000.00 plus applicable VAT
3. Bidding Documents may be inspected free of charge at the office of the Assistant General Manager (Tenders and Contracts), NWSDB, Galle Road, Ratmalana, Sri Lanka.
4. Bidding Documents in English Language may be purchased by interested bidders upon submission of written application on a business letterhead to the Assistant General Manager (Tenders and Contracts), NWSDB, Galle Road, Rathmalana, Sri Lanka.
5. To be eligible for contract award, the successful bidder shall be registered as a Solar PV Service provider in Sri Lanka Sustainable Energy Authority (SLSEA).
6. Alternative bids shall not be accepted.
7. Sealed bids may be either dispatched by registered post or hand delivered to the Tender & Contract Division, Assistant General Manager (Tenders and Contracts), National Water Supply & Drainage Board (NWSDB), Galle Road, Ratmalana, Sri Lanka to receive at or before the closing time. Late Bids will be rejected.
8. All Bids shall be accompanied by a Bid Security of LKR 1,110,000.00 and the bid security should be valid up to 04.12.2024.
9. Bids will be opened immediately after the closing of Bids, at the office of the Tender & Contract Division, Assistant General Manager (Tenders and Contracts), National Water Supply & Drainage Board (NWSDB), Galle Road, Ratmalana, Sri Lanka. Bidders or their authorized representatives may be present at the opening of bids.
10. For further details, please contact the Assistant General Manager (Tenders and Contracts), NWSDB, Galle Road, Ratmalana, Sri Lanka on telephone number +94-11-2605328 or 94-11-2638999 Extension 1750 or facsimile number +94 -11-2635885.

**Chairman**
**National Water Supply & Drainage Board**



**2024/ 2025 ஆம் ஆண்டுக்கான இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் மோட்டார் வாகன தொகுதிக்கான காப்புறுதித் திட்டம்**
**B/40/2024**
**பின்னிணைப்பு-01**

மேலுள்ள தலைப்பின் கீழ் இந்தப் பத்திரிகையில் வெளியான விலைமனு ஆவண குறிப்புடன் விலைக்கேட்புக்கு பங்கேற்க ஆர்வம் காட்டும் எதிர்பார்ப்புடைய விலைமனுதாரர்களின் அவதானத்திற்கு இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் (CPC) இத்தால் அழைப்பு விடுக்கிறது.

பத்திரிகை விளம்பரத்தின் 1ஆவது பந்தி,

"இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் (IRCSL) கீழ் பதிவு செய்யப்பட்ட புகழ்பெற்ற காப்புறுதி சேவை வழங்குநர்களிடம் இருந்து ஓர் ஆண்டு காலத்திற்காக மேலுள்ள காப்புறுதித் திட்டத்திற்காக கொழும்பு 09, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரினால் விலைமனுக்கள் இத்தால் கோரப்படுகின்றன"

என்பதற்கு பதிலாக

"2024.09.12 ஆம் திகதியில் இருந்து செயற்படும் ஓர் ஆண்டு காலத்திற்காக மேலுள்ள காப்புறுதித் திட்டத்தின் ஏற்பாட்டுக்கு இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் (IRCSL) கீழ் பதிவு செய்யப்பட்ட தகுதியுடைய, புகழ்பெற்ற காப்புறுதி சேவை வழங்குநர்கள் மற்றும் காப்புறுதி முகவர்களிடம் இருந்து கொழும்பு 09, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரினால் விலைமனுக்கள் இத்தால் கோரப்படுகின்றன"

என்று வாசிக்கப்படுதல் வேண்டும்.


பத்திரிகை விளம்பரத்தில் வரும் மற்ற அனைத்து நிபந்தனைகளும் மாற்றமின்றி நீடிக்கும்.

ஏற்படக்கூடிய எந்த ஒரு அசௌகரியத்திற்கும் இ.பெ.கூ. வருந்துகிறது.

**தலைவர்**
**திணைக்கள பெறுகைக் குழு**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்**
**C/o பெறுகை மற்றும் களஞ்சியங்கள் செயற்பாடு,**
**1ஆவது மாடி,**
**இல. 609, டொக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு 09.**
**மின்னஞ்சல் - supplies@ceypetco.gov.lk**


# யூனியன் அசூரன்ஸ் அனுசரணையில் Epic Black: நடனத்தின் நெகிழ்திறன்

பிரபலமான நடன ஒழுங்கமைப்பு மையமான With My Feet ஆனது, யூனியன் அசூரன்ஸின் அனுசரணையுடன் பழம்பெரும் நடன கலைஞரும் மற்றும் நடன இயக்குனருமான நயோமி இராஜரட்ணம் அவர்களின் Epic Black நிகழ்வை நடாத்தவுள்ளது.



பல்வகைப்பட்ட நடனப் பாணிகளை வெளிப்படுத்தவுள்ள Epic Black நிகழ்வானது, 2024 ஓகஸ்ட் 9, 10 மற்றும் 11 ஆம் திகதிகளில் பிஷப் கல்லூரியின் கேட்போர்கூடத்தில் இடம்பெறவுள்ளது.

எத்தனையோ நட்சத்திர நிகழ்வுகளை நடாத்தியுள்ள With My Feet இன் நீண்ட பட்டியலில் இந்நிகழ்வும் சேர்க்கப்படவுள்ளதுடன், With My Feet இன் பின்னாலுள்ள உந்துசக்தியும், மக்கினொன்ஸ் டிராவல்ஸின் முன்னாள் நிறைவேற்று அதிகாரியும், இலங்கை கிரிக்கெட் சபையின் முன்னாள் உப தலைவரும், மற்றும் அமெச்சூர் நடன சங்கத்தின் முன்னாள் தலைவருமாக சேவையாற்றி இந்த ஆண்டு பெப்ரவரி 13 ஆம் திகதி இவ்வுலகை விட்டு நீங்கிய அமரர் ட்ரெவோர் இராஜரட்ணம் அவர்களுக்கு செலுத்தும் இதயபூர்வமான அஞ்சலியாகவும் இந்நிகழ்வு அமையவுள்ளது. அவரது தளராத மனப்பான்மை, பாரம்பரியச் சிறப்பு மற்றும் "நிகழ்ச்சி தொடர்ந்து இடம்பெற வேண்டும்" என்ற நம்பிக்கை With My Feet மற்றும் அக்குழுவின் பிரதிபலிப்பாக உள்ளது. 2000 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் எத்தனையோ மகத்தான நடன நிகழ்வுகள் மூலம் தலைமுறைகள் மத்தியில் பார்ப்போரை வசியப்படுத்துவதில் With My Feet தன்னை நிரூபித்துள்ளது.

கடந்த 22 ஆண்டு காலமாக With My Feet (2000), With My Feet Through Time (2003), Celebrations (2005), Ensemble (2006), Living Stones (2008), Resurrection (2017), Grace & Glory (2019), Absolute Joy (2022), கொழும்பில் முதன்முறை இடம்பெற்ற Dance Epicure (2023) போன்ற மறக்க முடியாத நிகழ்வுகளை இந்நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளது.


**சுகாதார அமைச்சு**

**ஆய்வுகூடங்களுக்கான மருந்தாக்கள், சத்திரசிகிச்சை நுகர்வுப் பொருட்கள், சத்திரசிகிச்சை உபகரணங்கள், சத்திரசிகிச்சை கட்டுத் துணிகள், ஆய்வுகூட இரசாயனங்கள், உபகலவைகள் (Reagents), சோதனைப் பொருட்கள், கண்ணாடிப் பொருட்கள், உலோக பொருட்கள் மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள் ஆகியன அடங்கலான உள்ளூர் உற்பத்திகளுக்கான அனைத்து மருத்துவ வழங்குநர்களிடமிருந்து வழங்கல் ஒப்பந்தங்களுக்கான**

**படிவங்களின் சமர்ப்பித்தலை நீடித்தல்**

மேலேயுள்ள விடயம் தொடர்பாக 2024 ஜூலை 8 ஆம் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை விளம்பரம் தொடர்பானது. படிவங்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதியானது பின்வருமாறு நீடிக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**ஆவணங்களை வழங்கும் இறுதித் திகதி :**
2024 ஜூலை 26 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு.
**படிவங்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி:**
2024 ஜூலை 29 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு.

ஏனைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளில் எவ்வித மாற்றமுமில்லை.

**பிரதி பணிப்பாளர் நாயகம்,**
**மருத்துவ வழங்கல் பிரிவு,**
**சுகாதார அமைச்சு,**
**இல. 357,**
**வண.பத்தேகம விமலவன்ச தேரோ மாவத்தை,**
**கொழும்பு-10.**
**தொலைபேசி: 011-2694113/4**
**இணையதளம்: www.msd.gov.lk**



**கைத்தொழில் அமைச்சு**

**SME PAVILION – Profood Propack Exhibition 2024**

கைத்தொழில் அமைச்சு மற்றும் இலங்கை உணவு பதப்படுத்துபவர்கள் சங்கம் இணைந்து 20 ஆவது வெற்றிகரமான தடவையாக Profood Propack கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளது. பதப்படுத்தப்பட்ட உணவுத்துறைக்காக இலங்கையில் நடைபெறும் மிகப்பெரிய கண்காட்சியாக இது அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

மைக்ரோ மற்றும் சிறிய பதப்படுத்தப்பட்ட உணவு கைத்தொழில்களுக்காக இந்த கண்காட்சியில் 10 கூடங்கள் அடங்கிய விசேடதொரு பார்வையாளர் கூடாரத்தை அமைச்சானது ஏற்பாடு செய்துள்ளது. மைக்ரோ மற்றும் சிறிய மட்ட கைத்தொழில்கள் கூடக் கட்டணத்தின் 50% ஐ செலுத்தி இந்த பார்வையாளர் கூடத்தில் பங்குபற்றலாம்.

தெரிவிற்காக பின்வரும் வகுதிகளின் ஆர்வமுள்ள உற்பத்தியாளர்களிடமிருந்து விண்ணப்பங்களை அமைச்சானது அழைக்கின்றது.

**கண்காட்சியாளர் சுயவிபரம்**

பதப்படுத்தப்பட்ட உணவுகள் மற்றும் குடிமங்கள்
-பழம் மற்றும் காய்கறி சார்ந்த உற்பத்திகள்
-பால் உற்பத்திகள்
-கோழி/இறைச்சி/மீன்
-பிஸ்கட் மற்றும் இனிப்புக்கள்
-சுகாதார உணவுகள் மற்றும் பானங்கள்
-ஏனைய இயைபுடைய உற்பத்திகள்
- பேக்கரி பொருட்கள்
- தேங்காய் சார்ந்த பொருட்கள்
- உண்ணக்கூடிய எண்ணெய்கள்
- தேயிலை (மூலிகை, சேதனம்)
- நறுமணப் பொருட்கள்

**தெரிவு செய்யும் நடைமுறை:**

அமைச்சினால் நியமிக்கப்பட்ட குழுமமொன்றினால் நடாத்தப்படும் நேர்முகப்பரீட்சையொன்றின் மூலம் மேலேயுள்ள உதவிக்காக உயர்ந்த தகைமையுடைய பத்து கைத்தொழிலாளர்கள் தேர்வுசெய்யப்படுவர்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் கீழே குறிப்பிட்டுள்ள QR குறியீடு அல்லது google link மூலமாக 2024 ஜூலை 26 ஆம் திகதிக்கு முன்னராக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

Profood Propack Ag-Biz HUB 2024

"Future of food and beverages"

**2024 ஓகஸ்ட் 23,24,25 ஆம் திகதிகளில் BMICH கண்காட்சி நிலையத்தில்**

Google link: https://shorturl.at/WXFe

**SME Pavilion**
**2024 ஓகஸ்ட்**
**23-25 வரையும்**
**BMICH கண்காட்சி நிலையத்தில்**



செயலாளர்
கைத்தொழில் அமைச்சு
த.பெட்டி 570, 73/1, காலி வீதி, கொழும்பு-03.
மேலதிக தகவலுக்கு : பணிப்பாளர் - அபிவிருத்திப் பிரிவு
தொலைபேசி: 011-2422319, 2432750. தொலைநகல்: 0112432750/2432250
மின்னஞ்சல்: sectordivision4@gmail.com /Web: www.industry.gov.lk

www.profoodpropack.com



**பெறுகை அறிவித்தல்**

**இலங்கை தேசிய வைத்தியசாலை – கொழும்பு –10**

**இலங்கை தேசிய வைத்தியசாலைக்கு சவர்க்கார வகைகளை வழங்குதல்**

இலங்கை தேசிய வைத்தியசாலையின் தேவைப்பாடுகளுக்கு கீழ்க்காணும் உருப்படிகளை கொள்வனவு செய்வதற்காக கேள்விகள் கோரப்படுகின்றன.

| விபரம் | அளவு | இணைப்பு இலக்கம் |
|---|---|---|
| 1. Laundry Soap | 45,000 | SI/10/2024 |
| 2. Toilet Soap | 35,000 | SI/10/2024 |

மேற்படி வழங்களிற்காக தகைமையுள்ள நிறுவனங்கள் மற்றும் தனி நபர்கள் இதற்காக விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டியதுடன் சவர்க்கார வகைகளுக்காக மீளளிக்கப்படாத ரூ. 4500.00 வைப்பை இலங்கை தேசிய வைத்தியசாலையின் காசாளர் பிரிவிற்கு செலுத்திய பின்னர் 2024.07.16 முதல் 2024.08.06 வரை வார நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்திற்குள் இலங்கை தேசிய வைத்தியசாலையின் வழங்கல் பிரிவில் குறித்த கேள்வி நிபந்தனைகளுடனான விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம். 2024.08.07 மு.ப. 10.00 இற்கு இலங்கை தேசிய வைத்தியசாலையின் வழங்கல் பிரிவு அலுவலகத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

**வைத்திய நிபுணர் டபிள்யூ.கே. விக்கிரமசிங்ஹ**
**தலைவர், பிரதேச பெறுகைக்குழு,**
**இலங்கை தேசிய வைத்தியசாலை.**


ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

திங்கள் 2024.07.15

உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 5535 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.40,238,664.00
ஆங்கில எழுத்து M — வெற்றி இலக்கங்கள் 0 7 7 7 9 2

**அத சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 110 — ஆங்கில எழுத்து M — வெற்றி இலக்கங்கள் 7 7 9 2

**கொவிசெத** — சீட்டிழுப்பு இலக்கம் 3777 — சீட்டிழுப்பு திகதி 2024.07.15 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.65,845,535.96
ஆங்கில எழுத்து E — வெற்றி இலக்கங்கள் 17 30 40 44 — விசேட எழுத்து E — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 79584

**Mega POWER** — சீட்டிழுப்பு இலக்கம் 1883 — 2024.07.15 — 46189 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 439,126,186.00
ஆங்கில எழுத்து U — சுப்பர் இலக்கம் 09 — வெற்றி இலக்கங்கள் 02 31 70 73
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**VIP** — திகதி 2024.07.15 — சீட்டிழுப்பு இலக்கம் 0361
ஆங்கில எழுத்து M — வெற்றி இலக்கங்கள் 5 2 9 8 3 2
L7 எழுத்து M — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 32,939,496.88

**ராசி சுப பலன்** — திகதி 2024.07.15 — சீட்டிழுப்பு இலக்கம் 844 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.3,114,368.80
வெற்றி இலக்கினம் மேஷம் — வெற்றி இலக்கங்கள் 21 24 54 56 — தனயோக இலக்கம் 28316 — நாளுக்கான விதி எண் 27

**தன நிதானய** — சீட்டிழுப்பு இலக்கம் 1565 — 2024.07.15 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 101,388,294.72
ஆங்கில எழுத்து K — வெற்றி இலக்கங்கள் 20 22 24 48 — விசேட எழுத்து K — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 12258

# நகர்வலம்



## வட மத்திய மாகாண உள்ளூராட்சி மன்றங்களில் பணிபுரியும் 493 பேருக்கு நிரந்தர நியமனம்

**(திறப்பனை தினகரன் அ .புரம் மேற்கு தினகரன் நிருபர்கள் )**

வட மத்திய மாகாண உள்ளூராட்சி மன்றங்களில் சாதாரண, ஒப்பந்த மற்றும் தற்காலிக அடிப்படையில் பணிபுரியும் 493 பேருக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கி வைக்கப்பட்டன. இந் நிகழ்வு வட மத்திய மாகாண சபை கேட்போர் கூடத்தில் பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் (11 ) இடம் பெற்றது.

இங்கு நியமன கடிதங்களை வழங்கி வைத்து உரையாற்றிய பிரதமர், நாட்டின் பொருளாதாரத்தில் எதிர்மறையான நிலைமைக்கு பதிலாக, தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் புத்திசாலித்தனமான தலைமைத்துவத்தின் காரணத்தால் நாட்டின் பொருளாதாரத்தை நேர்மறையான நிலைக்கு



கொண்டு வர முடிந்ததாக தெரிவித்தார்.இன்று நாட்டின் ஜனாதிபதி, பிரதமர் உட்பட முறையான தலைவர்களால் நாடு நிர்வகிக்கப் படுகிறது என வடமத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார்.

இந் நிகழ்வில் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, அநுராதபுரம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ்.எம். சந்திரசேன, நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சர் சிறிபால கம்லத் போன்றோர்களும் இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றினர்.

நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான யதாமினி குணவர்தன, இஷாக் ரஹ்மான், வீரசேன கமகே, முத்துக்குமாரண, முன்னாள் அமைச்சர்களான பி.ஹரிசன், எச்.பி.சேமசிங்க, வடமத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் எஸ்.எம். ரஞ்சித், உட்பட அரசியல் பிரமுகர்கள், அதிகாரிகளும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

## ஐ.தே.க கொழும்பு மத்திய அமைப்பாளராக ஷபான்

**ருஸைக் பாரூக்**

ஐக்கிய தேசியக் கட்சி முன்னாள் மாநகர சபை உறுப்பினர் ஏ.ஆர்.எம். ஷபான் கொழும்பு மத்திய வலய ஐ.தே.க அமைப்பாளராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கான நியமனக்கடிதம் அண்மையில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான ஸ்ரீகொத்தாவில் வைத்து ஜனாதிபதியால் வழங்கப்பட்டுள்ளது.





இந்நிகழ்வில் ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி உதவித் தலைவர் அகில விராஜ் காரியவசம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## நீலகிரி மஹாசேயவில் புனித நினைவுசின்னங்கள்


### மாபெரும் நிகழ்வுடன் வைக்கப்பட்டன

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன (ஓய்வு) மற்றும் விமானப்படை தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ ஆகியோரின் பங்கேற்பில் கடந்த 15ஆம் திகதி புனித நினைவுச்சின்னங்கள் மற்றும் பொக்கிஷங்கள் வரலாற்று சிறப்புமிக்க நீலகிரி மகா சேயாவில் வைபவரீதியாக வைக்கப்பட்டன.

பாதுகாப்பு அமைச்சின் அறிவுறுத்தலின் பேரில், லஹுகல பகுதியில் அமைந்துள்ள நீலகிரி மகா சேயாவை புனரமைக்கும் பணியை விமானப்படை மேற்கொண்டது. நீலகிரி மஹாசேய லஹுகல தேசிய பூங்காவின் அடர்ந்த காடுகளால் சூழப்பட்டுள்ளது. மகுல் மகா விகாரை லஹுகலவின் ஒரு பகுதியாகும்.

மேலும் கிழக்கு மாகாணத்தின் மிகப் பெரிய ஸ்தூபியாக தொல்பொருள்திணைக்களத்தால்அங்கீகரிக்கப்பட்ட இது கி.மு 3 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது, 215 அடி உயரமும் 104 அடி அகலமும் கொண்டது.

இலங்கை விமானப்படையின்



பூரண பங்களிப்பில் நிர்மாணிக்கப்பட்ட நீலகிரி மஹாசேயவில் பிரித் வழிபாடுகளுடன் புனித நினைவுச் சின்னங்கள் வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதான பௌத்த மதகுருமார்கள் உட்பட இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விகும் லியனகே, சிவில் பாதுகாப்பு திணைக்கள பணிப்பாளர் ஜெனரல் எயார் வைஸ் மார்ஷல் ரொஷான் பியன்வில, தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் துசித மெண்டிஸ் மற்றும் பௌத்த மத பெரியார்கள் உட்பட பெருந்தொகையான பக்தர்கள் கலந்துகொண்டனர்.

## மூளைக்காய்ச்சலால் சிறைக்கைதி உயிரிழப்பு

காலி சிறைச்சாலையில் சம்பவம்

**(வெலிகம தினகரன் நிருபர்)**

காலி சிறைச்சாலையில் மூளைக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு கைதியொருவர் உயிரிழந்துள்ளார். அத்துடன் மூளைக் காய்ச்சல் என சந்தேகிக்கப்படும் 3 கைதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் சுகாதாரப் பணிப்பாளர் டொக்டர் ஹேமந்த ரணசிங்க தெரிவித்துள்ளார். மேற்படி கைதிகள் தற்போது காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மூளைக்காய்ச்சல் நோயினால் காலி வந்துரம்ப பகுதியைச் சேர்ந்த 26 வயதுடையவரே உயிரிழந்தார். போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் அவர், கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். தற்போது, கைதிகளை உறவினர்கள் சந்திக்கும் வாய்ப்பை தற்காலிகமாக சிறைச்சாலை நிர்வாகம் இடைநிறுத்தியுள்ளது.

## பாதாள உலகக் குழுக்களை ஒடுக்குதல்; 800 பேர் கைது

சமூகத்திலிருந்து ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல்களை இல்லாதொழிக்கும் செயற்பாடுகள் மிகச் சிறந்த திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கு போதே அவர் இதனை தெரிவித்தார்.

அதன்படி கடந்த மூன்று நான்கு மாதங்களில் 800 க்கும் மேற்பட்ட பாதாள உலக கும்பல்களைச்சேர்ந்த பலர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் மக்களின் பாதுகாப்புக்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் பொலிஸார் எடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த இரண்டரை மாதங்களில் எவ்வித அசம்பாவிதங்களும் இடம் பெறவில்லையெனவும், அண்மைய சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் செயற்பட்டு வருவதாகவும் பொலிஸ் மாஅதிபர் தெரிவித்தார்.

தற்போது நான்கில் மூன்று பாதாள உலகக் குழுக்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் மாஅதிபர் தெரிவித்தார்.



புனித அல் குர்ஆனை சிறந்த முறையில் மனப்பாடம் செய்து முடித்த இரண்டு மாணவர்களை இலங்கைக்கான சவுதி அரேபியத் தூதுவர் காலித் ஹமூத் அல் கஹ்தானி கொழும்பிலுள்ள சவுதி அரேபிய தூதரகத்திற்கு வரவழைத்து வாழ்த்தி பாராட்டி அவர்களுக்கு பரிசில்களும் வழங்கி வைத்தார். முஹம்மட் பஸ்லான் முஹம்மட் பைரூஸ், முஹம்மட் சரீப் முஹம்மட் ஹில்மி ஆகிய இரு மாணவர்களும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## களுத்துறை மாவட்டத்தில் ஜனாதிபதி புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு இன்று

**(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக் கருவின்படி நாடளாவிய பாடசாலை மாணவர்களின் கல்வியை மேம்படுத்த நடைமுறைப்படுத்தப்படும் ஜனாதிபதி கல்வி புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் களுத்துறை மாவட்டத்தில் 4570 மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு இன்று புதன்கிழமை (17) களுத்துறை பொது விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது,

இந்த நிகழ்வில் களுத்துறை மாவட்டத்தின் மூன்று வலயங்களைச் சேர்ந்த 4570 மாணவர்கள் புலமைப் பரிசில் பெறவுள்ளனர். இதில் தரம் ஒன்று முதல் பதினொன்று வரையான 4390 மாணவர்களும் க.பொ.த.உயர்தர மாணவர்கள் 180 பேரும் உள்ளடங்கியுள்ளனர்.

மேற்படி புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு காலை 9 மணி மற்றும் மாலை 2 மணிக்கும் இரண்டு கட்டங்களாக நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் களுத்துறை மாவட்டத்தைச் சேர்ந்த அரசியல் பிரமுகர்கள், அரச உயரதிகாரிகளும் கலந்துகொள்ளவுள்ளனர்.

## தஞ்சாவூர் பட்டமளிப்பு விழாவில் அதிதியாக ரவூப் ஹக்கீம் எம்.பி





தமிழ்நாடு, திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தோடு ஒன்றிணைக்கப்பட்டுள்ள தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் ஆர்.டி.பி கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் 18ஆம், 19ஆம், மற்றும் 20ஆம் பட்டமளிப்பு வைபவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை (14) கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கல்லூரியின் கல்வி குழுமத்தின் போஷகர் எம். ஏ. தாவூத் பாட்ஷா தலைமை வகித்தார். கல்லூரி முதல்வர் எம். முகமது முகைதீன் வரவேற்புரை ஆற்றினார். அதில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் பேராசிரியர் கே .எம். காதர் முகைதீன், இலங்கை பாராளுமன்ற உறுப்பினர், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோர் கலந்து கொண்டு 717 மாணவ மாணவிகளுக்குப் பட்டங்களை வழங்கி வைத்து சிறப்புரை ஆற்றினர்.

பெண்கள் ஒரு காலத்தில் உயர் கல்வி கற்க தயக்கம் காட்டியதையும், தற்போது பெண்கள் பல்வேறு துறைகளிலும் பட்டங்கள் மற்றும் தங்கப் பதக்கங்கள் பெற்று முதல் நிலைக்கு வந்துள்ளதையும் மையப்படுத்தியதாக அவர்களின் உரைகள் அமைந்திருந்தன. விமரிசையாக நடைபெற்ற இவ்விழாவில் கல்வி குழுமத்தின் நிர்வாகிகள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் , மாணவிகள் மற்றும் ஊழியர்களும் கலந்து கொண்டனர்.

## நாட்டில் டெங்கு நோய் அதிகரிப்பு 2024 இதுவரை 30,000 பேர் பதிவு

### 12 மரணங்கள்,கொழும்பிலேயே தீவிரம்



2024 இல் இதுவரை 30,000 க்கும் அதிகமான டெங்கு நோயாளர் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த அறிக்கையின்படி நாடளாவிய ரீதியில் இந்த வருடம் 12 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளதுடன் 30,227 டெங்கு நோயாளர் பதிவாகியுள்ளனர். கொழும்பு மாவட்டத்தில் 6,965 டெங்கு நோயாளரும், கம்பஹா மாவட்டத்தில் 3,126 டெங்கு நோயாளரும், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 3,998 டெங்கு நோயாளரும், கண்டி மாவட்டத்தில் 2, 441 டெங்கு நோயாளரும் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது. இந்தத் தரவுகளின்படி கொழும்பு மாவட்டத்திலேயே அதிகளவில் டெங்கு நோயாளர் பதிவாகியுள்ளதுடன் நாடளாவிய ரீதியில் 21 சுகாதார வைத்திய அதிகார பிரிவுகள் டெங்கு அபாய வலயங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.



முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தலைமையின் கீழ் இளம் தலைமுறையினருக்கு ஆக்கபூர்வமான ஆலோசனை வழங்கும் கூட்டம் நடைபெற்றது. கொழும்பு அப்பேகம மண்டபத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நிரஞ்சன் பிரேமரத்ன தலைமையில் நடைபெற்றபோது, சர்வ மத தலைவர்களான கலஹமே தம்மரன்சி தேரர், டாக்டர் ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா, மௌலவி முசாமில், அருட்தந்தை சுரேன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கொழும்பு விவேகானந்தா OBA ஏற்பாட்டில் கிரிக்கட் போட்டி

கொழும்பு விவேகானந்தா கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் ஏற்பாடு செய்துள்ள 'Kish விவேகன்ஸ் ப்றீமியர் லீக் 2024' கிரிக்கட் போட்டி எதிர்வரும் ஜுலை 21ம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணி முதல் கொழும்பு முவர்ஸ் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பழைய மாணவர்களுக்கிடையில் நடைபெறும் அணிக்கு அறுவர் கொண்ட மாபெரும் மென்பந்து கிரிக்கட் போட்டியில் மொத்தமாக நான்கு குழுக்களின் கீழ் 21 அணிகள் பங்கேற்கின்றன.

'A' குழுவில் நியூ செட்டி செலஞ்சர்ஸ், கொழும்பு ஸ்மேஸ் கிங்ஸ், ஜெம்பட்டா ஸ்ட்ரைக்கர்ஸ், கொட்டஹேன சுப்பர் கிங்ஸ், எலகந்த ஜே.டி போய்ஸ் ஆகிய ஐந்து அணிகளும் 'B' குழுவில் ரட்ணம் செலஞ்சர்ஸ், தமிழ் நாடு லயன்ஸ், கிரான்ட்பாஸ் ஸ்ட்ரைக்கர்ஸ், ஜிந்துப்பிட்டி விவேகன்ஸ், கொச்சிக்கடை கோப்ராஸ் ஆகிய ஐந்து அணிகளும் 'C' குழுவில் புளுமென்டல் கவாலியர்ஸ், சங்கமித்த ஸ்ட்ரைக்கர்ஸ், வத்தளை சாணக்கியன்ஸ், தெமட்டகொடை நைட் ரைடர்ஸ், ஆர்மர் தண்டர்ஸ் ஆகிய ஐந்து அணிகளும் 'D' குழுவில் கொழும்போ வொரியர்ஸ், கதிரேஷன் வெஸ்டர்ன் சிசி, பெற்றா டைட்டன்ஸ்,பம்பா ஸ்ட்ரைக்கர்ஸ், வாசல ஸ்மேசர்ஸ், மோதர சேச்சர்ஸ் ஆகிய ஆறு அணிகளும் பங்குபற்றுகின்றன.

சம்பியன் கிண்ணத்தை வெல்லும் அணிக்கு வெற்றிக் கிண்ணத்துடன் ஒரு இலட்சம் ரூபா பணப் பரிசும், இரண்டாம் இடத்தைப் பெறும் அணிக்கு கிண்ணத்துடன் ஐம்பதாயிரம் பணப்பரிசும், மேலும் பல பரிசுகளும் வழங்கப்படவுள்ளன.

மகளிருக்கான சிறப்பு கிரிக்கட் போட்டி ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## வாகன விபத்தில் இரு இளைஞர்கள் காயம்

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

பாதெனிய அநுராதபுரம் வீதியில் செனரத்கம பகுதியில் (13) பிற்பகல் இடம்பெற்ற வாகன விபத்தில் இரு இளைஞர்கள் காயமடைந்துள்ளனர்.

அநுராதபுரத்தில் இருந்து பயணித்த கெப் வாகனம் ஒன்றின் சாரதிக்கு தூக்கம் ஏற்பட்டமையினால் எதிர்த்திசையில் பயணித்த மோட்டார் சைக்கிளுடன் நேருக்கு நேர் மோதி குறித்த விபத்து இடம் பெற்றுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர்கள் இருவரும் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேற்படி விபத்து தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



அக்குறணை தொடங்கெள்ள அல் இல்மா (Al ilma) முன்பள்ளி சிறுவர்களின் வியாபார சந்தை, முன்பள்ளி வளாகத்தில் (14) இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படம். இதில் பெற்றோர்கள் பொருட்களை கொள்வனவு செய்தனர்.

# கிழக்கின் குரல்

கிழக்கில்

## போதைப்பொருள் பாவனையை தடுக்கும் விழிப்புணர்வு திட்டம் ஆளுநரால் ஆரம்பிப்பு

**கிண்ணியா மத்திய நிருபர் கியாஸ்**





கிழக்கு மாகாணத்தில் போதைப் பொருள் பாவனையை தடுக்கும் விழிப்புணர்வு செயற்திட்டத்தை கல்வி அமைச்சுடன் இணைந்து கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆரம்பித்து வைத்தார்.

முதல் கட்டமாக மூதூர் சோனையூர் கல்லூரி, ஶ்ரீ ஹன்பஹா வித்தியாலயம், இலங்குதுறை முகத் துவாரம் இந்து கல்லூரி ஆகிய பாட சாலைகளில் இந்த விழிப்புணர்வு நிகழ்வு இடம்பெற்றது. இதில் 1000 க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிலையில் மூதூர் சேனையூர் மத்திய கல்லூரியில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை (15) இடம் பெற்ற இந்த விழிப்புணர்வு நிகழ்வில் 350 க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இதில் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் சுஜாதா, மூதூர் வலயக் கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், பாடசாலை மாண வர்களால் அழைத்து வரப்பட்டு, பொன்னாடை போர்த்தி கௌரவிக் கப்பட்டார்.

இதன்போது மூதூர் சேனையூர் மத்திய கல்லூரியின் குறைபாடுகள் தொடர்பாகவும் பாடசாலை சமூ கத்தினரிடம் ஆளுநர் கேட்டறிந்து கொண்டார்.

இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து போதைப்பொ ருள் விற்பனை இடம்பெற்று வரு கிறது. இதனால் கிழக்கு மாகாண பாடசாலைகளில் போதைப்பொ ருள் தொடர்பான விழிப்புணர்வு செயற்பாடுகளை ஆரம்பித்துள் ளோம் என்றார். போதைப்பொருள் பாவனையால் ஏற்படுகின்ற பாதிப் புகள், விற்பனை செய்பவர்களை அடையாளம் கண்டு யாருக்கு தகவல் வழங்குவது தொடர்பாக பாடசாலை மாணவர்களுக்கு விழிப் பூட்டும் நிகழ்வை கிழக்கு மாகாண ரீதியில் ஆரம்பித்துள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார்.

## பரசூட் முறையில் செய்கை பண்ணப்பட்ட நெல் அறுவடை



**காரைதீவு குறூப் நிருபர்**

மட்டக்களப்பு மாவட்டத்தின் கொக்கட்டிச்சோலை விவசாய விரிவாக்கல் நிலையத்திற்குட் பட்ட மணற்பிட்டி கிராமத்தில் பரசூட் முறையில் செய்கை பண் ணப்பட்ட நெற்செய்கையின் அறுவடை விழா நேற்று இடம் பெற்றது.

தொழில்நுட்ப உத்தியோகத் தர் துஷாந் தலைமையில் நடை பெற்ற நிகழ்வில் தெற்கு வலய உதவி விவசாய பணிப்பாளர் நித்தியா நவரூபன், தெற்கு வலய விவசாய போதனாசிரியர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாயிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். இதன் போது பரசூட் முறையில் செய்கை பண்ணப்பட்ட நெற்செய்கை அறுவடை செய்யப்பட்டு பயிர் வெட்டு அளவீடு செய்யப்பட்டது. வீசி விதைத்தலை விடவும் பரசூட் முறையில் அதிக விளைச்சல் கிடைத்ததோடு உற்பத்தி செலவும் குறைவாக இருந்தமை குறிப்பிடத் தக்கது.

மட்டக்களப்பு மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் எம்.பர மேஸ்வரனின் வழிகாட்டலின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தின் பல இடங்களிலும் இவ்வாறான முன்மாதிரி துண்டச்செய்கைகள் செய்கை பண்ணப்பட்டமை குறிப் பிடத்தக்கது.

## சிறுவர் பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்வு

**திராய்க்கேணி தினகரன் நிருபர்**



தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தேசிய வேலைத்திட்டத் தின் கீழ் சிறுவர் பாதுகாப்பு விழிப் புணர்வு நிகழ்ச்சி அட்டாளைச் சேனை தேசிய கல் வியியற் கல்லூரி கட்டுறு பயிலுனர் ஆசிரியர்களுக் கான நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை (15) கல்லூரியின் கேட்போர் கூடத்தில் பீடாதிபதி கே.புண்ணியமூர்த்தியின் ஒருங் கிணைப்பின் கீழ் அம்பாறை மாவட்ட உளச்சமூக உத்தியோகத் தர் யூ எல்.அஷாருடீன் தலைமை யில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அர சாங்க அதிபர் எஸ்.ஜெகராஜன் கலந்து கொண்டதுடன் கௌரவ அதிதிகளாக உப பீடாதிபதிகளான எம்.சி.ஜுனைட், எம்.ஐ.ஜெள பர் மற்றும் ஏ.ஜீ.அஹமட் நாளீர், அம்பாறை மாவட்ட சிறுவர் பாது காப்பு உத்தியோகத்தர் தம்மிகா குல துங்க, பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்களான எஸ்.சியாத், எஸ்.ஜெகநாதன் மற்றும் விரிவுரை யாளர்கள், கல்விக் கல்லூரி ஆசிரிய மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். இதன் போது வள வாளர்களாக அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஐ.எல்.எம்.றிபாஸ் மற்றும் உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.ஐ.வா ஹிட் ஆகியோர் கலந்து சிறப் பித்தனர்.

## தேசிய தொழில் தகைமை பயிற்சிகளுக்கு விண்ணப்பம் கோரல்

**ஒலுவில் விசேட நிருபர்**

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் கீழ் அம்பாறை மாவட் டத்தில் இயங்கும் தொழிற்பயிற்சி நிலையங்களில் தேசிய தொழில் தகைமை (என்.வி.கியு) மட்டம் 3 மற்றும் மட்டம் 4 பயிற்சி நெறிக ளுக்கான விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளதாக, இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் மாவட்ட பிரதிப் பணிப்பாளர் ரீ. வினோதராஜா தெரிவித்தார். நிந்தவூர் மாவட்ட தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் சம்மாந்துறை, சாய்ந்தமருது, அக்க ரைப்பற்று, மத்தியமுகாம், காரைதீவு, பொத்துவில், திருக்கோவில் ஆகிய பயிற்சி நிலையங்களில் கீழ் குறிப்பி டப்படும் பயிற்சிநெறிகள் அந்தந்த பயிற்சி நிலையங்களுக்கென தெரிவு செய்யபட்ட பயிற்சிநெறிகள் ஆரம் பிக்கப்படவுள்ளன. பயிற்சி நிலையங் களில் தையல், கணினி வன்பொருள் தொழில்நுட்பவியலாளர், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலா ளர், கணினி வரைகலை வடிவமைப் பாளர், மின்னியலாளர், அலுமீனியம் பொருத்துனர், முச்சக்கரவண்டி திருத் துனர், மரக் கைவினைஞர், தர உத்தர வாத மேற்பார்வையாளர், அதிவேக தையல் இயந்திர இயக்குனர், இலத் திரனியல் மோட்டர் வைண்டர், உருக்கி ஒட்டுனர் உள்ளிட்ட பயிற்சி நெறிகளை தொடர்வதற்காக விண் ணப்பிக்க முடியும்.விண்ணப்பங் களை தொழிற்பயிற்சி நிலையங்களில் நேரடியாக கையளிக்கலாம் அல்லது (dvtampara@vtasl.gov.lk) மின்னஞ்சல் ஊடாக அனுப்பி வைக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## திருக்கோவில் சித்திரவேலாயுத சுவாமி ஆலய உற்சவம்

**காரைதீவு குறூப் நிருபர்**

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற திருக்கோவில் ஶ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தின் வருடாந்த உற்சவம் நாளை 18ஆம் திகதி கொடியேற்றத் துடன் ஆரம்பமாக உள்ளதாக ஆலய தலைவர் சுந்தரலிங்கம் சுரேஷ் தெரிவித்தார்.

இந்த உற்சவம் 18 நாட்கள் நடைபெற்று ஆகஸ்ட் மாதம் 4ஆம் திகதி தீர்த்த உற்சவத்து டன் நிறைவடைய இருக்கின் றது. ஆலய பிரதமகுரு சிவஶ்ரீ சண்முகமகேஸ்வரக் குருக்கள் முன்னிலையில் ஆலயகுரு சிவஶ்ரீ அங்குசநாதக் குருக்கள் தலைமையில் உற்சவம் நடை பெறவுள்ளது.

இதேவேளை பிதிர்க்கடன் செலுத்துகின்ற ஆடி அமாவாசை உற்சவத்தில் பல்லாயிரக்கணக் கான மக்கள் கலந்து கொள்வார் கள் என்பதற்காக முன்னேற்பாடு கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தீர்த்த தினத்தன்று பிதிர்க்கடன் செலுத்துகின்றவர்களுக்கு வச தியாக பத்து சிவாச்சாரியார்கள் உள்ளடக்கி பிதிர்க்கடன் நிறை வேற்றுகின்ற வேலை முன்னெ டுக்கப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.



2024 ஆம் ஆண்டுக்கான மூதூர் வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் முதலிடம் பெற்று மாகாணத்திற்கு முதல் தடவையாக தெரிவாகிய அல்தாஜ் மாணவர்களை கௌரவித்து பரிசில் வழங்கும் நிகழ்வு அதிபர் முகம்மது முகைதீன் நௌபீக் தலைமையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (15) இடம்பெற்றது.


## தேசிய வைத்தியசாலை – கண்டி

### மருத்துவ உபகரணங்கள் கொள்வனவு செய்தல்

### விலைமனுக்களுக்கான அழைப்பு

கண்டி பொது வைத்தியசாலைக்கு பின்வரும் மருத்துவ உபகரணங்கள் மற்றும் ஆய்வுகூட உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக தகைமை வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து பிராந்திய பெறுகைக் குழுவின் தலைவரினால் கேள்விகள் கோரப்படுகின்றன. 2024.08.08ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும் என்பதுடன் அன்றைய தினம் மு.ப. 10.30 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் விலைகளை அனுப்புமாறு இத்தால் கோரப்படுகின்றது. கேள்விப் படிவங்களை இயைபுடைய ஏனைய ஆவணங்கள் சகிதம் ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' எனத் தயாரித்து ''தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, தேசிய வைத்தியசாலை, கண்டி'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைப்பதானால் தலைமைக் கணக்காளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் உள்ளிடலாம். கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வி திறக்கப்படும் திகதி மற்றும் ''குறித்த மருத்துவ உபகரணங்களின் பெயர்'' குறிப்பிடப்படுதல் வேண்டும்.

| | மருத்துவ மற்றும் ஆய்வுகூட உபகரணங்களின் பெயர் | எண்ணிக்கை | ஒப்பந்த இலக்கம் | கேள்விப் பிணை முறியின் பெறுமதி |
|---|---|---|---|---|
| 1 | Orthopedic Drill | 01 | NHK/FN/01/2024 | 200,000.00 |
| 2 | Neonatal Ventilator with HFOV | 01 | NHK/FN/06/2024 | 300,000.00 |
| 3 | Standard Bronchoscope & Thoracoscope System | 01 | NHK/FN/07/2024 | 500,000.00 |
| 4 | Slit Lamp with Tonometer | 05 | NHK/FN/09/2024 | 300,000.00 |
| 5 | Scanner Ultrasound Gyn & Obs | 01 | NHK/FN/10/2024 | 200,000.00 |
| 6 | Defibrillator | 02 | NHK/FN/13/2024 | 50,000.00 |
| 7 | Video Bronchoscope & Rhino - Laryngoscope System | 01 | NHK/FN/16/2024 | 300,000.00 |
| 8 | ENT Coblator Surgery System | 01 | NHK/FN/18/2024 | 75,000.00 |

1. கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்கு 5000.00 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை கண்டி தேசிய வைத்தியசாலை சிறாப்பருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் மூலப்பிரதியுடன் வியாபாரப் பெயர்ப் பதிவுச் சான்றிதழின் சான்றுபடுத்திய பிரதியொன்றையும் மற்றும் வேண்டுகோள் கடிதமொன்றையும் சமர்ப்பித்தல் வேண்டும். 2024-07-18ஆம் திகதி முதல் 2024-08-07ஆம் திகதி வரையான சாதாரண கடமை நாட்களில் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 2.30 வரையான காலத்தில் கண்டி தேசிய வைத்தியசாலையின் கணக்கியல் பிரிவில் கேள்வி மாதிரிப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். பிரதிநிதியொருவர் வருகை தருவதானால் விண்ணப்பதாரர் அதிகாரம் வழங்கிய கடிதம் மற்றும் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தேசிய அடையாள அட்டையையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
2. கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்கு முன் கண்டி தேசிய வைத்தியசாலை கணக்குப் பிரிவில் கேள்வி மாதிரிப் படிவங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
3. சகல கேள்விகளுடனும் கண்டி தேசிய வைத்தியசாலை பணிப்பாளரின் பெயரில் மேற்கூறிய அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பெறுமதியுடைய 2024.12.31 வரையில் செல்லுபடியாகும் தன்மையிலுள்ள கேள்விப் பிணை முறியொன்றை கேள்வியின் மூலப்பிரதியுடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும்.
4. கேள்வி மாதிரிப் படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் விபரக்குறிப்பு அறிவுறுத்தல்களுக்கமைய கேள்விகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
5. இது தொடர்பான கேள்வி முன்னோடிக் கூட்டம் 2024.07.31 ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு கண்டி தேசிய வைத்தியசாலை பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெறும். இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்வது கட்டாயமாகும்.
6. 2024.08.08 ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு கேள்விகள் ஏற்றுக்கொள்ளுதல் நிறைவடைந்த உடனடுத்து குறித்த கேள்விகள் கண்டி தேசிய வைத்தியசாலை பணிப்பாளரின் அலுவலகத்தில் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் வேளையில் விண்ணப்பதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம். பிரதிநிதியொருவர் வருகை தருவதானால் விண்ணப்பதாரர் அதிகாரம் வழங்கிய கடிதம் மற்றும் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தேசிய அடையாள அட்டையையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
7. 5 மில்லியன் ரூபாவிற்கு (5,000,000.00) மேற்பட்ட கேள்விகளுக்காக 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து பெற்றுக்கொண்ட PCA 03 சான்றிதழின் மூலப்பிரதியை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
8. திறந்த போட்டி முறையின் (NCB) கீழ் கேள்விகள் கோரப்படும்.
9. கண்டி தேசிய வைத்தியசாலையின் பிராந்திய பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும் என்பதை கேள்விதாரர் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**தேசிய வைத்தியசாலை,**
**கண்டி.**


## மர்ஹூம் ஷைகுல் பலாஹ் மறைந்து இன்று எட்டு ஆண்டுகள் பூர்த்தி

### காத்தான்குடியில் துஆ பிரார்த்தனை



மர்ஹூம் மௌலானா மௌலவி எம்.ஏ முகம் மது அப்துல்லாஹ் ஆலிம் ரஹ்மானி ஹஸ்ரத் அவர் கள் மரணித்து இன்று (17) எட்டு ஆண்டுகள் நிறைவை யொட்டி பல நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

மர்ஹூம் அப்துல்லாஹ் ஹஸ்ரத், காத்தான்குடி ஜாமிஅதுல் பலாஹ் அறபுக்கல்லூரியில் அறுபது ஆண்டுகளுக்கு மேலாக அதிபராக சமூக சேவகராக பணியாற்றி மக்கள் மனசை வென்ற மகான்.

கதீப்மார் இமாம்களை சமூக மேம் பாட்டிற்கு நெறிப்படுத்துவதிலும் ஓர் உத்தம புருஷராக செயல்பட்டவர்கள் மர்ஹூம் ஷைகுல் பலாஹ்.

ஒவ்வொரு வருடமும் முஹர் ரம் ஆஷூரா தினம் மர்ஹூம் ஷைகுல் பலாஹ் அவர்களின் வாழ்க்கை வரலாறை மட்டு மல்ல அறிவுப்பணி செய்த தியாகத்தையும் தத்துவத்தை யும் அற்புதமாக ஞாபகப்ப டுத்தும் சித்தரித்துக் காட்டும் நாள். கல்விக்கு உயிரூட்டி பல ஆலிம்கள் அறிவாளி களை தோற்றுவித்து விட்டு மரணித்தாலும் அவர்கள் இன்னும் சமுதாயத்தின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் நிலையை ஆஷூரா நாள் நினைவுபடுத்துகிறது. அது மட் டுமல்ல காத்த மண்ணுக்கு அனர்த் தங்கள் ஏற்பட்ட போதெல்லாம் மக்களின் விடிவுக்காக துடியாய்த் துடித்துக் கொண்டு தொழுகை துஆப் பிரார்த்தனையில் ஈடுபடுவார்கள். பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவ தில் அனுசரிப்பதில் அளவு கடந்த ஓர் அலாதி அவர்களுக்கு. அவர்கள் மரணித்தாலும் வாழ்ந்து கொண்டிருக் கிறார்கள்.

அவர்கள் அடக்கம் செய்யப்பட் டிருக்கும் மக்பறாவுக்கு சென்று பார்த்தால் அவர்களின் மாணவர்கள் உட்பட மக்கள் தினமும் பிரார்த் தனை செய்வதைக் காணலாம். நாம னைவரும் அவர்களுக்கு ஜன்னதுல் பிர்தவ்ஸ் சுவனத்தை கொடுப்பானாக என பிரார்த்திப்போம். காத்தான்குடி ஜாமிஅதுல் பலாஹ் அறபுக்கல்லூரி அதன் தனித்துவம் பேணி நிலைத்து நிற்பதற்கு பொருளாதார ரீதியாக ஒரு நிலையான ஸ்த்திரமான தர்மத்தை உருவாக்கி விட்டு சென்ற அவர்களின் பணி மகத்தானது என்பதை யாராலும் மறக்க முடியாத ஓர் அம்சம்.

**மௌலவி எஸ்எம்எம் முஸ்தபா பலாஹி**

# 52 மனித எச்சங்களுடன் கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி அகழ்வு பணிகள் நிறுத்தம்

(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனிதபுதைகுழி அகழ்வு பணிகள் நேற்றுடன் நிறைவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் 29 ஆம் திகதி மனிதபுதைக்குழி இனம் காணப்பட்ட நிலையில் மூன்று கட்டங்களாக அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டு இதுவரை 52 மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன. இந்நிலையில் நேற்றுடன் அகழ்வு பணிகள் நிறுத்தப்பட்டன.

இரண்டு கட்டங்களின் போது 40 மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன. மூன்றாம் கட்ட அகழ்வு கடந்த 04.07.2024 அன்று ஆரம்பமாகி 15.07.2024 வரை 12 மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இறுதி நாளான நேற்று சட்ட வைத்திய அதிகாரி க.வாசுதேவா, பேராசிரியர் ராஜ் சோமதேவா, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பான சட்டத்தரணி நிரஞ்சன், பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன், கொக்கிளாய் பொலிஸ் நிலையபொறுப்பதிகாரி, கொக்கிளாய் பகுதி கிராம அலுவலகர் ஆகியோர் முன்னிலையில் மூன்றாம் கட்ட அகழ்வு பணியில் மீட்கப்பட்ட மனித எச்சங்கள் நீதிபதி முன்னிலையில் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.



52 மனித எச்சங்களுடன் சான்று ஆதாரப்பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன. தொல்பொருள் பேராசிரியர் ராஜ்சோமதேவ மற்றும் ஸ்கான் பரிசோதனை முடிவுகளின் பிரகாரம் மனிதப்புதைகுழி மேலும் நீடிப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்ற காரணத்தால் நீதிமன்ற அனுமதியுடன் பகுதியளவில் மூடப்பட்டுள்ளன.

இன்னும் ஒருசில தினங்களில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பணியகத்தை சேர்ந்த அதிகாரிகள் பார்வையிட்டு முற்றுமுழுதாக மனித புதைகுழிகளை மூடுவார்கள் என முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி க.வசுதேவா தெரிவித்தார்.

குறித்த மனிதபுதைகுழி மூடும் போது நிலத்தில் குற்றவியல் பிரதேசம் என்ற எச்சரிக்கை துண்டு வழக்கு எண் ஏ.ஆர் 804/ 2024 என்றும் குற்றவியல் நீதிமன்றம் முல்லைத்தீவு 2023-2024க்கு இடையில் தோண்டப்பட்டது என்றும் எழுதப்பட்ட மண்ணுள் பிரிகையடையமுடியாத இறப்பர் போட்களும் போடப்பட்டு மூடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கின் உதயம்

## அரியாலை சனசமூக நிலைய 75 ஆவது ஆண்டு நிகழ்வு

### பட்டிமன்றம் புகழ் ராஜா, பாரதிபாஸ்கர் யாழ். விஜயம்

அரியாலை சனசமூக நிலையத்தின் 75 ஆவது ஆண்டு நிகழ்வின் ஓரங்கமாக நடைபெறும் இலக்கிய விழாவில் கலந்து கொள்வதற்காக உலகப்புகழ் பெற்ற பேச்சாளர்களான பட்டிமன்றம் ராஜா, பாரதி பாஸ்கர் இருவரும் யாழ்ப்பாணம் வருகைதருகின்றனர்.

நாளை (18) மாலை 3.30 மணிக்கு யாழ்ப்பாண கலாசார நிலையத்தில் இவர்களுக்கான வரவேற்பு நிகழ்வு நடைபெறும்.

இந்நிகழ்வில் பாடசாலை சொற்சமர் விவாத அணிகளில் பங்கேற்போர்மற்றும்பட்டிமன்றங்களில்பங்கேற்போர் பயன்பெறும் வகையில் 'விவாத மேடையைக் கையாள்வது எப்படி' என்ற தொனிப்பொருளில் இருவரும் கருத்துரைகளை வழங்குவர்.

இதில் வயது வேறுபாடுன்றி ஆர்வமுள்ள எவரும் பங்குபற்றலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை எதிர்வரும் வெள்ளிக்கிழமை இரவு அரியாலை சனசமூக நிலையத்தின் 75 ஆவது ஆண்டு விழா இலக்கியவிழா மாலை 6.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் இரவு 8.30 மணியளவில் 'வாழ்வில் எப்போதும் உறுதுணையாக இருப்பது உறவா? நட்பா? 'என்ற பொருளில் பட்டிமன்றம் ராஜா தலைமையில் பாரதிபாஸ்கர் மற்றும் யாழ்ப்பாணப் பேச்சாளர்கள் பங்கேற்கும் பட்டிமண்டபம் நடைபெறவுள்ளது.



100 மணித்தியாலங்கள் கொண்ட இரண்டாம் மொழி சிங்களப் பயிற்சி நெறியை பூர்த்தி செய்த யாழ். போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் பரிசோதகர், சுகாதார உதவியாளர்கள் மற்றும் சாரதிகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வுகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த. சத்தியமூர்த்தி தலைமையில் அண்மையில் நடைபெற்றது.



தென்மராட்சி மீசாலை பகுதியில் அமைந்துள்ள பாலையடி விநாயகர் ஆலயத்தில் அண்மையில் 38 வயதான பெண்ணொருவர் தூக்குக் காவடி எடுத்து நேர்த்திக்கடனை நிறைவேற்றியுள்ளார்.

(படம்: சாவகச்சேரி விசேட நிருபர்)

## சுகாதார நடைமுறைகளை பின்பற்றாத உணவகங்கள் மீது சட்ட நடவடிக்கை

(கரவெட்டி தினகரன் நிருபர்)

பருத்தித்துறை நகர சபைக்குட்பட்ட 05 உணவு கையாளும் நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

பருத்தித்துறை நகர் பிரதேசத்தில் காணப்படுகின்ற உணவு கையாளும் நிலையங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை நகரசபையின் பொதுச் சுகாதார பரிசோதகர் தலைமையிலான அணியினர் சகிதம் இரவு நேர பரிசோதனை செய்யப்பட்டதுடன் சுகாதார நடைமுறைகளை பின்பற்றாத 05 உணவு கையாளும் நிலையங்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வடமராட்சியில் அடுத்த மாதம் கந்தபுராண விழா; கௌரவிப்பு, பட்டிமன்றம் நிகழ்ச்சிகளும் ஏற்பாடு

(கரவெட்டி தினகரன் நிருபர்)

வடமராட்சியில் அடுத்த மாதம் நடுப்பகுதியில் புலோலி கந்தபுராணக் கழகத்தினால் கந்தபுராண விழா வெகுவிமர்சையாக நடத்தப்படவுள்ளது.

இவ்விழாவில் ஆலய நிர்வாகத்தினர் புராண படனத்துக்கு உபயம் செய்து புராணம் படிப்பவர்களுக்கு அன்னம் கொடுத்து மதிப்பளிக்கின்றனர். ஆலய குருமார்கள், அடியவர்கள், புராணபடலம் செய்யும் பௌராணிகர்கள், புராணத்துக்கு உரை எழுதியவர்கள் என மூன்று வகையானோர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இவ்விழாவில் 'கந்த புராணக் கலாசாரம் புராணம் படிக்கும் ஆலயங்களும் பௌராணிகர்களும்', 'வடமராட்சி மண்ணின் பதிவு' ஆகிய, இரு நூல்கள் வெளியிடப்படவுள்ளன.

பௌராணிகர்கள் தங்கள் பற்றிய கட்டுரையொன்றையும் புகைப்படம் ஒன்றையும் தந்து



உதவுமாறு கேட்கப்பட்டுள்ளனர். கட்டுரையில் பிறந்த ஆண்டு, குடும்ப விபரம், கல்வித்தகைமை, பணியாற்றிய விபரங்கள், படிக்கும் புராணம், ஆலயங்கள் பற்றிய விபரங்கள், படிக்கத் தொடங்கிய காலம், அனுபவம், படித்த புராணச் செய்யுள் ஒன்று, நூல்கள் எழுதியிருந்தால் அவை பற்றிய விபரங்கள், புராணப்படிப்பின் ஆசிரியர் விபரங்கள் என்பவற்றை உள்ளடக்க வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வதியும் பௌராணிகர்களும் விபரங்களை அனுப்பலாமென மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பிறந்த ஆண்டின் அடிப்படையில் தான் பௌராணிகள் விபரங்கள் நூலில் பதிவு செய்யப்படும். இது தொடர்பாக கலைநிகழ்ச்சிகளைச் செய்யும் கலைஞர்களும், கருத்துகள் ஆலோசனைகளைத் தெரிவிக்க விரும்பும் அன்பர்களும் 0774393118 என்னும் தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம்.

கந்தபுராண விழா வடமராட்சி மண்ணில் அடுத்த மாதம் 17 ஆம் திகதி சனிக்கிழமை, 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, 19ஆம் திகதி திங்கட்கிழமை ஆகிய மூன்று தினங்களும் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

அத்துடன் கந்தபுராணத்தில் அதிகம் நெஞ்சைக் கொள்ளை கொள்வது பக்திக்கலையே?, இலக்கியக்கலையே? என்ற தலைப்பில் விழாவின், இறுதி நாளன்று பட்டிமன்றம் நடைபெறும்.

# மலைச்சாரல்

## பலாங்கொடை ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கி கட்டடம் புனரமைப்பு

(பலாங்கொடை தினகரன் நிருபர்)

கடந்த 20 வருடங்களாக புனரமைக்கப்படாமல் இருந்த பலாங்கொடை ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கி கட்டடம் தேசிய இளைஞர் சேவை சபையின் இம்புல்பே இளைஞர் சமூக பிரதேச சபையின் இளைஞர்கள் ஒன்றிணைந்து அண்மையில் புனரமைத்துள்ளனர்.

மாவட்ட இளைஞர் சேவை பிரதிப் பணிப்பாளர் சமனின் ஆலோசனைக்கிணங்க இம்புல்பே இளைஞர் சேவை அதிகாரி ருவன் அனுரகுமாரவின் தலைமையில் கட்டடத்திற்கு வர்ணம் தீட்டி புதிய பெயர்ப்பலகையும் பொருத்தப்பட்டுள்ளது.

இந்த கட்டட புனரமைப்பு பணிக்கு பலாங்கொடை மக்கள் வங்கி, இம்புல்பே இளைஞர் சேவை மன்றம் ஆகிய நிறுவனங்கள் நிதி உதவி வழங்கியுள்ளன.

நீண்ட காலமாக புனரமைக்கப்படாமல் இருந்த இரத்தவங்கி கட்டடத்தை புனரமைக்க உதவி செய்த அனைவருக்கும் இரத்த வங்கி பிரதானி தாதி டி.டி. சுசந்த கருணாரத்ன நன்றியினை தெரிவித்துள்ளார்.

## அபிவிருத்தி திட்டங்களை துரிதமாக முன்னெடுக்க அமைச்சர் ஜீவன் அதிகாரிகளுக்கு பணிப்பு



நுவரெலியா மாவட்ட அபிவிருத்தி திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியின் மூலம் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற அபிவிருத்தி வேலைத் திட்டங்களையும், எதிர்காலத்தில் முன்னெடுக்கின்ற திட்டங்களையும் துரிதமாக்குமாறு அமைச்சர் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

நுவரெலியா மாவட்ட அபிருத்தி குழு கூட்டம் நேற்று (16) நுவரெலியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் மாவட்ட செயலாளர் நந்தன கலபட தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், நுவரெலியா மாவட்ட நகர அபிவிருத்தி அதிகாரிகளினால் இடைநிறுத்தப்பட்டிருந்த 'பீட்று தோட்ட' இந்திய அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற வீடமைப்பு திட்டத்திற்குரிய இடங்கள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடி தீர்வு எட்டப்பட்டது.

மேலும் ஹட்டன், டிக்கோயா நகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் சேகரிக்கப்படும் திண்ம கழிவுகளை, கொட்டகலை பிரதேச சபை கழிவு அகற்றும் பகுதியில் அகற்றுமாறு கலந்தாலோசிக்கப்பட்டது

மேலும் ஹட்டன் நகர மத்திய பகுதியில் அமைந்துள்ள மணிக்கூட்டு கோபுரத்தை நவீனமயப்படுத்தி புதிதாக நிர்மாணிக்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஹட்டன் டிக்கோயா, நகரசபை செயலாளருக்கு பணிப்புரைவிடுத்தார்.

இக்கலந்துரையாடலில் மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான மருதபாண்டி ராமேஸ்வரன், S.P.திசாநாயக்க, நிமால் பியதிஸ்ஸ, நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட மற்றும் அரச திணைக்கள அதிகாரிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.


## போதகர் Rew பாஸ்டர் மணிமாறன் காலமானார்



இரத்தினபுரி ஹப்புகஸ்தென்ன கல்லேல்ல சௌமியபுரம் ஐக்கிய பெந்தகோஸ்த சபையின் தலைமை போதகர் Rew பாஸ்டர் மணிமாறன் 14 ஆம் திகதியன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னாரின் அடக்க ஆராதனை 17ஆம் திகதி புதன்கிழமை மாலை 2 மணியளவில் ஐக்கிய பெந்தகோஸ்த சபையில் இடம் பெற்று கல்லேல்ல பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

## வணக்கத்துக்குரிய ஞானானந்த நஹிமிபிதவின் தகனக் கிரியைகள்



(மஸ்கெலியா நிருபர்)

வட்டவளை ஸ்ரீ புத்த ராம விகாரையை சேர்ந்த வணக்கத்துக்குரிய ஞானானந்த நஹிமிபிதவின் தகனக் கிரியைகள் வட்டவளை விளையாட்டு மைதானத்தில் நேற்று நடைபெற்றன. வட்டவளை ஸ்ரீ புத்தராம விகாரையின் தலைவராக கடமையாற்றிய தங்கல்லை ஞானானந்த நாயக்க தேரர், வட்டவளை பிரதேச சிங்கள, திராவிட, முஸ்லிம் மக்கள் அனைவராலும் மதிக்கப்பட்டு அப்பகுதிக்கு மாபெரும் சாசனப் பணியை ஆற்றினார். மறைந்த முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவினால் வட்டவளை பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட உடகல கிராமத்துக்கு ஞானானந்த கிராமம் என பெயரிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. தங்காலை ஞானானந்த நாயக்க தேரர் தலைமையில் வட்டவளை மற்றும் ஹற்றன் சுற்றுவட்டாரப் பிரதேசங்களிலுள்ள ஆலயங்களிலும்,

தென் லாக்காவில் உள்ள தங்காலை தெவிநுவர ஆலயங்களிலும் வருடாந்தம் ஒன்று சேரும் கடின பிங்கம நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டது.

## நகருக்குள் நிறுத்தப்படும் வாகனங்களில் திருட்டு

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

காவத்த நகரில் நிறுத்தப்படும் வாகனங்களில் உள்ள பொருட்கள் மற்றும் பணத்தை திருடும் கும்பல் ஒன்று சஞ்சரிப்பதாக பொலிசார் பொதுமக்களை எச்சரிக்கின்றனர்.

இவ்விடயமாக அண்மித்த சில வாரங்களில் பத்துக்கும் மேற்பட்ட சம்பவங்கள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைத்ததாக பொலிசார் தெரிவித்தனர்.

அண்மையில் வீதியில் நிறுத்தப்பட்டிருந்த தனியார் நிறுவனம் ஒன்றிலிருந்து பால் பக்கட், யோகட் போன்ற உணவுப் பொருட்கள் பெருமளவில் திருடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேபோன்று இதற்கு முன்னர் இடம்பெற்ற பல சம்பவங்களில் வீதியில் நிறுத்தப்பட்டிருந்த வாகனங்களிலிருந்து மட்டுமின்றி வியாபார நிலையங்களிலிருந்தும் பகல் நேரத்தில் அரிசி போன்ற உணவு பொருட்கள் மற்றும் பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

எனவே வீதிகளில் நிறுத்தப்படும் வாகனங்களில் உள்ள பொருட்கள் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

### வடிவேல் சுரேஷின் முயற்சியினால்

## பதுளை மாவட்ட மதஸ்தாபனங்களுக்கு ஜனாதிபதி ரூ. 240 கோடி விசேட நிதி ஒதுக்கீடு

(ஊவா சுழற்சி நிருபர்)

பதுளை மாவட்டத்தில் உள்ள மதஸ்தாபனங்களுக்கு நிதி உதவிகள் வழங்கும் திட்டம் நேற்று முன்தினம் (15) ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் பதுளைப் பாராளுமன்ற உறுப்பினருமான வடிவேல் சுரேஷினால் ஆரம்பிக்கப்பட்டது.

இதன் போது பதுளை மாவட்டத்திலுள்ள 34 பள்ளிவாசல்கள், 111 ஆலயங்களுக்கான நிதி உதவிகளுக்கான கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் பதுளைப் பாராளுமன்ற உறுப்பினருமான வடிவேல் சுரேஷின் வேண்டுகோளுக்கிணங்க ஜனாதிபதியினால் வழங்கப்பட்ட சுமார் 240 கோடி ரூபா விசேட நிதி ஒதுக்கீட்டின் மூலம் பௌத்த, முஸ்லிம், இந்து மதஸ்தாபனங்களின் அபிவிருத்திக்கு மாத்திரமன்றி வீதிகள், கலாசார மண்டபங்கள் மற்றும் மாவட்டத்தின் இதர அபிவிருத்திக்கென இவ்வாறு நிதி ஒதுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



## ஜனாதிபதி புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் மாத்தளை மாவட்டத்தில் 3134 மாணவர்களுக்கு நிதியுதவிகள்

(அக்குறணை குறூப் நிருபர்)



ஜனாதிபதி புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் மாத்தளை மாவட்டத்தில் 3134 மாணவர்களுக்கான நிதியுதவிகள் மாத்தளை எட்வர்ட் மைதானத்தில் இடம் பெற்ற வைபவம் ஒன்றின் போது வழங்கிவைக்கப்பட்டன.

இவ்வைபவத்தில் பிரதம அதிதியாக மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே கலந்து கொண்டார்.

மேற்படி வேலைத்திட்டத்திற்காக அரசினால் 4 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது.

நாடளாவிய ரிதியில் 1ஆம் தரம் முதல் 11ஆம் தரம் வரை கல்வி பயிலும் 10, 126 பாடசாலைகளைச் சேர்ந்த ஒரு இலட்சம் மாணவர்களுக்கு மேற்படி புலமைப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாகவும் ஆளுநர் அங்கு தெரிவித்தார். இவ்வைபவத்தில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டாரதென்னகோன், இளைஞர் விவகார விளையாட்டுத்துறை இராஜாங்க அமைச்சர் ரோகன திசாநாயக்கா, மாத்தளை மாவட்டப் பாராளுமன்ற அங்கத்தவர் நாலக்க பண்டார கோட்டேகொட உட்பட அரச உயர் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

# பெறுகை அறிவித்தல்

## விவசாய பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு
## விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்

விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தினால் திணைக்களத்திற்கு தேவைப்படுகின்ற கீழக்காணும் உருப்படிகளை கொள்வனவு செய்வதற்காக தகைமையுள்ள கேள்விதாரர்களிடம் இருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கொரப்படுகின்றன.

1. கொள்வனவு செய்தல்

| வேலை இலக்கம் | விடயம் | கேள்விப் பிணை (ரூபா) | மீளளிக்கப் படாத கேள்வி ஆவணக் கட்டணம் (ரூபா) | கேள்வி ஆவணங்கள் விநியோகிக்கும் கால எல்லை | கேள்விகள் ஏற்றுக் கொள்ளும் கால எல்லை |
|---|---|---|---|---|---|
| 1.1 | வருடாந்த தேவைப்பாடுகளைக் கொள்வனவு செய்தல் - விலங்குப் போஷணை - 2024 | 100,000.00 | 6,000.00 | 2024.07.17 முதல் 2024.08.06 வரை | 2024.08.07 மு.ப.11.00 வரை |
| 1.2 | ஆய்வு தேவைப்பாடுகளை கொள்வனவு செய்தல் - ஒட்டுண்ணியியல் - 2024 | 44,500.00 | 3000.00 | | |
| 1.3 | வருடாந்த தேவைப்பாடுகளைக் கொள்வனவு செய்தல் - ஒட்டுண்ணியியல் - 2024 | 55,000.00 | 4000.00 | | |
| 1.4 | வருடாந்த தேவைப்பாடுகளைக் கொள்வனவு செய்தல் - விசேட செயற்றிட்டம் - விலங்கு போஷணை - 2024 | 300,000.00 | 8000.00 | | |
| 1.5 | கட்டிட தோல் தடுப்பூசி கொள்வனவு செய்தல் - 2024 (50,000 அளவுகள்) | 320,000.00 | 8000.00 | | |
| 1.6 | CCTV கெமரா அமைப்பை வழங்குதல் மற்றும் ஸ்தாபித்தல், கொள்வனவு செய்தல் (குண்டசாலை மற்றும் பொலன்னறுவை - 2024 | 30,000.00 | 2500.00 | | |

01. குறித்த கேள்வி ஆவணங்களை விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் (நிதி) அலுவலகத்திலிருந்து அலுவலக நேரங்களில் (மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரை) பெற்றுக்கொள்ளலாம்.

02. பொறியிடப்பட்ட ஆவணங்களை கெள்வி ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதிக்கு அல்லது அதற்கு முன்பு கிடைக்குமாறு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது நிதிப்பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். கேள்விதாரர்களால் குறித்த உருப்படியின் பெயர், வேலை இலக்கம் மற்றும் விடயம் கேள்வி ஆவணங்கள் உள்ளிடும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டு அனுப்பப்படல் வேண்டும்.

03. கொள்வனவு செய்வதுடன் சம்பந்தப்பட்ட கேள்வி ஆவணங்கள் சம்பந்தமான மேலதிக தகவல்களை விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் (Web: www.daph.gov.lk) என்ற இணையதளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**பணிப்பாளர் நாயகம்/தலைவர் (தி.பெ.கு)**
**விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்**
**இல.1020, த.பெ.எண் - 13, கெட்டம்பே, பேராதனை**

**தொ.பே. இலக்கம் : 081-2388197/081-2388227/081-2385700**
**பொது : 081-2388120/081-2388189 நீடிப்பு : 290/291**

# இலங்கை தேசிய வைத்தியசாலை
# கொழும்பு – 10

## பெறுகை அறிவித்தல்

இலங்கை தேசிய வைத்தியசாலையிலுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை மேற்கொள்வதற்கு ICTAD பதிவைக் கொண்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன. இலங்கை தேசிய வைத்தியசாலையின் சிறாப்பர் பிரிவிற்கு, மீளளிக்கப்படாத விலைமனுப் படிவக் கட்டணமாக 2,500.00 / 4,000.00 ரூபாவைச் செலுத்தி 2024.07.17ஆம் திகதி மு.ப. 9.00 முதல் 2024.08.06ஆம் திகதி பி.ப. 3.00 வரை, பொது நிர்வாக அலுவலகத்திலிருந்து விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்களைத் தபாலுறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து, வேலையின் பெயரை உறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்து பதிவுத்தபாலில் பின்வரும் முகவரிக்கு 2024-08-07ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன்னராக கிடைக்கும் வகையில் அனுப்புதல் வேண்டும் அல்லது பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடனடியாகவே திறக்கப்படுமென்பதுடன் அவ்வேளையில் ஒப்பந்தக்காரர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் கலந்துகொள்ளலாம்.

| வேலை | மதிப்பீட்டுச் செலவு ரூபா | தரம் | மீளளிக்கப் படும் பிணை முறி ரூபா | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் ரூபா சதம் | கருத்துக்கள் |
|---|---|---|---|---|---|
| RIA ஆய்வுகூடத்தின் புதுப்பித்தல் வேலைகள் (AC-1/32/2024) | 8,154,170.00 | விசேடத்துவம்: கட்டிடம் தரம்: C7 அல்லது அதற்கு மேல் | 130,000.00 | 2,500.00 | மதிப்பீடு செய்யப்பட்ட விலைமனு 5,000,000.00 ரூபாவிற்கு மேற்படின், விலைமனு ஆவணங்களை கையேற்கும்போது பொது ஒப்பந்த பதிவாளர் சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும். |
| பண்டாரநாயக்க கட்டிடத்தின் முன் புறத்திற்கு நிறப்பூச்சு பூசுதல் (AC-1/19/2024) | 12,835,820.00 | விசேடத்துவம்: கட்டிடம் தரம்: C6 அல்லது அதற்கு மேல் | 190,000.00 | 4,000.00 | |
| தீக்காயப் பிரிவு - பெண்கள் வார்டின் புதுப்பித்தல் வேலைகள் (AC-1/70/2023) | 5,019,738.75 | விசேடத்துவம்: கட்டிடம் தரம்: C7 அல்லது அதற்கு மேல் | 76,000.00 | 2,500.00 | |
| முன்மொழியப்பட்ட சைட்டோடொக்சிட் மருந்து மறுசீரமைப்பு பிரிவு (AC-1/61/2023) | 13,933,760.80 | விசேடத்துவம்: கட்டிடம் தரம்: C6 அல்லது அதற்கு மேல் | 210,000.00 | 4,000.00 | |
| பண்டாரநாயக்க கட்டிடத்தின் சுவர்கள் மற்றும் பின் புறத்திற்கு நிறப்பூச்சு பூசுதல் (AC-1/26/2024) | 12,581,047.00 | விசேடத்துவம்: கட்டிடம் தரம்: C6 அல்லது அதற்கு மேல் | 190,000.00 | 4,000.00 | |

**வைத்தியர் டபிள்யூ. கே. விக்கிரமசிங்க,**
**தலைவர், பெறுகைக் குழு,**
**இலங்கை தேசிய வைத்தியசாலை,**
**கொழும்பு-10.**

## கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் கிழக்கு மாகாணம்

# பெறுகை அறிவித்தல்

திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரினால் பின்வரும் விடயம் தொடர்பான கேள்வி கோரப்படுகின்றது.

| S.N | Bid No. | Description | Qty | Non-refundable Fee (Rs) | Bid security Value (Rs) | Bid security Validity date |
|---|---|---|---|---|---|---|
| 01 | EP/APH/ACC/PROC/ Poultry Feed – 2024/02 | Supply of Poultry Feed | Starter - 65 Mt<br>Grower – 35 Mt<br>Layer – 90 Mt | 3,500.00 | 300,000.00 | 18/11/2024 |

1. பெறுகை ஆவணங்களினை 17.07.2024 ஆம் திகதியிலிருந்து 06.08.2024 ஆம் திகதி வரை அலுவலக நேரத்தில் காலை 9.00 மணியில் இருந்து மாலை 3.00 மணிவரை திருகோணமலை உட்துறைமுக வீதியில் அமைந்துள்ள கிழக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தில் பெற்றுக் கொள்ள முடியும். இதற்காக மக்கள் வங்கி திருகோணமலை கிளையில் மாகாணப் பணிப்பாளர், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், கிழக்கு மாகாணம் என்ற பெயரில் கணக்கு இலக்கம் 066-1-001-6-7200601 இற்கு மீளச் செலுத்த முடியாத வைப்புப் பணமாக ரூபா.3,500.00 இனை ஆவணத்திற்குச் செலுத்த வேண்டும்.
2. பெறுகை ஆவணங்களை மூடப்பட்ட உறையிலிட்டு 07.08.2024 ஆம் திகதி முப 10.00 மணிக்கு முதல் கிடைப்பதற்காக தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், கிழக்கு மாகாணம், உட்துறைமுக வீதி, திருகோணமலை எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது நேரடியாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கும் பெறுகை ஆவணத்தின் உறையின் இடது பக்க மூலையில் பெறுகை இலக்கத்தினை குறிப்பிடுவது கட்டாயமானதாகும்.
3. உரிய நேரத்திற்கு பின் உடனே (07.08.2024) மு. ப. 10.01 மணிக்கு பெறுகை ஆவணங்கள் திருகோணமலை உட்துறைமுக வீதியில் அமைந்துள்ள கிழக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தில் திறக்கப்படும். இதற்காக பெறுகைதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் பங்குபற்ற முடியும்.
4. இவ் விலைமனுக் கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலோ இப்பூரண நடவடிக்கையிலிருந்து எவருக்கும் நட்ட ஈடு எதுவும் செலுத்தாமலே இவ்விலை மனுக் கோரலை இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுத் தவிசாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.
5. மேலதிக விபரங்களை உட்துறைமுகவீதி, திருக்கோணமலை கிழக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தில், மாகாணப் பணிப்பாளரிடம் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

**தொலைபேசி : 026-2223058, 026-2222183**
**மின்னஞ்சல் : ep.aph.fin@gmail.com.**

**Dr. M.A. நதீர்**
**மாகாணப் பணிப்பாளர்,**
**தலைவர் - திணைக்கள பெறுகைக்குழு,**
**கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்,**
**கிழக்கு மாகாணம்,**
**உட்துறைமுக வீதி, திருகோணமலை.**



# மக்கள் வங்கி
## கம்பஹா பிராந்தியம்
### மீட்கப்படாத அடகு நகைகளை ஏலத்தில் விற்றல்

மக்கள் வங்கியின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள் மற்றும் சேவை நிலையங்கள் என்பவற்றில் 2023.05.31ஆம் திகதி வரை (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட) அடகு வைக்கப்பட்டு 2024.08.16ஆம் திகதி கொடுக்கல் வாங்கல் முடிவடையும் வரை மீட்கப்படாத, தங்க நகைகள் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் மற்றும் இடங்களில் மு.ப. 9.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.

**ஏலவிற்பனை நடத்தப்படும் திகதி 2024.08.17 மற்றும் 2024.08.18**

| ஏலவிற்பனை நடைபெறும் இடம் | தெல்கொட 118 | நீர்கொழும்பு - 034 | ஜா-எல-239 | கம்பஹா -026 | கிரிபத்கொட - 237 |
|---|---|---|---|---|---|
| **கிளை** | தெல்கொட பூகொட யக்கல கிரிந்திவெல மல்வான வெலிவேரிய | நீர்கொழும்பு மரந்தகஹமுல கொச்சிகடை, சீதுவ கட்டுநாயக்க | வத்தளை ஜா-எல கந்தான பமுணுகம, றாகம | கம்பஹா மீறிகம, வெயன்கொட நிட்டம்புவ மினுவன்கொட | கிரிபத்கொட கடவத்த மஹர களனி கனேமுல்ல |
| சேவை நிலையங்கள் | வெலிவேரிய தொம்பே முதுன்கொட, ஊராபொல | கட்டான பிட்டிபன நீர்கொழும்பு பிரதான வீதி திவுலபிட்டி தெமங்ஹந்திய ரத்தொலுகம எவரிவத்த | ஏகல வெலிகம்பிட்டிய தெஹியகாத எலகந்த வெலிசர மகபாகே பட்டுவத்த | ஜா-எல வீதி உடுகம்பொல கொடதெனியாய பல்லேவெல நைவல வத்துபிட்டிவல திஹாரிய பஸ்யால ஆண்டிஅம்பலம் | மாவரமண்டி கிரில்லவல கடவத்த நகரம் என்டேரமுல்ல பேலியகொட சிங்ஹாரமுல்ல வெலிபில்லேவ |

மேற் குறிப்பிடப்பட்டுள்ளபடி நடத்தப்படவிருக்கும் இந்த ஏலவிற்பனையை மீண்டும் அறிவித்தல் வழங்காமல் வங்கியின் தற்றுணிப்பின்படி இரத்துச் செய்வதற்கு, ஒத்திவைப்பதற்கு அல்லது ஒருங்கிணைத்து நடத்துவதற்கு வங்கிக்கு உரிமை உண்டு.

பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, பிராந்திய தலைமை அலுவலகம், இலக்கம் 131, கண்டி வீதி, முதுன்கொட, பெலும்மஹர

**தொலைபேசி இலக்கம் : 033-2223880**

www.peoplesbank.lk 1961 PEOPLE'S BANK
PEOPLE'S BANK
Pride of the Nation

THE DEMOCRATIC SOCIALIST REPUBLIC OF SRI LANKA

# MINISTRY OF IRRIGATION

## REQUEST FOR BIDS (RFB)

**Climate Resilience Multi-Phase Programmatic Approach (L.N.:8996-LK)**

## NATIONAL COMPETITIVE BIDDING

***Procurement of 5kw Generators for Disaster Management Centre***

**Contract No.: SLMOI/CRES/DMC/G/NCB/37**

***Procurement of Mobile Phones for the Disaster Management Centre***

**Contract No: SLMOI/CRES/DMC/G/NCB/42**

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received a loan from the International Bank for Reconstruction and Development (IBRD) towards the cost of Climate Resilience Multi-Phase Programmatic Approach of Ministry of Irrigation, and intends to apply part of the proceeds of this loan to payments under the above contracts.
2. The Chairman, **Project Procurement Committee** on behalf of **Climate Resilience Multi-Phase Programmatic Approach** now invites sealed Bids from eligible and qualified Bidders for **above contracts.**
3. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** procedure.
4. Interested bidders may obtain further information from **Project Director, Climate Resilience Multi-Phase Programmatic Approach, No. 11, Jawatta Road, Colombo 05, T.P: 0112507855/0112058451, fax: 0112058451, E-mail: pdcresmpa@gmail.com,** and inspect the bidding documents free of charge **from 17th July 2024 to 08th August 2024** during normal working days from 9.30 a.m. to 3.30 p.m.
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested Bidders on submission of a written application to the address below during normal working days **from 17th July 2024 to 08th August 2024 until 3:00 p.m.** upon payment of a non-refundable fee as per the **Table No. 01**. The method of payment will be by cash.

**Table 01**

| RFB Reference | Non Refundable Tender Fee |
|---|---|
| SLMOI/CRES/DMC/G/NCB/37 | LKR 2,750.00 |
| SLMOI/CRES/DMC/G/NCB/42 | LKR 3,500.00 |

6. Bids shall be delivered in duplicate to the address below as per the time and date mentioned in **Table No 02**. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidders' representatives who will attend the bid opening meeting.

**Table 02**

| RFB Reference | Bid Submission & Opening |
|---|---|
| SLMOI/CRES/DMC/G/NCB/37 | 09th August 2024 – 1100 hrs |
| SLMOI/CRES/DMC/G/NCB/42 | 09th August 2024 – 1300 hrs |

7. Bids shall be valid until **25th December 2024.**
8. All Bids shall be accompanied by a **Bid-Security**, *(as per the format given in the Bidding Document)* as **Table No. 03**.

**Table 03**

| RFB Reference | Bid Security |
|---|---|
| SLMOI/CRES/DMC/G/NCB/37 | LKR 125,000.00 |
| SLMOI/CRES/DMC/G/NCB/42 | LKR 150,000.00 |

Bid Security shall be valid until **22nd January 2025**.

9. Pre-Bid Meeting will be arranged on 29th July 2024 as per the **Table No. 04**, at the Conference Room, Climate Resilience Multi-Phase Programmatic Approach, No.11, Jawatta Road, Colombo 05.

**Table 04**

| RFB Reference | Pre Bid Meeting |
|---|---|
| SLMOI/CRES/DMC/G/NCB/37 | 29th July 2024 – 1000 hrs |
| SLMOI/CRES/DMC/G/NCB/42 | 29th July 2024 – 1130 hrs |

**Chairman,**
**Project Procurement Committee**
**Climate Resilience Multi-Phase Programmatic Approach**
**No. 11, Jawatta Road, Colombo 05.**
*17th July 2024*

# நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு

## தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை

## விலைக்கோரல் அறிவித்தல் – 2024–07–17

பின்வரும் வேலைகள் / வழங்கல்களுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை சார்பில் பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | தேவையான கேள்விப் பிணை | தேவையான தகைமை | VAT உட்பட மதிப்பீட்டுச் செலவு (ரூபா) | தொடர்புகொள்ள வேண்டிய நபர் மற்றும் ஆவணங்கள் வழங்கப்படும் இடம் | இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|
| பொது நிதித் திணைக்களத்தினால் செயற்படுத்தப்படும் இலத்திரனியல் அரச பெறுகை (e-GP) முறைமையின் மூலம் (10 மில்லியன் ரூபா வரை) பொருட்களுக்கான கேள்விகளை அழைக்கும் பணியில் நாம் ஈடுபட்டுள்ளோம். கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கான தகுதித் தேவைப்பாடாக முறைமையில் பதிவு செய்துகொள்ளல் வேண்டும். மேலதிக விபரங்களுக்கு 011 -2635886/071-1525234 எனும் தொலைபேசி இலக்கங்களின் ஊடாக எமது அதிகாரியை தயவுசெய்து தொடர்புகொள்ளவும். | | | | | | | |
| **சிவில் கேள்விகள்** | | | | | | | |
| 01 | கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டத்திற்கு Coagulation மற்றும் Flocculation உட்பட Sedimentation Arrangement இயையான நிர்மாணம்<br>ஒப்பந்த இல: NWSDB/N/CP/A2-27-VIII/ GOSL/2024/01 | 35,000/- +VAT | ரூபா 1,400,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C4 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 139.81 மில்லியன் | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328<br>Fax: 011-2635885 | 07/08/2024 மு.ப. 10.00 |
| 02 | கன்னொருவ நீர் வழங்கல் திட்டம் - வருமானமற்ற நீர் குறைப்பிற்கான வாடகை சேவைகள்<br>ஒப்பந்த இல :RSC-C/CS/CIVIL/O&M/ GANNORUWA/2024/184 | 6,000/- +VAT | ரூபா 73,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C6 அல்லது C7 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 5.2 மில்லியன் | பிஓநி (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027<br>பேராதனை, கெட்டம்பே, மத்திய/தெற்கு RSC-C அலுவலகத்தில் 2024-07-24ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.<br>(T:P-0812388086) | 31/07/2024 பி.ப. 2.00 |
| 03 | குண்டசாலை நீர் வழங்கல் திட்டம் - புலுவெமுடுன சேவை நீர்த்தேக்கம் மற்றும் மடொல்கெலே சேவை நீர் தேக்கத்தைச் சுற்றி வேலி அமைத்தல்<br>ஒப்பந்த இல : RSC-C/CE/CIVIL/REH/ KUNDASALE/2023/283 | 6,000/- +VAT | ரூபா 70,000/- | கட்டிட நிர்மாணத் துறையில் C7 அல்லது C8 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 4.75 மில்லியன் | பிஓநி (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027 | 31/07/2024 பி.ப. 2.00 |
| 04 | ஹந்தான நீர் வழங்கல் திட்டம் - மெதுவான மணல் வடிகட்டிகளில் வடிகட்டி ஊடகத்தை மீள்நிரப்புதல்<br>ஒப்பந்த இல :RSC-C/CS/CIVIL/O&M/ HANTHANA/2024/86 | 4000/-+VAT | ரூபா 32,150/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C7 அல்லது C8 தரத்தில் CIDA பதிவு | 2.9 மில்லியன் | பிஓநி (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027 | 31/07/2024 பி.ப. 2.00 |
| 05 | கண்டி தெற்கு நீர் வழங்கல் திட்டம் - வத்துரகும்புர வீதிக்கு HDPE குழாய்கள், பொருத்தல்கள், விசேடங்கள் மற்றும் வால்வுகளைப் பதித்தல்.<br>ஒப்பந்த இல :RSC-C/LAY/NRW/U-Y/ ERIYAGAMA/ 2023/266 | 12,500/- + VAT | ரூபா 196,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C5 அல்லது C6 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 19.6 மில்லியன் | பிஓநி (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027<br>பேராதனை, கெட்டம்பே, மத்திய/தெற்கு RSC-C அலுவலகத்தில் 2024-07-24ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.<br>(T:P-0812388086) | 31/07/2024 பி.ப. 2.00 |
| 06 | நேபொட நீர் வழங்கல் திட்டம் - படிநிலை 2 - 2 (நேபொட) - செயற்றிட்ட விநியோகப் பிரதேசத்தின் குழாய் வழிகளை பூர்த்தி செய்வதற்காக 63mm விட்டம் மற்றும் 90mm விட்ட uPVC/DI குழாய்கள், பொருத்தல்கள், விசேடங்கள் மற்றும் துணைப்பாகங்களைப் பதித்தல்.<br>ஒப்பந்த இல :NWSDB/WS/CP/A3-12/ GOSL/2024/11 | 12,500/- + VAT | ரூபா 208,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C5 அல்லது C6 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 20.80 மில்லியன் | பி.ஓ.நி. (மேற்கு-தெற்கு) அலுவலகம், தேநீவவச, இல. 07, அங்குலான ஸ்டேஷன் வீதி, மொரட்டுவ.<br>Tel: 011-2224888<br>Fax : 011-2637945/ 011-2637946/ 0112637947களுத்துறை முகாமையாளர் அலுவலகத்தில் 2024-07-24ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும். | 01/08/2024 மு.ப. 10.00 |
| 07 | அம்பத்தலை ஆய்வுகூட வசதிகளை புனரமைத்தல் மற்றும் மேம்படுத்துதல்<br>ஒப்பந்த இல : RPC/WP/W/AMB/CIVIL/ RH/2024/23 | 12,500/- + VAT | ரூபா 210,000/- | கட்டிட நிர்மாணத் துறையில் C5 அல்லது C6 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 20.96மில்லியன் | பி.ஓ.நி. (மேற்கு – உற்பத்தி), தேநீவவச, உடுமுல்ல வீதி, முல்லேரியா புதிய நகரம்.<br>Tele:0112418532 Fax:0112549199<br>அம்பதலே நீர் சுத்திகரிப்பு பொறித்தொகுதியில் 2024-07-31ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும். | 07/08/2024 பி.ப. 2.00 |
| 08 | திருகோணமலை நீர் வழங்கல் திட்டம் - தம்பலகாமம் பொறுப்பதிகாரி அலுவலகத்தில் உள்ள எல்லைச் சுவர் - படிநிலை II புதுப்பித்தல்<br>ஒப்பந்த இல: RSC(E)/DGM/RH/BOUNDARY-WALL/THAM/TRINCO/ 2024/SQ-36 | 2,000/- +VAT | ரூபா 7,800/- | கட்டிட நிர்மாணத் துறையில் C8 அல்லது C9 தரத்தில் CIDA பதிவு | 0.77 மில்லியன் | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (கிழக்கு), தேநீவவச, இல. 48A/1, கண்டி வீதி, திருகோணமலை.<br>Tele:026-2222519/ 026-2222028<br>Fax:026-2225225 | 31/07/2024 மு.ப. 10.00 |
| 09 | மாத்தறை பிராந்தியத்திற்கான புதிய சேவை இணைப்புகளுக்காக துணைப்பாகங்கள் மற்றும் பொருத்தல்கள் உட்பட நீர் மானிகளைப் பொருத்துதல், அகழ்தல் மற்றும் மீள்நிரப்புதல்<br>ஒப்பந்த இல :RSCS/S/MATARA/O&M/3100/2024J | 12,500/- + VAT | ரூபா 185,800/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C5 அல்லது C6 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | - | பிஓநி (தெற்கு), 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை.<br>Tele: 0412222105<br>Fax 0412221329 | 31/07/2024 பி.ப. 2.00 |
| 10 | பத்தேகம நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியில் விரைவு மணல் வடிகட்டிகளுக்கு (08 எண்ணிக்கை) வடிகட்டி ஊடகத்தை வழங்குதல் மற்றும் அமைவிடத்தில் வைத்தல்<br>ஒப்பந்த இல : RSCS/P&C/G/RH/3307/2024B | 4,000/- +VAT | ரூபா 35,800/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C7 அல்லது C8 தரத்தில் CIDA பதிவு அல்லது தேநீவவ சபையில் வடிகட்டி ஊடகம் வழங்குவதற்காக பதிவு செய்திருத்தல். | 3.6 மில்லியன் | பிஓநி (தெற்கு), 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை.<br>Tele: 0412222105<br>Fax: 0412221329 | 31/07/2024 பி.ப. 2.00 |
| 11 | அக்குரெஸ்ஸ நீர் வழங்கல் திட்டம் - முன்மொழியப்பட்ட பஸ் நிலையம் முதல் திப்பொட்டுவாவ பாலம் வரையில் விநியோகக் குழாய்களைப் பதித்தல்.<br>ஒப்பந்த இல : RSCS/P&C/W/3137/NRW/2024A | 6,000/- +VAT | ரூபா 52,200/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C6 அல்லது C7 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 5.2 மில்லியன் | பிஓநி (தெற்கு), 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை.<br>Tele: 0412222105 Fax: 0412221329 | 31/07/2024 பி.ப. 2.00 |
| 12 | மன்னார் நீர் வழங்கல் திட்டத்தில் நீர் மானிகளை வாசிக்கக்கூடிய இடத்திற்கு இடமாற்றுதல் - கட்டம் 1<br>ஒப்பந்த இல : RSC/N/DGM/NRW/RELOCATING-PHI/MAN/2024/091 | 12,500/- + VAT | ரூபா 130,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C6 அல்லது C5 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | - | பிஓநி (வடக்கு) அலுவலகம், தேநீவவச, யாழ்ப்பாணம் வீதி, வவுனியா.<br>Tele:024-2227313/ 024-2225719/ 024-2227340<br>Fax:024-2225088/ 024-2227341 | 31/07/2024 பி.ப. 2.00 |
| 13 | வவுனியா நீர் வழங்கல் திட்டம் - பேராறு நீர் வழங்கல் திட்டத்தில் கீழ்ப் பகுதி பாதுகாப்பு வலயத்திற்கு வேலி அமைத்தல்<br>ஒப்பந்த இல : RSC/N/DGM/RH/DOWN-PERARU/ 2024/087 | 12,500/- + VAT | ரூபா 191,000/- | கட்டிட நிர்மாணத் துறையில் C6 அல்லது C5 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 19.05 மில்லியன் | பிஓநி (வடக்கு) அலுவலகம், தேநீவவச, யாழ்ப்பாணம் வீதி, வவுனியா.<br>Tele:024-2227313/ 024-2225719/ 024-2227340<br>Fax:024-2225088/ 024-2227341<br>வவுனியா, யாழ்ப்பாணம் வீதி, மாவட்டப் பொறியியலாளர் (வவுனியா) அலுவலகத்தில் 2024-07-31ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும். | 07/08/2024 பி.ப. 2.00 |
| 2024-07-03ஆம் திகதிய விளம்பரம் தொடர்பானது. மாத்தறை நீர் வழங்கல் திட்டம் - யட்டியன முதல் தன்தெனிய வரையில் விநியோக குழாய்வழி மிகுதி வேலைகள் மற்றும் மாத்தறை IV படிநிலை - பரிமாற்றத்தின் மிகுதி வேலைகள் ஒப்பந்த இல : NWSDB/S/CP/A3-29/GOSL/2024/26G - இந்தக் கேள்வியின் தகுதித் தேவைப்பாடுகள் ''நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C3 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ்'' எனத் திருத்தப்படல் வேண்டும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும். | | | | | | | |
| 2024-07-10ஆம் திகதிய விளம்பரம் தொடர்பானது. ஆனமடுவ ஒன்றிணைக்கப்பட்ட நீர் வழங்கல் திட்டத்தின் இங்கினிமிட்டிய நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியின் மீள் செயற்பாடுகளின் மிகுதி வேலைகள் ஒப்பந்த இல : P&D/CIVIL/UBE/RE-AIWSP/2024/01 - இந்தக் கேள்வியின் தகுதித் தேவைப்பாடுகள் ''நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C2 மற்றும் அதற்கு மேலான தரத்தில் CIDA பதிவு அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ்'' எனத் திருத்தப்படல் வேண்டும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும். | | | | | | | |
| **வழங்கல் கேள்விகள்** | | | | | | | |
| 14 | புத்தளம் பிராந்திய ஆய்வுகூடத்திற்கு ஆய்வுகூட உபகரணங்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல் - பகுதி II<br>ஒப்பந்த இல: RSC(NW)/M-PUTT/INST/CIPC-/ PUTT-LAB/2024/58 | 12,500/- + VAT | ரூபா 118,000/- | ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்நாட்டு முகவர்கள் அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | - | பிஓநி (வட மேல்) அலுவலகம், தேநீவவச, தம்புல்லை வீதி, குருநாகல்.<br>Tele: 037-2223158<br>Fax : 037-2230086 | 31/07/2024 பி.ப. 2.00 |
| 15 | பிராந்திய ஒத்துழைப்பு நிலையத்திற்கு (மேற்கு-தெற்கு) 2024ஆம் வருடத்தின் ஆறு மாத காலத்திற்கு நீர்க் கட்டண பற்றுச்சீட்டுகளை அச்சிடுதல்<br>ஒப்பந்த இல : W-S/ P&C/S/WB(02)/DGM/ O&M/2024/48 | ரூபா 4,000/- | ரூபா 24,100/- | இலங்கை மின்சார சபை, டெலிகொம் மற்றும் தேநீவவச போன்ற சேவை அமைப்புகளுக்கு ஆவணங்களை அச்சிடும் துறையில் முன்னனுபவம். | 2.4 மில்லியன் | பி.ஓ.நி. (மேற்கு-தெற்கு) அலுவலகம், தேநீவவச, இல. 07, அங்குலான ஸ்டேஷன் வீதி, மொரட்டுவ.<br>Tel: 011-2224888<br>Fax : 011-2637945/ 011-2637946/ 0112637947 | 25/07/2024 மு.ப. 10.00 |
| 16 | பிராந்திய ஒத்துழைப்பு நிலையத்திற்கு (மேற்கு-தெற்கு) i7 மடிக்கணனியொன்று மற்றும் 04 எண்ணிக்கையான மேசைக் கணனிகளை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்.<br>ஒப்பந்த இல : W-S/P&C/Equ(07)/RSC/ CIPC/2024/65 | ரூபா 2,000/- | ரூபா 14,000/- | கணனிகள் மற்றும் துணைப்பாகங்கள் வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்நாட்டு முகவர்கள் | - | பி.ஓ.நி. (மேற்கு-தெற்கு) அலுவலகம், தேநீவவச, இல. 07, அங்குலான ஸ்டேஷன் வீதி, மொரட்டுவ.<br>Tel: 011-2224888<br>Fax : 011-2637945/ 011-2637946/ 0112637947 | 01/08/2024 மு.ப. 10.00 |
| **M & E கேள்விகள்** | | | | | | | |
| 17 | வடக்கு-மேற்கு பிராந்தியத்தில் On- Grid சூரிய சக்தி முறைமையை வடிவமைத்தல், வழங்குதல், நிறுவுதல், பரீட்சித்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்.<br>ஒப்பந்த இல : DGM/M&E/SOLAR/2021/02R | 35,000/- + VAT | ரூபா 1,100,000/- | ஆவணத்தின் பிரகாரம் இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபையில் (SLSEA) Solar PV சேவை வழங்குநராக பதிவு அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | - | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328<br>Fax: 011-2635885 | 07/08/2024 மு.ப. 10.00 |
| 18 | மாளிகாவத்தை பம்பி இல்லத்திற்கு Vertically Mounted Multistage, Centrifugal in Line பம்பித் தொகுதிகள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல், பரீட்சித்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்.<br>ஒப்பந்த இல : RSC(WC)/M&E/CCN/ MALIGAWATTA PUMP/2024/02/RH | 12,500/- + VAT | ரூபா 250,000/- | நீர்ப் பம்பித் தொகுதிகள் வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்நாட்டு முகவர்கள் அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 22 மில்லியன் | பிஓநி (மேற்கு - மத்திய) தேநீவவச, இல. 175A, கலுதொட்ட கட்டிடம், நாவல வீதி, நுகேகொட.<br>Tele:/Fax: 011-2856421/ 0112856420-2<br>பிஓநி (WC) அலுவலகத்தில் 2024-07-24ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும். | 07/08/2024 மு.ப. 10.00 |
| 19 | திருகோணமலை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு தேவையான சிவில் கட்டமைப்புகளுடன் RO பொறித்தொகுதிகளை வழங்குதல் மற்றும் நிறுவுதல்<br>ஒப்பந்த இல: RSC(E)/DGM/RECH/RO/ TRINCO/2024/49 | 6,000/- +VAT | ரூபா 71,000/- | ஆவணத்தின் பிரகாரம் அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | - | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (கிழக்கு), தேநீவவச, இல. 48A/1, கண்டி வீதி, திருகோணமலை.<br>Tele:026-2222519/ 026-2222028<br>Fax:026-2225225 | 31/07/2024 மு.ப. 10.00 |
| **சேவைக் கேள்விகள்** | | | | | | | |
| 20 | மெததும்பர நீர் வழங்கல் திட்டத்தின் சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்பு மற்றும் ரங்கல நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிக்கு நீரைப் பெற்றுக்கொள்ளும் கொட்டகங்க நீர் மூலவளத்தின் பராமரிப்பு சேவையைப் பெற்றுக்கொள்வதற்கான கேள்வி<br>ஒப்பந்த இல: ප්‍රාසෙ'ම(ම)/ම.නැ/සේවා/ක්‍රීහාන/ මැදුම්බර//2024/138 | 6,000/- +VAT | ரூபா 85,000/- | ஆவணத்தின் பிரகாரம் அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | - | பிஓநி (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027<br>குண்டசாலை, மத்திய கிழக்கு அலுவலகத்தில் 2024-07-24ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.<br>T:P-0812420585 | 31/07/2024 பி.ப. 2.00 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 21 | மட்டக்களப்புப் பிராந்தியத்திற்கு ஜெனிட்டோரியல் சேவைகளை வழங்குதல்<br>ஒப்பந்த இல: RSC(E)/DGM/O&M/JANITORIAL-SERVICE/BATTI/2024/35 | 12,500/- + VAT | ரூபா 103,100/- | ஆவணத்தின் பிரகாரம் ஜெனிட்டோரியல் சேவைகள் வழங்கும் துறையில் குறைந்தபட்சம் மூன்று (03) வருட கால அனுபவத்தைக் கொண்ட வியாபார பதிவு ஒழுங்குவிதி முறையின் கீழ் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 10.4 மில்லியன் | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (கிழக்கு), தேநீவவச, இல. 48A/1, கண்டி வீதி, திருகோணமலை.<br>Tele:026-2222519/<br>026-2222028<br>Fax:026-2225225 | 31/07/2024<br>மு.ப. 10.00 |
| 22 | மட்டக்களப்புப் பிராந்தியத்திற்கு தேர்ச்சியற்ற மற்றும் Caretaker வேலையாள் சேவைகளை வழங்குதல்.<br>ஒப்பந்த இல: RSC(E)/DGM/O&M/LABOUR-SERVICE/BATTI/2024/041 | 12,500/- + VAT | ரூபா 163,000/- | தேர்ச்சிபெற்ற மற்றும் தேர்ச்சி பெறாத தொழிலாளர் சேவைகளை (கேள்விக்கு இயைபான) வழங்குவதில் குறைந்தபட்சம் 02 வருடங்கள் அனுபவம் வாய்ந்த இயைபுடைய பிரதேசங்களிலுள்ள பிரதேச செயலகங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள சமூக அடிப்படையிலான அமைப்புகள் (CBO) அல்லது வியாபாரப் பதிவின் கீழ் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | - | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (கிழக்கு), தேநீவவச, இல. 48A/1, கண்டி வீதி, திருகோணமலை.<br>Tele:026-2222519/<br>026-2222028<br>Fax:026-2225225 | 31/07/2024<br>மு.ப. 10.00 |
| 23 | ஹபராதுவ பொறுப்பதிகாரி அலுவலகம் மற்றும் காலி பிரதேச பொறியியலாளர் அலுவலகத்திற்கான ஜெனிட்டோரியல் சேவைகள்<br>ஒப்பந்த இல: RSCS/P&C/SJ/GALLE/O&M/3304/2024B | 2,000/- +VAT | ரூபா 14,000/- | ஜெனிட்டோரியல் சேவைகள் வழங்கும் துறையில் குறைந்தபட்சம் மூன்று (03) வருட கால அனுபவத்தைக் கொண்ட வியாபார பதிவு ஒழுங்குவிதி முறையின் கீழ் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் | 1.4 மில்லியன் | பிஒநி (தெற்கு), 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை.<br>Tele: 0412222105<br>Fax 0412221329 | 31/07/2024<br>பி.ப. 2.00 |
| 24 | காலி பிரதேச பொறியியலாளர் பிரதேசத்திற்கு ஜெனிட்டோரியல் சேவைகளை வழங்குதல்<br>ஒப்பந்த இல: RSCS/P&C/SJ/GALLE/O&M/3300/2024J | 6,000/- +VAT | ரூபா 79,000/- | ஆவணத்தின் பிரகாரம் ஜெனிட்டோரியல் சேவைகள் வழங்கும் துறையில் குறைந்தபட்சம் மூன்று (03) வருட கால அனுபவத்தைக் கொண்ட வியாபார பதிவு ஒழுங்குவிதி முறையின் கீழ் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 7.9 மில்லியன் | பிஒநி (தெற்கு), 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை.<br>Tele: 0412222105<br>Fax 0412221329 | 31/07/2024<br>பி.ப. 2.00 |
| 25 | கட்டகடுவயில் உள்ள நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிக்கு ஜெனிட்டோரியல் சேவைகளை வழங்குதல்<br>ஒப்பந்த இல: RSCS/P&C/SJ/HAMBANTOTA/O&M/3231/2024A | 2,000/- +VAT | ரூபா 14,500/- | ஜெனிட்டோரியல் சேவைகள் வழங்கும் துறையில் குறைந்தபட்சம் மூன்று (03) வருட கால அனுபவத்தைக் கொண்ட வியாபார பதிவு ஒழுங்குவிதி முறையின் கீழ் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் | 1.45 மில்லியன் | பிஒநி (தெற்கு), 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை.<br>Tele: 0412222105<br>Fax 0412221329 | 31/07/2024<br>பி.ப. 2.00 |
| **வாகனங்களை வாடகைக்கமர்த்துதல்** | | | | | | | |
| 26 | வருமானமற்ற நீர் பிரிவிற்கு வேன் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: WC/NRW/M&E/HV/2024/01 | 4,000/- +VAT | ரூபா 15,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் குறைந்தபட்சம் 05 ஆசனங்கள் கொள்ளளவு சகிதமான வாகன உரிமையாளர்கள் அல்லது இலங்கையில் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் | 3.03 மில்லியன் | பிஒநி (மேற்கு - மத்திய) தேநீவவச, இல. 175A, கலுதொட்ட கட்டிடம், நாவல வீதி, நுகேகொட.<br>Tele:/Fax: 011-2856421/<br>0112856420-2 | 31/07/2024<br>மு.ப. 10.00 |
| 27 | கோட்டே பொறுப்பதிகாரி அலுவலகத்திற்கு க்று கெப் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: WC/M-KOTTE/M&E/HV/2024/04 | 4,000/- +VAT | ரூபா 15,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் வாகன உரிமையாளர்கள் அல்லது இலங்கையில் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் | 3.87 மில்லியன் | பிஒநி (மேற்கு - மத்திய) தேநீவவச, இல. 175A, கலுதொட்ட கட்டிடம், நாவல வீதி, நுகேகொட.<br>Tele:/Fax: 011-2856421/<br>0112856420-2 | 31/07/2024<br>மு.ப. 10.00 |
| 28 | ஆனமடுவ நீர் வழங்கல் திட்டத்தின் ஒப்பந்த முகாமையாளருக்கு டபள் கெப் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: RSC(NW)/RE-AIWSP/HV/UBE-AIWSP/ANA/2024/54R | 4,000/- +VAT | ரூபா 15,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் வாகன உரிமையாளர்கள் அல்லது இலங்கையில் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் | 3.41 மில்லியன் | பிஒநி (வட மேல்) அலுவலகம், தேநீவவச, தம்புல்லை வீதி, குருநாகல்.<br>Tele: 037-2223158<br>Fax : 037-2230086 | 31/07/2024<br>பி.ப. 2.00 |
| 29 | ஆனமடுவ நீர் வழங்கல் திட்டத்தின் ஒப்பந்த முகாமையாளருக்கு வேன் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: RSC(NW)/RE-AIWSP/HV/UBE-AIWSP/ANA/2024/40R | 4,000/- +VAT | ரூபா 15,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் குறைந்தபட்சம் 08 ஆசனங்கள் கொள்ளளவு சகிதமான வாகன உரிமையாளர்கள் அல்லது இலங்கையில் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் | 3.36 மில்லியன் | பிஒநி (வட மேல்) அலுவலகம், தேநீவவச, தம்புல்லை வீதி, குருநாகல்.<br>Tele: 037-2223158<br>Fax : 037-2230086 | 31/07/2024<br>பி.ப. 2.00 |
| 30 | பிரதிப் பொது முகாமையாளருக்கு (வடமேல்) எரிபொருள் மற்றும் சாரதியின்றி SUV மோட்டார் வாகனமொன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: RSC(NW)/M&E/HV/O&M/DGM-OFF/2024/76 | 4,000/- +VAT | ரூபா 15,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் வாகன உரிமையாளர்கள் அல்லது இலங்கையில் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் | 2.92 மில்லியன் | பிஒநி (வட மேல்) அலுவலகம், தேநீவவச, தம்புல்லை வீதி, குருநாகல்.<br>Tele: 037-2223158<br>Fax : 037-2230086 | 31/07/2024<br>பி.ப. 2.00 |
| 31 | மத்திய தெற்கு - முகாமையாளர் அலுவலகத்திற்கு வேன் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: RSC-C/M&E/HIRING/O&M/CS/2024/103 | 4,000/- +VAT | ரூபா 15,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் குறைந்தபட்சம் 08 ஆசனங்கள் கொள்ளளவு சகிதமான வாகன உரிமையாளர்கள் அல்லது இலங்கையில் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் | - | பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027 | 31/07/2024<br>பி.ப. 2.00 |
| 32 | கதிர்காமம் நீர் வழங்கல் திட்டத்திற்கு மினி டிரக் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: RSCS/P&C/SHMT/H'TOTA/O&M/3207/2024A (R ) | 4,000/- +VAT | ரூபா 15,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் வாகன உரிமையாளர்கள் அல்லது இலங்கையில் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் | 3.65 மில்லியன் | பிஒநி (தெற்கு), 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை.<br>Tele: 0412222105<br>Fax 0412221329 | 31/07/2024<br>பி.ப. 2.00 |
| 33 | திஸ்ஸ, கிரிந்த, பூந்தல நீர் வழங்கல் திட்டங்களுக்கு மின் டிரக் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: RSCS/P&C/SHMT/H'TOTA/O&M/3204/2024B (R ) | 4,000/- +VAT | ரூபா 15,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் வாகன உரிமையாளர்கள் அல்லது இலங்கையில் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் | 3.65 மில்லியன் | பிஒநி (தெற்கு), 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை.<br>Tele: 0412222105<br>Fax 0412221329 | 31/07/2024<br>பி.ப. 2.00 |

தயவு செய்து **www.drc.gov.lk** எனும் இணையதளத்தில் நிகழ்நிலை (online) ஊடாக 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவுச் சான்றிதழுக்காக பொது ஒப்பந்த ஆவணம் மற்றும் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதிய டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை விளம்பரத்துடன் பதிவு செய்யவும். (PCA 3 படிவத்தைப் பெற்றுக்கொள்வதற்காக) மேலும் பதிவு செய்து கொள்வதற்கு gmail பயன்படுத்தவும்.

முடிவுத் திகதிக்கு முதல் நாள் வரை சாதாரண வேலை நேரங்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் மற்றும் வியாபாரக் கடிதத் தலைப்பிலான வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும்.

சாதாரண வேலை நேரங்களில் ஆவணங்கள் வழங்கப்படும் இடத்திலேயே கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

சமுகம்தந்துள்ள கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் கேள்விகள் திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும்.

**தலைவர்,**
**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை.**

# பெறுகை அறிவித்தல்

## ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

### 2024ஆம் வருடத்திற்கு சத்திரசிகிச்சை, ஆய்வுகூடம் மற்றும் எக்ஸ் ரே பாவனைப் பொருட்களை வழங்குவதற்கான கேள்வி

01. பின்வரும் சத்திரசிகிச்சை, ஆய்வுகூட மற்றும் எக்ஸ்-ரே பாவனைப் பொருட்களை வழங்குவதற்காக 2024-08-01ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை தேசிய போட்டிரீதியிலான (NCB) கேள்வி கோரலின் கீழ் தகுதி மற்றும் ஆர்வமுள்ள வழங்குநர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறியிடப்பட்ட கேள்விகள் நுகேகொடை, தலபத்பிட்டிய, ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரால் கோரப்படுகின்றன.


| கேள்வி இல. | பெறுகை விபரங்கள் | எண்ணிக்கை | மீளளிக்கப்படாத வைப்புக் கட்டணம் (ரூபா) | கேள்வி திறக்கப்படும் திகதி |
|---|---|---|---|---|
| சத்திரசிகிச்சை பாவனைப் பொருட்கள் | | | | 2024-08-01 |
| Q 399/24 | PTCA Guide Wire - Cath Lab | Lot | 3,500.00 | |
| Q 400/24 | Guiding Catheter - Cath Lab | Lot | 3,500.00 | |
| Q 401/24 | Introducer Sheath Cath Lab | Lot | 3,500.00 | |
| எக்ஸ்-ரே பாவனைப் பொருட்கள் | | | | |
| Q 402/24 | MRI Films for X-ray Department | Lot | 3,500.00 | |
| ஆய்வுகூட பாவனைப் பொருட்கள் | | | | |
| Q 403/24 | Test Kits IV - Microbiology Department | Lot | 3,500.00 | |

பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பித்து ஆவலுள்ள தகுதி வாய்ந்த எந்த முகவரும் அல்லது கேள்விதாரரின் சார்பாக பெயரிடப்பட்ட நபரும் கொள்வனவு செய்த முழுமையான கேள்வி ஆவணங்களில் இரு நகல்களில் பொறியிடப்பட்ட கேள்விகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(i) ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை பணிப்பாளருக்கு எழுதப்பட்ட எழுத்து மூலமான விண்ணப்பம்
(ii) ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை கணக்காளருக்கு மேற்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தல்
(iii) வியாபாரப் பதிவுச் சான்றிதழின் புகைப்படப்பிரதி

02. பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 08ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளரினால் (சமாகம் மெதுர) வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
03. வைத்தியசாலையால் வழங்கப்பட்ட படிவங்களில் மட்டுமே விண்ணப்பங்களை தயாரித்தல் வேண்டும். வைத்தியசாலையால் வழங்கப்படாத வேறு படிவங்களிலான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
04. வைத்தியசாலை வழங்கல்கள் அலுவலகத்தில் கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
05. 2024-07-17ஆம் திகதி முதல் 2024-07-31ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை வழங்கல்கள் அலுவலகத்திலிருந்து கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
06. ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் விரிவுரை மண்டபத்தில் 2024-08-01ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்விகள் மூடப்பட்டு உடனடியாகத் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரரின் பிரதிநிதியொருவர் சமுகமளிக்கலாம்.
07. எந்தக் கேள்வியையும் அல்லது எல்லாக் கேள்விகளையும் நிராகரிக்கவோ/ கேள்வியின் எந்தப் பகுதியையும் ஏற்கவோ திணைக்கள கேள்விக் குழுத் தலைவருக்கு சுய உரிமை உண்டு.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தலபத்பிட்டிய,**
**நுகேகொடை.**



லங்கா சதொச LANKA SATHOSA

# பெறுகை அறிவித்தல்

வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு

## லங்கா சதொச லிமிடெட் செலுத்தப்படும் கிலோமீற்றருக்கு கட்டணம் வழங்கும் அடிப்படையில் இலகு ரக வாகனங்களை பெறுதல்

LSL/PRO/05/112/Vehicles/2024

**லங்கா சதொச லிமிடெட்** தலைமை அலுவலகத்திற்கு செலுத்தப்படும் கிலோமீற்றருக்கு கட்டணம் வழங்கும் அடிப்படையில் ஓர் ஆண்டு காலத்திற்காக கீழ் குறிப்பிடப்பட்ட வடிவத்திலான இலகு ரக வாகனங்களை வழங்கும் நிறுவனங்களிடம் இருந்து மற்றும் தனி நபர்களிடம் இருந்து லங்கா சதொச திணைக்களப் பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

தேவை:

| வானத்தின் வடிவம் | எண்ணிக்கை |
|---|---|
| டபுள் கெப் | 02 |
| கார் வண்டி | 01 |

விபரக்குறிப்பு: விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ளது

விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு ஆர்வம் காட்டுகின்ற விலைமனுதாரர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்ட கடிதம் ஒன்றை சமர்ப்பிப்பதன் மூலம் சிங்கள மொழியிலான விலைமனு ஆவணத்தை 500.00 ரூபா (மீளளிக்கப்படாதது) கேள்விக் கட்டணத்தை செலுத்தி 2024 ஜூலை மாதம் 17 ஆம் திகதி தொடக்கம் 2024 ஒகஸ்ட் மாதம் 06 ஆம் திகதி வரையான காலத்தில் கீழுள்ள முகவரியில் இருந்து பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

லங்கா சதொச தலைமை அலுவலகம், பெறுகைப் பிரிவு (3ஆவது மாடி),
இலக்கம் 27, சதொச பொதுச் செயலாளர் கட்டிடம்,
வொக்ஷோல் வீதி, கொழும்பு 02.

முன்வைக்கும் விலைமனுக்களை 2024 ஒகஸ்ட் மாதம் 06 ஆம் திகதி பி.ப. 01.00 அல்லது அதற்கு முன்னர், மேலுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். இல்லையேல் அந்த முகவரியின், பெறுகைப் பிரிவில் (3ஆவது மாடி) வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இட வேண்டும். முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இடுகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "**LSL/PRO/05/112/Vehicles/2024**" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

விலைமனுக்களை ஏற்பது 2024 ஒகஸ்ட்' மாதம் 06 ஆம் திகதி பி.ப. 01.00 இற்கு நிறைவடைவதோடு விலைமனுக்களை திறப்பது, விலைமனுக்களை ஏற்பது முடிவுற்ற உடன் விலைமனுதாரர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்படும். தாமதிக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது.

மேலதிக விபரங்களுக்கு 0701560720
என்ற இலக்கத்தில் ஹர்ஷஜித் அவர்களை அழையுங்கள்

கேள்விமனு/ ஒப்பந்தம் வழங்கும் இறுதி முடிவு லங்கா சதொச லிமிடெட் திணைக்கள பெறுகைக் குழு தலைவர் வசமானதாகும்.

**தலைவர்,**
**லங்கா சதொச லிமிடெட் , இல.27, சதொச பொதுச் செயலகக் கட்டிடம்**
**வொக்ஷோல் வீதி, கொழும்பு 02**

### சுகாதார மற்றும் சுதேச மருத்துவ சேவைகள் அமைச்சகம்

## போதனா வைத்தியசாலை – பேராதெனிய கொள்முதல் அறிவிப்பு

போதனா வைத்தியசாலை - பேராதெனிய பிராந்திய கொள்முதல் குழு 2024 ஜூலை 17 முதல் 2024 ஆகஸ்ட் 07 திகதி மதியம் 2.00 மணி வரை பின்வரும் மருத்துவ உபகரணங்களை வாங்குவதற்கான மற்றும் ஏலங்களை அழைக்கிறது.

| | மருத்துவ உபகரணங்கள் | அளவு |
|---|---|---|
| 01 | Echocardiography Machine | 01 |

மேலதிக தகவல்களை போதனா வைத்தியசாலை - பேராதெனிய அதிகாரபூர்வ வலைத்தளமான www.peradeniya-hospital.health.gov.lk இலிருந்து பெறலாம்.

**தலைவர்,**
**பிராந்திய கொள்முதல் குழு,**
**போதனா வைத்தியசாலை,**
**பேராதெனிய.**

## இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

### ஏலவிற்பனை அறிவித்தல்

**அழியக்கூடிய கப்பற் பொருட்களின் விற்பனை**
**ஏலவிற்பனைத் திகதி : 18.07.2024**

**எனது இல : LD/S/SAGT/2024/07/PC**

SAGT முற்றவெளியில் வைக்கப்பட்டுள்ள அழியக்கூடிய கப்பற்பொருட்கள் (இந்திய வெங்காயம்) உள்ளடக்கப்பட்ட மேற்படி அகற்றப்படாத கொள்கலன் BQ நலன்புரி கட்டிடத்தில் 2024.07.18ம் திகதி 14.00 மணிக்கு ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்யப்படும்.

மீளளிக்கப்படாத கட்டணம் ரூ. 1000/= (VAT & SSCL உற்பட) மற்றும் ரூ. 200,000/= மீளளிக்கப்படும் கட்டணத்தைச் செலுத்துவதன் பேரில் 2024.07.17ம் திகதி 08.30 மணி முதல் 16.00 மணிவரை கொழும்பு - 01, லோட்டஸ் வீதி, இல. 15 இல் உள்ள இலங்கை துறைமுக அதிகார சபை, தளபாடங்கள் பிரிவு, விற்பனை பகுதியின் அலுவலகத்திலிருந்து ஏலவிற்பனை ஆவணங்கள் மற்றும் வாயிற்கதவு அனுமதிகளை பெற்றுக்கொள்ளலாம்.

2024.07.18ம் திகதி 10.30 மணிமுதல் 12.30 மணிவரை சம்பந்தப்பட்ட முற்றவெளிகளில் விற்பனைக்கான பட்டியலில் உள்ள உருப்படிகளைப் பார்வையிடலாம்.

மேலதிக விபரங்களுக்கு www.slpa.lk இற்கு விஜயம் செய்யுங்கள்.

**பிரதம முகாமையாளர் (தளபாடங்கள்)**
**17.07.2024.**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**தளபாடங்கள் பிரிவு,**
**இல.15, லோட்டஸ் வீதி,**
**கொழும்பு - 01**

## இலங்கை புகையிரத சேவைகள்

### ௨00 இடங்களுக்கான இருப்புப்பாதைக் கடவு கண்காணிப்பு அமைப்புக்களை (LEVEL CROSSING MONITORING SYSTEM) வழங்கல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்தல் ஆகியவற்றிற்கான கொள்முதல்

**கொள்முதல் இல.: SRS/F.8012**

### விலைமனு நீடித்தல் அறிவித்தல்

மேற்குறிப்பிட்டுள்ள மனு தொடர்பாக 2024.06.20 ஆம் திகதியிடப்பட்ட பத்திரிகை விளம்பரத்திற்கு மேலதிகமாக, விலைமனுவின் மூடல்/திறத்தல் ஆகியன நீடிக்கப்பட்டுள்ளன. விலைமனுவின் மீளாக்கம் செய்யப்பட்ட மூடல்/திறத்தல் திகதியானது பின்வருமாறு நீடிக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

- விலைமனுவின் மூடல்/திறத்தல் திகதியானது பின்வருமாறு: 2024.07.25 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்காகும்.

ஆங்கில மொழியிலுள்ள திருத்தங்களுடனான விலைமனுக்கோரல் ஆவணங்களுடனான முழுமையான விலைமனுக்கோரல் ஆவணமானது 2024.07.24 ஆம் திகதியன்று பி.ப. 3 மணி வரையும் (இலங்கை நேரம்) ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்முதல் செய்யப்படலாம்.

விலைமனுக்களின் அழைப்பிதழலின் ஏனைய நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் இடம் ஆகியவற்றில் மாற்றங்கள் எதுவுமில்லை.

மேலதிக விபரங்களுக்கு, தயவு செய்து பின்வருபவருடன் தொடர்பு கொள்ளவும்.

**பிரதி பொது முகாமையாளர் (கொள்முதல்),**
**புகையிரதக் கொள்முதல் உப பிரிவு,**
**ஓல்கொட் மாவத்தை,**
**கொழும்பு 10, இலங்கை.**

**தொலைபேசி இலக்கங்கள் : 94(11) 2438078 அல்லது 94(11) 2436818**
**தொலைநகல் இலக்கம் : 94(11) 2432044**
**மின்னஞ்சல் : srs.slr@gmail.com**
**இணையதளம் : www.railway.gov.lk**

**தலைவர்,**
**திணைக்களத்தின் பெறுகைக் குழு (மேஜர்),**
**இலங்கை புகையிரத சேவைகள்**

**கொள்முதல் இல.: SRS/F.8012**

## பெறுகை அறிவித்தல்

### தேசிய சுகாதார விஞ்ஞானக் கல்வி நிறுவகம் - களுத்துறை

### நாய்களை மலடாக்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக விலைமனுக்கள் கோரல் – 2024ம் ஆண்டு

களுத்துறை தேசிய சுகாதார விஞ்ஞானக் கல்வி நிறுவனத்தின் பிரதேச பெறுகைக்குழுவினால் இந்நிறுவனத்தின் அதிகாரப் பிரதேசத்திற்குள் நாய்களை மலடாக்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக மருந்துகள் மற்றும் தகைமையுள்ள மருத்துவர்களிடமிருந்து மற்றும் அமைப்புகளிடமிருந்தும் கீழ்க்காணுமாறு திறந்த கேள்விகள் கோரப்படுகின்றன.

02. 2024.08.12 முதல் 2024.09.11 வரையான காலத்திற்குள் தேசிய சுகாதார விஞ்ஞான கல்வி நிறுவனத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் களுத்துறை / பேருவளை சகாதார மருத்துவ அதிகார பிரிவிற்குள் பெண் நாய்கள் 600 - 650 மட்டிலான எண்ணிக்கையில் சத்திரசிகிச்சை நடைபெற எதிர்பார்க்கப்படுகிறது

03. அதற்காக ஆர்வம் காட்டுகின்ற விண்ணப்பதாரிகள்/அமைப்புகளிடமிருந்து கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்காக எழுத்துமூல வேண்டுதலை மேற்கொள்வதுடன், அதற்காக ரூ.2000.00 மீளளிக்கப்படாத கட்டணத்தை இவ் அலுவலகத்திற்கு செலுத்துதல் வேண்டும். கேள்வி ஆவணங்களை 2024.07.17 முதல் 2024.07.30 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரை விநியோகிக்கப்படும் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஆளடையாளத்தை உறுதி செய்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட அடையாள அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும்.

04. கேள்வி பற்றிய இறுதித்தீர்மானம் எடுக்கும் உரிமை தேசிய சுகாதார விஞ்ஞான/கல்வி நிறுவகத்தின் பிரதேச பெறுகைக்குழுவிற்கு உரியது

05. பூர்த்தி செய்யப்பட்ட கேள்விகள் 2024.07.31 மு.ப.10.30 இற்கு முன்பு பணிப்பாளர், தேசிய சுகாதார விஞ்ஞானக் கல்வி நிறுவகம், களுத்துறை பெயருக்கு பதிவுத்தபாலில் அல்லது கையோடு கொண்டுவந்து கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். பொறியிடப்பட்ட உறையின் இடதுபக்க மேல் மூலையில் “2024 ஆம் ஆண்டில் நாய்களை மலடாக்கும் நிகழ்ச்சித் திட்டத்திற்கான விலைமனுக்கோரல்” என்று குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

மேற்படி வேலை பற்றிய சகல விபரங்களை கேள்வி ஆவணங்களுடன் பெற்றுக்கொள்ளலாம்.

**தொ.பே.இலக்கம் : 034-2222264/034-2222001/நிதிப்பிரிவு (245) அழையுங்கள்**
**தலைவர்,**
**பிரதேச பெறுகைக்குழு,**
**தேசிய சுகாதார விஞ்ஞானக் கல்வி நிறுவகம் - களுத்துறை**

### இலங்கை மின்சார சபை

## மின் கட்டணத் திருத்தம் – ஜூலை 2024

கீழ்க்காணும் இறுப்பனவுகளுக்குரிய மின் கட்டணமானது, அனைத்து நுகர்வோர் வகைகளுக்கும் 2024 ஜூலை 16 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவினால் அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் 30 நாட்கள் கொண்ட நுகர்வுக் காலப்பகுதிக்கான மின் கட்டணமுறைமை பின்வருமாறு திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

| மின் கட்டணத் திருத்தம் - ஜூலை 2024 | | |
|---|---|---|
| அமுலாகும் திகதி (30 நாட்கள் கொண்ட நுகர்வுக் காலப்பகுதிக்குரியது) | **2024-07-16** | |
| **வீட்டுபயோக அறவீடு** | அலகுக்குரிய கட்டணம் (ரூ./ கி. வொ. மணி) | மாதாந்த நிலையான கட்டணம் (ரூ./ மாதம்) |
| **நுகர்வோர் வகைகள்** | | |
| **மாதாந்த நுகர்வு அலகு கி.வொ.மணி. 0 - 60** | | |
| பகுதி 1 : கி. வொ. மணி 0 - 30 | 6.00 | 100.00 |
| பகுதி 2 : கி. வொ. மணி. 31 - 60 | 9.00 | 250.00 |
| **மாதாந்த நுகர்வு அலகு கி.வொ.மணி. 60 இற்கு மேல்** | | |
| பகுதி 1 : கி. வொ. மணி 0 - 60 | 15.00 | N/A |
| பகுதி 2 : கி. வொ. மணி 61 - 90 | 18.00 | 400.00 |
| பகுதி 3 : கி. வொ. மணி 91 - 120 | 30.00 | 1,000.00 |
| பகுதி 4 : கி. வொ. மணி 121 - 180 | 42.00 | 1,500.00 |
| பகுதி 5 : கி. வொ. மணி 180 இற்கு மேல் | 65.00 | 2,000.00 |
| **பாவனை நேரத்தை அடிப்படையாகக் கொண்ட(ToU) இறுப்பனவை தெரிவு செய்து கொண்ட வீட்டுபயோக நுகர்வோர்** | | |
| பகல் (05:30 – 18:30) | 56.00 | 2,000.00 |
| உச்ச பயன்பாட்டு நேரம் (18:30 – 22:30) | 72.00 | |
| உச்சமற்ற பயன்பாட்டு நேரம் (22:30 – 05:30) | 24.00 | |
| **சமய மற்றும் தொண்டுழிய அமைப்புகள் வகைகள்** | | |
| பகுதி 1 : கி. வொ. மணி 0 - 30 | 6.00 | 100.00 |
| பகுதி 2 : கி. வொ. மணி 31 - 90 | 6.00 | 250.00 |
| பகுதி 3 : கி. வொ. மணி 91 - 120 | 10.00 | 300.00 |
| பகுதி 4 : கி. வொ. மணி 121 - 180 | 20.00 | 1,200.00 |
| பகுதி 5 : கி. வொ. மணி 180 இற்கு மேல் | 30.00 | 1,600.00 |

| இதர நுகர்வோர் வகைகள் பகல் (05:30 – 18:30) | | அலகுக்குரிய கட்டணம் (ரூ./ கி.வொ.மணி) | | | மாதாந்த நிலையான கட்டணம் (ரூ./ மாதம்) | உச்சக் கேள்விக் கட்டணம் (ரூ./ கி.வோ.அம்.) |
|---|---|---|---|---|---|---|
| | | உச்ச பயன்பாட்டு நேரம் (18:30 – 22:30) | உச்சமற்ற பயன்பாட்டு நேரம் (22:30 – 05:30) | | | |
| கைத்தொழில் கட்டண வகை 1 | கைத்தொழில் நோக்கம் 1-1 கி. வொ. மணி. 0 – 300 வரை | 10.00 | | | 300.00 | - |
| | கைத்தொழில் நோக்கம் 1-2 கி. வொ. மணி. 300 இற்கு மேல் | 16.00 | | | 1,000.00 | - |
| கைத்தொழில் கட்டண வகை 2 | | 20.50 | 30.50 | 18.00 | 5,000.00 | 1,500.00 |
| கைத்தொழில் கட்டண வகை 3 | | 19.50 | 29.50 | 17.00 | 5,000.00 | 1,400.00 |
| ஹோட்டல் கட்டண வகை 1 | ஹோட்டல் 1-1 கி. வொ. மணி. 0 – 300 வரை | 10.00 | | | 300.00 | - |
| | ஹோட்டல் 1-2 கி. வொ. மணி. 300 இற்கு மேல் | 16.00 | | | 1,000.00 | - |
| ஹோட்டல் கட்டண வகை 2 | | 20.50 | 30.50 | 18.00 | 5,000.00 | 1,500.00 |
| ஹோட்டல் கட்டண வகை 3 | | 19.50 | 29.50 | 17.00 | 5,000.00 | 1,400.00 |
| பொதுப்பயன்பாட்டு நோக்கம் 1 | பொதுப்பயன்பாட்டு நோக்கம் 1-1 கி. வொ. மணி. 0 – 180 வரை | 26.40 | | | 600.00 | - |
| | பொதுப்பயன்பாட்டு நோக்கம் 1-2 கி. வொ. மணி. 180 இற்கு மேல் | 34.40 | | | 1,500.00 | - |
| பொதுப்பயன்பாட்டு நோக்கம் 2 | | 38.25 | 46.75 | 31.45 | 5,000.00 | 1,500.00 |
| பொதுப்பயன்பாட்டு நோக்கம் 3 | | 37.40 | 45.90 | 30.60 | 5,000.00 | 1,400.00 |
| அரச நிறுவனம் கட்டண வகை 1 | அரச நிறுவனம் 1-1 கி. வொ. மணி. 0 – 180 வரை | 26.40 | | | 600.00 | - |
| | அரச நிறுவனம் 1-2 கி. வொ. மணி. 180 இற்கு மேல் | 34.40 | | | 1,500.00 | - |
| அரச நிறுவனம் கட்டண வகை 2 | | 38.25 | 46.75 | 31.45 | 5,000.00 | 1,500.00 |
| அரச நிறுவனம் கட்டண வகை 3 | | 37.40 | 45.90 | 30.60 | 5,000.00 | 1,400.00 |
| வீதி விளக்கு | | 45.00 | | | - | - |
| **மின்சார வாகனங்களுக்கான இலங்கை மின்சார சபையின் மின்கல மின்னேற்றும் நிலையங்களின் இறுப்பனவு** | | | | | | |
| நேரோட்ட விரைவு மின்னேற்றம் | | 87.00 | 111.00 | 53.00 | - | - |
| நிலை 2 ஆடலோட்ட மின்னேற்றம் | | 70.00 | 90.00 | 40.00 | - | - |
| பாவனை நேரத்தை அடிப்படையாகக் கொண்ட (ToU) இறுப்பனவை தெரிவுசெய்து கொண்ட விவசாய நுகர்வோர் | | 18.00 | 35.00 | 8.00 | 1,000.00 | - |

குறிப்பு:

- கட்டண வகை 1: ஒப்பந்தக் கேள்வி கி. வோ. அம். (kVA) 42 இற்குக் குறைவான அல்லது சமனான, வோல்ட் அளவு 400/230 கொண்ட வழங்கல்.
- கட்டண வகை 2: ஒப்பந்தக் கேள்வி கி. வோ. அம். (kVA) 42 இற்கு அதிகமான, வோல்ட் அளவு 400/230 கொண்ட வழங்கல்.
- கட்டண வகை 3: வோல்ட் அளவு கி. வோ. (kV) 11 இற்குக் கூடிய அல்லது சமனான வழங்கல்.

- 2022 ஐப்பசி 1ம் திகதி முதல் அமுலாகும் வகையில் 2022 ஆம் ஆண்டின் 25ம் இலக்க சமூகப் பாதுகாப்பு உதவித்தொகை அறவீட்டு சட்டத்தின்படி மாதாந்த சமூகப் பாதுகாப்பு உதவித்தொகை அறவீடு இலங்கை மின்சார சபையின் மாதாந்த மின்சார கட்டணத்தின் நூற்றுக்கு 2.5 வீதமாகும்.
- 2009 வருட 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சபைச் சட்டத்தின் 30 (2) (ட) பிரிவிற்கு அமைவாக இலங்கை மின்சார சபையினால் மேற்குறித்த திருத்தங்கள் வெளியிடப்படுகின்றன.

**பதில் பொது முகாமையாளர்**
**இலங்கை மின்சார சபை**

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

## காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 1964 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டபடி காணி சுவீகரித்தல் (திருத்தச்) சட்ட இல. 28 இன் 7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

**எனது குறிப்பு இல : மீகா/பிசே/6/1/3/2013**

**காணி அமைச்சின் குறிப்பு இல : 4-3/07/2012/ஏச்டபிள்யூ/248**

கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணி / காணிகளை சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 26ஜூன் 2024 ஆம் திகதிய 2390/10 ஆம் இலக்க அரசாங்க வரத்தமானியின் பகுதி 111 ஐப் பார்க்கவும்.

**அட்டவணை**

மாவட்டம் : கம்பஹா
பிரதேச செயலாளர் பிரிவு : நீர்கொழும்பு
கிராம சேவகர் பிரிவு : இல. 160 - உதயர்தோப்பு
ஆரம்ப வரைபட இல : கம் 4069
துண்டு இல : 01 - 42 (42 துண்டுகள்)

**ரசிகா மல்லவ ஆராச்சி**
**பிரதேச செயலாளர் மற்றும் காணி சுவீகரித்தல் அதிகாரி**
**நீர்கொழும்பு**

**பிரதேச செயலகம்**
**நீர்கொழும்பு**
**15.07.2024**

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் சுகாதார அமைச்சின் தேசிய ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகார சபை சட்டத்தின் கீழ் மன்னிப்புக்கோரும் வெளியீடு

பன்வில இல.60, பிரதான வீதியில் வசிக்கும் S.சரவனா ஆகிய எனக்கு மட்டுப்படுத்தப்பட்ட ஔடத அனுமதிப்பத்திரம் இன்றி போக்குவரத்துச் செய்தல் மற்றும் அருகில் வைத்திருந்தமை சம்பந்தமாக 2022ம் ஆண்டில் பன்வில பொலிசினால் பீ559/2022 இன் கீழ் வழக்கு தொடரப்பட்டுள்ளதுடன் அக்குற்றத்தை ஒப்புகொண்டதால் பன்வில நீதிமன்றத்தினால் 40,000/- (நாற்பதாயிரம்) தண்டம் விதிக்கப்பட்டது.

அவ்வாறே தேசிய ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் கீழ் 131/E பிரிவின் பிரகாரம் மீண்டும் இக்குற்றத்தை இழைக்க மாட்டேன் என சத்தியப்பிரமானம் செய்வதுடன் இலங்கை வாழ் மக்களிடம் மன்னிப்புக்கோருகிறேன்.

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil
your Future Dreams

சிறு விளம்பரம்
மோட்டார் வாகனங்கள்
128
டயர்கள், டியூப்புகள்
விற்பனைக்கு

டயர் டியூப் ஒரே கூரையின் கீழ் சகல டயர் போ-க்லிப்ட், கல், காற்று, டயர் இரு-க்கும் இடத்திற்கு போக்குவரத்து ரிச்சட் பீரிஸ், ஆர்பிடெக் டயர் நிரப்புவதற்கு வழ-ங்கப்படாத 700x167 50716700x20-1000x20.155 கிரவு ன் டயர், கொழும்பு -1 4. 0773134060 044411

## மனு சமர்ப்பிக்கும் திகதி நீடிப்பதற்கான அறிவிப்பு

### பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு
### இலங்கை பொலிஸ்

**இலங்கை பொலிஸ் பிரிவினருக்கு நடப்பதற்காக பயன்படுத்தப்படும் காலணிகள் 58,500 ஜோடிகளை கொள்வனவு செய்தல்**

**விலைமனு இலக்கம் – *MPS/03/PB/PR/07/18/2024***

1. மேற்குறிப்பிடப்பட்ட கொள்முதல் தொடர்பான **2024.06.27** ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட பத்திரிகை விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டிருந்த **மனு சமர்ப்பிக்கும் திகதி 2024.08.06 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.** முந்தைய விளம்பரம் மற்றும் மேலதிக தகவல்களை எமது அதிகாரப்பூர்வ இணையதளத்திலிருந்து (www.pubsec.gov.lk) பெற்றுக்கொள்ளலாம்.
2. மனுக்கோரலானது தேசிய மனுக்கோரல் போட்டி முறைக்கமைய இடம்பெறுகின்றது (NCB).
3. பின்வரும் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன, மேலும் இந்த திருத்தங்கள் பின்வரும் கொள்முதலின் ஏல செயல்முறைக்கு இணங்க நடைபெறும் என்பதை மனுதாரர்கள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். கீழே விவரிக்கப்பட்டுள்ள விபரங்களைத் தவிர, மேலே உள்ள விளம்பரத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்களில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை.

| ஒப்பந்ததின் பெயர் | மனு மூடப்படும் திகதி மற்றும் நேரம் | மனு ஆவணங்கள் வழங்கப்படும் திகதி | மனு செல்லுபடியாகும் காலம் | மனுப் பாதுகாப்பு செல்லுபடியாகும் காலம் | மாதிரிகளை சமர்ப்பிக்கும் திகதி |
|---|---|---|---|---|---|
| இலங்கை பொலிஸ் பிரிவினருக்கு நடப்பதற்காக பயன்படுத்தப்படும் காலணிகள் 58,500 ஜோடிகளை கொள்வனவு செய்தல் | 2024.08.06 14.00 மணிக்கு | 2024.08.05 வரை | 2024.08.06 முதல் 2024.11.05 வரை | 2024.08.06 முதல் 2024.12.03 வரை | 2024.08.06 ஆம் திகதி பி.ப.12 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் |

4. இதற்காக ஆர்வமுள்ள தகுதி பெற்ற மனுதாரர்கள் மேலதிக விபரங்களை, 17வது மாடி சுஹுருபாய, பத்தரமுல்ல, இலங்கை, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் தலைமை கணக்காளர்களிடம் **தொலைபேசி இலக்கம்: 0112887697 / மின்னஞ்சல்:** mops.procurementunit@gmail.com மூலமாக பெற்றுக்கொள்ள முடிவதுடன், பொது மற்றும் வங்கி விடுமுறை நாட்கள் தவிர்ந்த வேளை நாட்களில் **2024.08.05 ஆம் திகதி வரை மு.ப.9.00 மணி முதல் பி.ப.3.00** மணிவரையான காலப்பகுதியில் 17வது மாடி சுஹுருபாய, பத்தரமுல்ல, இலங்கை எனும் முகவரியில் காணப்படும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் நிதிப் பிரிவில் அல்லது (www.pubsec.gov.lk) எனும் எமது அதிகாரப்பூர்வ இணையதளத்தில் எவ்வித கட்டணச் செலுத்துகையும் இன்றி பரீட்சித்துக்கொள்ள முடியும்.

**தலைவர்,**
**திணைக்களத்தின் கொள்முதல் குழு,**
**பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு,**
**17 ஆம் மாடி, "சுஹுருபாய", பத்தரமுல்லை.**
**இலங்கை**

SELACINE

பகிரங்க அறிவித்தல்

2007 இல 7 கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்படும் அறிவித்தல்.

கம்பனியின் பெயர் : வோல் மெக்ஸ் எக்ரி பிஸ்னஸ் ஃபாம் (பிவிடி) எல்டீடி
பதிவு இலக்கம் : PV 00303878
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2024.06.28
கம்பனியின் முகவரி : 38/ஏ, தம்பகஸ்தெட்டிய, விசாக்கா மாவத்த, பண்டாரவளை

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

## Amãna Bank

## கைவிடப்பட்ட சொத்துக்கள் பற்றிய அறிவித்தல்

1988 ஆம் ஆண்டின் வங்கியியல் சட்டம்
இல. 30இன் பிரிவு 74இன் பிரகாரம் (திருத்தப்பட்டதன் பிரகாரம்)

வங்கியியல் சட்டம் (திருத்தப்பட்டதற்கமைய) பிரிவு 72 மற்றும் 73இன் திருத்தப்பட்ட பிரகாரம், 2023 டிசம்பர் மாதம் 31ஆம் திகதியன்று, 10 வருட காலமாக செயற்படுத்தப்படாத நிலையில் காணப்படும் வாடிக்கையாளர்களின் கணக்குகள் "கைவிடப்பட்டது" ஆக கருதப்பட்டு பின்வருமாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

| கிளை | கிளை தொடர்பு இல. | ரூபாய் கணக்குகளின் எண்ணிக்கை | வெளிநாட்டு நாணய கணக்குகளின் எண்ணிக்கை | பாதுகாப்பு பெட்டகங்களின் எண்ணிக்கை | உரிமை கோரப்படாத கட்டண காசோலைகள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| அக்குரணை | 817756226 | 5 | - | - | - |
| கல்முனை | 677756203 | 1 | - | - | - |
| கண்டி | 817756203 | 10 | - | - | 1 |
| காத்தான்குடி | 657756202 | 3 | - | - | - |
| சம்மாந்துறை | 677756226 | 2 | - | - | - |
| புறக்கோட்டை | 117756002 | 12 | - | - | 3 |
| பிரதான கிளை | 117756261 | 14 | - | - | 5 |
| மகளிர் கிளை | 117756382 | 2 | - | - | - |
| தெஹிவளை | 117757951 | 1 | - | - | - |

கைவிடப்பட்ட சொத்தின் உரிமை தவறான தரப்பினரால் கோரப்படுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படலாம் என்ற காரணத்தினால் பாதுகாப்பு கருதி கணக்குகள்/சொத்து தொடர்பான விபரங்கள் பிரசுரிக்கப்படவில்லை.

அமானா வங்கி பிஎல்சியினால் கைவிடப்பட்ட சொத்துக்களாக இனங்காணப்பட்ட வாடிக்கையாளரின் சொத்துக்கள் தொடர்பான விபரங்கள் அடங்கிய பிரத்தியேகமான அறிவித்தல்கள் எமக்கு இறுதியாக அறியப்படுத்தப்பட்ட முகவரிகளுக்கு ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கணக்குதாரர்கள் அல்லது அவர்களின் சட்டப்பூர்வ வாரிசுகள் தமது உரிமை கோரல்களை (ஏதும் இருப்பின்) 2024 ஜூலை 31ஆம் திகதிக்கு முன்னதாக தமது கிளை முகாமையாளர்களுக்கு அறிவிக்குமாறு இங்ஙனம் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**அமானா வங்கி. செயல்பாட்டுத் துறை. கொழும்பு 3**

## இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

கீழே விதித்துரைக்கப்பட்டவாறு 2024 ஒக்டோபர் 01 ஆம் திகதியிலிருந்து ஆரம்பமாகி 2025 செப்டம்பர் 30 ஆம் திகதி வரையும் ஒரு வருட காலப்பகுதிக்கு இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் பெருந்தொகையான வாகனங்கள் மற்றும் பெருந்தொகையான உபகரணங்களை காப்பீடு செய்வதற்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் சார்பாக தொழில்நுட்ப பணிப்பாளர் இப்போது அழைக்கின்றார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | விலைமனுக்கோரல் முறை | கேள்விப் பிணைத் தொகை | பெசேவ அடங்கலான ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|
| EW/7/INS/2024-2025 | 2024/2025 ஆம் ஆண்டுகளுக்காக இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் பெருந்தொகையான வாகனங்கள் மற்றும் பெருந்தொகையான உபகரணங்களுக்கான காப்புறுதி | தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் | 240,000.00 இ.ரூபா | 8,000.00 ரூபா | 2024.08.08 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு |

1. 5.0 மில்லியன் இலங்கை ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டமூலத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படும். இதற்கமைவாக, மேற்குறிப்பிட்ட கேள்வியில் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகும்படி தேவைப்படுத்தப்படுகின்றனர். எனவே, விலைமனுதாரரானவர் பொது ஒப்பந்தத்திற்காக கம்பனிகள் பதிவாளருடன் தம்மை பதிவு செய்து விலைமனுவுடன் பிசிஏ-3 பதிவுச் சான்றிதழை இணைத்து சமர்ப்பிக்கும்படி தேவைப்படுத்தப்படுகின்றனர்.
2. விலைமனுதாரரானவர் இலங்கை காப்புறுதி ஒழுங்காற்றல் ஆணைக்குழுவுடன் அல்லது இலங்கை காப்புறுதி சபையுடன் பதிவு பெற்ற காப்புறுதி நிறுவனமாகவிருத்தல் வேண்டும். பதிவுச் சான்றிதழானது விலைமனுவுடன் இணைக்கப்பட்டிருப்பதுடன் விலைமனுதாரர் விலைமனுவுடன் சமர்ப்பிப்பதற்காக நாடளாவியரீதியிலான கிளை வலையமைப்பையும் கிளைகளின் பட்டியல் மற்றும் அவர்களின் முகவரிகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.
3. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை கொழும்பு-01, லெய்டன் பஸ்தியன் வீதி, 45 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் பொறிமுறை பொறித்தொகுதி பொறியியல் பிரிவின் பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்று (தொலைபேசி: 011 2451920/ தொலைநகல்: 011 2324071 ) 2024 ஜூலை 18 ஆம் திகதியிலிருந்து 2024 ஓகஸ்ட் 07 ஆம் திகதியன்று வரையும் சாதாரண அலுவலக நேரங்களில் அதே முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
4. 2024 ஜூலை 18 ஆம் திகதியிலிருந்து 2024 ஓகஸ்ட் 07 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும் மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாக 8,000 இலங்கை ரூபாவை செலுத்திய பின்னர், மேலேயுள்ள முகவரிக்கு பிரதான பொறியியலாளர் (பொறிமுறை பொறித்தொகுதி) முதன்மை காப்புறுதி நிறுவனத்தினால் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட முகவர்/முதன்மை காப்புறுதி நிறுவனத்தினால் நியமிக்கப்பட்ட தரகரினால் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும். ஒவ்வொரு எதிர்பார்க்கப்படும் தகுதியுள்ள முதன்மையான காப்புறுதி நிறுவனத்தின் பெயரில் அல்லது அவர்களின் முகவர்/ முதன்மையான காப்புறுதி நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது அவர்களின் முகவரினால் ஒரு விலைமனு மாத்திரமே சமர்ப்பிக்கப்படல் வேண்டும். எந்தவொரு முதன்மை காப்புறுதி நிறுவனத்தினால் எந்த முறையினாலும் அல்லது அவர்களின் முகவர் / தரகரினால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாதென்பதுடன் பல எண்ணிக்கையான விலைமனுக்கள் அல்லது மாற்றுவழியான விலைமனுக்கள் நிராகரிப்பதற்கான வழியை வகுக்கும். எதிர்பார்க்கப்படும் விலைமனுதாரர்கள் 2024 ஜூலை 30 ஆம் திகதியன்று கொழும்பு-01, லெய்டன் பஸ்தியன் வீதி, 45 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் தொழில்நுட்ப நூலகத்தில் நிறைவேற்றுவதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ள விலைமனு முன்னோடிக் கூட்டத்திற்கு சமுகமளிக்கலாம்.
5. கேள்விப் பிணையுடன் இணைக்கப்பட்ட ஒவ்வொரு விலைமனுதாரரின் முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் 2024 ஓகஸ்ட் 08 ஆம் திகதியன்று விலைமனுக்களை மூடும் நேரமான பி.ப. 2 மணிக்கு கொழும்பு-01, லெய்டன் பஸ்தியன் வீதி, 45 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை தொழில்நுட்பத்திற்கான பணிப்பாளரிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும். விலைமனுதாரர் அவர்கள் விரும்பின் அவர்களின் விலைமனுவை இணைக்கப்படவுள்ள ஆவணங்களுடன் இலங்கை, கொழும்பு-01, லெய்டன் பஸ்தியன் வீதி, 45 ஆம் இலக்கத்தின் இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் கேள்விப் பெட்டியில் உட்சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே விலைமனுதாரர்களினால் திறத்தலின் போது மேலேயுள்ள முகவரியில் நேரடியாக சமுகமளிப்பதற்காக நியமிக்கப்பட்ட இரு பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

**பணிப்பாளர் (தொழில்நுட்பம்),**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி,**
**கொழும்பு-01.**

## ஊவா மாகாண சபை

## திருத்தப்பட்ட பெறுகை அறிவித்தல்

### ஊவா மாகாண விவசாய, நீர்ப்பாசன, விலங்கு உற்பத்தி மற்றும் நன்னீர் மீன்பிடி விடயங்கள் அமைச்சு

பெறுகைக் குழுவின் தலைவரான என்னால் 2024.07.12ம் திகதி தினமின, தினகரன், டெய்லி நியூஸ் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருந்த விலைமனுக்கோரல் அறிவித்தல் கீழ்க்காணுமாறு திருத்தப்படுகிறது.

அப்பத்திரிகை அறிவித்தலில் தரப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் விதிகள் அவ்வாறே அமுலில் இருக்கும் இடம் பொரலந்த விலங்குப் பண்ணை ஆவதுடன், திருத்தப்பட வேண்டிய கைத்தொழில்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| இணைப்பு இலக்கம் | கைத்தொழிலின் பெயர் | இக்டாட் பழைய/ புதிய வகைப்படுத்தல் | மீளளிக்கப்படும் கேள்விப்பிணை ரூபா | மீளளிக்கப்படாத தொகை ரூபா | ஒப்பந்தக் காலம் |
|---|---|---|---|---|---|
| BOR 2 | கருக்கட்டல் கோழி இல்லம் (40'X20') புளொக் 1/2 நிர்மாணித்தல் | C6 மற்றும் C5 | 122,000.00 | 5000.00 | 120 நாட்கள் |
| BOR 3 | கருக்கட்டல் கோழி இல்லம் (40'X20') புளொக் 5/6 நிர்மாணித்தல் | C6 மற்றும் C5 | 122,000.00 | 5000.00 | 120 நாட்கள் |
| BOR 7 | கருக்கட்டல் கோழி இல்லம் (40'X20') புளொக் 3/4 நிர்மாணித்தல் | C6 மற்றும் C5 | 122,000.00 | 5000.00 | 120 நாட்கள் |

**ஜே.எம்.யூ.கே. ஜயசேக்கர**
**செயலாளர்/ பெறுகைக் குழுத் தலைவர்,**
**மாகாண விவசாய, நீர்ப்பாசன, விலங்கு உற்பத்தி மற்றும் நன்னீர் மீன்பிடி அமைச்சு,**
**ரத்வத்த மாவத்த - பதுளை**
**2024.07.15**

Trusted Marketplace of Classified Advertisers
Sunday Observer adz it's what you want Classified
Tuition Vehicle Employment Photo Classifieds Miscellaneous House/ Land Rent or Lease Wanted
For 15 Words Rs. 800/-
* Cost of each additional word Rs. 20/-
077 7 278 948 / 011 2 429 342/ 343 / 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk
Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291
Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361

# இலங்கை ஒருநாள் அணித் தலைமை பொறுப்பு குசலிடம் இருந்து அசலங்கவுக்கு மாற வாய்ப்பு

இலங்கை ஒருநாள் அணித் தலைவர் குசல் மெண்டிஸை சந்தித்திருக்கும் இலங்கை கிரிக்கெட் தேர்வுக் குழுவினர் ஒருநாள் மற்றும் டி20 அணித் தலைமைப் பொறுப்பை சரித் அசலங்கவிடம் வழங்குவது குறித்து தெரிவித்திருப்பதாக செய்தி வெளியாகியுள்ளது.

டி20 அணித் தலைமை பதவியில் இருந்து வனிந்து ஹசரங்க விலகிய நிலையில், அந்த இடத்தை நிரப்புவதில் உப தலைவரான அசலங்க முன்னிலையில் உள்ளார். இந்நிலையில் அவர் இரு வகை மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் போட்டிகளுக்குமான இலங்கை அணித் தலைவராக தெரிவு செய்யப்படவிருப்பதாக தெரியவந்துள்ளது.



கடந்த ஜனவரியில் டி20 அணித் தலைமை பொறுப்பு ஹசரங்கவிடம் வழங்கப்பட்ட நிலையில் ஒருநாள் அணித் தலைவராக குசல் மெண்டிஸ் தெரிவு செய்யப்பட்டார். எனினும் கடந்த ஆண்டு இந்தியாவில் நடந்த ஒருநாள் உலகக் கிண்ணப் போட்டியில் தசுன் ஷானக்க காயமடைந்த நிலையில் அணித் தலைவராக குசல் மெண்டிஸ் செயற்பட்டிருந்தார். இந்நிலையில் அணி புதிய வழியில் பயணிக்க வேண்டியது தொடர்பில் மெண்டிஸிடம் தேர்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த மாத இறுதியில் இலங்கை வரும் இந்திய அணி மூன்று ஒருநாள் மற்றும் மூன்று டி20 போட்டிகளில் ஆடவுள்ளது. இதில் டி20 தொடருக்கான இலங்கைக் குழாத்தில் இருந்தும் 29 வயதான குசல் மெண்டிஸ் நீக்கப்பட வாய்ப்பு இருப்பதாக தெரியவருகிறது.

தற்போது நடைபெற்று வரும் லங்கா பிரீமியர் லீக் தொடரில் ஜப்னா கிங்ஸ் அணியின் தலைவராக செயற்படும் குசல் மெண்டிஸ் இதுவரை ஒரு அரைச் சதத்தைக் கூட பெறாமல் சோபிக்கத் தவறி வருகிறார்.

மெண்டிஸ் தவிர சிரேஷ்ட வீரர்களான அஞ்சலோ மத்தியூஸ், தனஞ்சய டி சில்வா மற்றும் மத்திய வரிசை துடுப்பாட்ட வீரரான சதீர சமரவிக்ரம ஆகியோர் இந்தியாவுக்கு எதிரான டி20 தொடரில் இருந்து நீக்கப்பட வாய்ப்பு இருப்பதாக தெரியவருகிறது. அவர்களுக்கு பதில் லங்கா பிரீமியர் லீக் தொடரில் சோபித்து வரும் தினேஷ் சந்திமால், குசல் ஜனித் பெரேரா, அவிஷ் பெர்னாண்டோ மற்றும் சாமிக்க கருணாரத்ன ஆகியோர் மீண்டும் அழைக்கப்படவுள்ளனர்.

முன்னாள் அணித்தலைவரான தினேஷ் சந்திமால் கண்டி பொல்கன்ஸ் அணியின் ஆரம்ப வீரராக 8 போட்டிகளில் 2 அரைச்சதங்களுடன் 270 ஓட்டங்களை குவித்ததோடு 33.75 ஓட்ட சராசரியை பெற்றுள்ளார். இந்தத் தொடரில் அதிகபட்சமாக 17 சிக்ஸர்களையும் அவர் பெற்றுள்ளார்.

அதிரடி துடுப்பாட்ட வீரர்களான குசல் பெரேரா மற்றும் அவிஷ்க பெர்னாண்டோ ஆகியோர் அண்மையில் நடந்த டி20 உலகக் கிண்ணத்தில் இலங்கை அணியில் இடம்பெறாத நிலையில் அணிக்குத் திரும்பவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

லங்கா பிரீமியர் லீக் தொடரில் சோபித்து வரும் மற்றொரு வீரரான இளம் சகலதுறை ஆட்டக்காரர் சமிந்து விக்ரமசிங்கவும் இந்தியாவுக்கு எதிரான தொடருக்கு இலங்கை அணிக்கு அழைக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்வரும் ஜூலை 22 ஆம் திகதி இலங்கை வரும் இந்திய அணி கண்டியில் மூன்று டி20 போட்டிகளிலும் கொழும்பில் மூன்று ஒருநாள் சர்வதேச போட்டிகளிலும் ஆடவுள்ளது. இந்தத் தொடரில் இலங்கை அணி, இடைக்காலப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்ட சனத் ஜயசூரியவின் கீழ் செயற்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சீன சைக்கிளோட்ட வீரர்கள் 47 பேர் இலங்கை வருகை

கட்டுநாயக்க டீ.கே.ஜி. கபில



விளையாட்டுத் துறை அமைச்சு, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி பணியகம், இலங்கைக்கான சீன தூதரக அலுவலகம் மற்றும் சீனாவின் குவென்சோ இலங்கை துணைத்தூதரக அலுவலகம் இணைந்து ஏற்பாடு செய்துள்ள 'இலங்கை – குவென்சோ நட்புறவு சைக்கிளோட்டப் போட்டியில்' பங்கேற்பதற்காக 47 சீனா நாட்டு சைக்கிளோட்ட வீரர்கள் நேற்று (16) கட்டுநாயக்க விமானநிலையத்தை வந்தடைந்தனர்.

இலங்கையின் 19 வயதுக்கு உட்பட்ட சைக்கிளோட்ட அணியை கட்டியெழுப்பும் நோக்கில் இந்த சைக்கிளோட்டப் போட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி விளையாட்டுத் துறை அமைச்சினால் தேர்வு செய்யப்பட்ட 19 வயதுக்கு உட்பட்ட இலங்கை சைக்கிளோட்ட வீரர்கள் 11 பேர் சீன சைக்கிளோட்ட வீரர்களுடன் இணைந்து இன்று (17) இந்த சைக்கிளோட்டப் போட்டியில் பங்கேற்கவுள்ளனர். கொழும்பு விளையாட்டுத் துறை அமைச்சுக்கு முன்னால் ஆரம்பமாகும் போட்டி காலி வீதி ஊடாக எதிர்வரும் 20 ஆம் திகதி யால சரணாலயத்தில் நிறைவடையவுள்ளது.

# சர்வதேச தடகளத்தில் டேவிட் பீரிஸ் 12 தங்கம்



சிங்கப்பூரில் அண்மையில் நடைபெற்ற சர்வதேச மாஸ்டர்ஸ் தடகள சம்பியன்சிப் போட்டியில் பங்கேற்ற டேவிட் பீரிஸ் குழும அணி 12 தங்கப் பதக்கங்களுடன் மொத்தம் 24 பதக்கங்களை வென்றது.

வர்த்தக நிறுவனங்களுக்கு இடையிலான தடகளப் போட்டி மூலம் தேர்வான 32 பேர் கொண்ட இலங்கை அணியிலேயே டேவிட் பீரிஸ் குழுமத்தைச் சேர்ந்த எட்டு வீர, வீராங்கனைகள் இடம்பெற்றனர். இதில் கயேஷா திசாநாயக்க, கயானி வாசனா ஆகியோர் அதிகபட்சமாக நான்கு தங்கப்பதக்கங்களை வென்றனர். சிசுறு பெர்னாண்டோ மற்றும் மிஹிரணி பெரேரா தலா 3 தங்கங்களை வென்றனர்.

இந்த விளையாட்டுப் போட்டியில் உலகெங்கும் இருந்து 22 நாடுகளைச் சேர்ந்த 1200க்கும் அதிகமான வீர, வீராங்கனைகள் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.



## சர்வதேச செய்திகள்

# அமெரிக்காவின் கவலைக்கு மத்தியிலும் காசாவில் இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல்

காசாவில் அதிகரித்து வரும் பொதுமக்களின் உயிரிழப்புகள் குறித்து தனது நெருங்கிய நட்பு நாடான அமெரிக்கா மீண்டும் ஒருமுறை விமர்சனத்தை வெளியிட்ட நிலையில் இஸ்ரேல் நேற்றைய தினத்திலும் பலஸ்தீன பகுதிகள் மீது தொடர்ந்து தாக்குதல்களை நடத்தியது.

மத்திய காசாவில் இஸ்ரேலிய போர் விமானங்கள் குண்டுகளை வீசியதோடு தெற்கு பகுதியில் பீரங்கி குண்டுகள் விழுந்த நிலையில் இடிபாடுகளில் இருந்து பல சடலங்களும் மீட்கப்பட்டதாக குடியிருப்பாளர்கள் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளனர்.

முன்னதாக இரு இஸ்ரேலிய உயர் அதிகாரிகளுடன் பேசிய அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளிங்கன், பலஸ்தீனர்களின் பலி எண்ணிக்கை தொடர்ந்து ஏற்றுக் கொள்ளமுடியாதஅளவுக்குஅதிகரித்துள்ளது என்றார்.

'இந்தப் போரில் மிக அதிகமான பொதுமக்கள் கொல்லப்படுவதை நாம் தொடர்ந்து பார்க்கிறோம்' என்று இஸ்ரேலிய மூலோபாய விவகார அமைச்சர் ரொன் டெர்மர் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் செச்சி ஹனெக்பி ஆகியோரை பிளிங்கன் சந்தித்த பின்னர் அவரது பேச்சாளர் மத்தியூ மில்லர் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேல் மற்றும் காசாவில் ஆட்சியில் உள்ள ஹமாஸ் இடையே போர் நிறுத்த உடன்பாடு ஒன்றை எட்டும் முயற்சியில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளது.

எனினும் போர்நிறுத்தப் பேச்சுவார்த்தைகளில் இருந்து வெளியேறுவதாக ஹமாஸ் அரசியல் பிரிவு தலைவர் இஸ்மைல் ஹனியே கடந்த ஞாயிற்றுக்கிழமை குறிப்பிட்டிருந்தார். அல் மவாசி நகரில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 90க்கும் அதிகமானோர் கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்தே அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டிருந்தார்.



அமெரிக்காவின் ஆதரவில் காசாவில் போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவது மற்றும் காசாவில் பிடித்து வைக்கப்பட்டிருக்கும் பணயக்கைதிகளை விடுவிப்பது தொடர்பிலான பேச்சுவார்த்தைக்கு எகிப்து மற்றும் கட்டார் நாடுகள் மத்தியஸ்தம் வகித்து வருகின்றன. எனினும் இதுவரை இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளில் எந்த முன்னேற்றமும் எட்டப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் இஸ்ரேல் நேற்று நடத்திய புதிய தாக்குதல்களில் தெற்கு நகரான கான் யூனிஸில் வீடு ஒன்றில் இருந்து நான்கு சடலங்களை மீட்டதாகவும் மற்றொரு சடலம் மத்திய காசாவில் நுஸைரத் அகதி முகாமில் இருந்து மீட்கப்பட்டதாகவும் பலஸ்தீன செம்பிறை சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் விமானப் படை காசாவில் 40 பயங்கரவாத இலக்குகளை தாக்கியதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது. காசாவில் தெற்கு முனை நகரான ரபா மற்றும் மத்திய காசாவில் துருப்புகள் தொடர்ந்து படை நடவடிக்கையை முன்னெடுத்து வருவதாகவும் அது குறிப்பிட்டுள்ளது.

எகிப்து எல்லையை ஒட்டிய ரபா நகரின் கைர்பத் அல் அடாஸ் பகுதியில் இஸ்ரேல் இராணுவத்தின் தாக்குதல்களில் நால்வர் கொல்லப்பட்டிருப்பதோடு நகரின் குடியிருப்புப் பகுதிகள் வெடிவைத்து தகர்க்கப்பட்டதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டுள்ளது. கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது பலஸ்தீன போராளிகள் நடத்திய தாக்குதலை அடுத்து வெடித்த போரில் கடந்த ஒன்பது மாதங்களாக காசா மீது இஸ்ரேல் நடத்தி வரும் இடைவிடாத தாக்குதல்களில் 38,700 வரையான பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

காசா போரை ஒட்டி லெபனானின் ஹிஸ்புல்லா மற்றும் இஸ்ரேல் இடையே எல்லையில் தொடர்ந்து மோதல்கள் நீடித்து வரும் நிலையில் அது முழு அளவிலான போராக வெடிக்கும் அச்சுறுத்தல் இருந்து வருகிறது.

தெற்கு லெபனானின் எல்லை கிராமம் ஒன்றின் மீது இஸ்ரேல் நேற்று முன்தினம் நடத்திய வான் தாக்குதலில் இரு பொதுமக்கள் கொல்லப்பட்டு மேலும் நால்வர் காயமடைந்ததாக லெபனான் இராணுவத்தை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

# டிரம்பின் துணை ஜனாதிபதி வேட்பாளராக வேன்ஸ் தேர்வு

அமெரிக்காவின் துணை ஜனாதிபதி பதவிக்கான போட்டியில் ஒஹாயோ மாநில செனட்டர் ஜே.டி. வேன்ஸைக் களமிறக்குவதாக டொனால்ட் டிரம்ப் அறிவித்துள்ளார்.

டிரம்ப் குடியரசுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக அதிகாரபூர்வமாக நியமிக்கப்பட்டுள்ள நிலையில் அவர் தமது துணை ஜனாதிபதி வேட்பாளரை அறிவித்தார்.



விஸ்கோன்சின் மாநிலத்தின் மில்வாக்கி நகரில் குடியரசுக் கட்சியின் 4 நாள் மாநாடு நடைபெற்று வருகிறது. டிரம்ப் மாநாட்டில் தமது பிரசாரத்தை அதிகாரபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

'என்னுடன் அமெரிக்காவை மீண்டும் சிறப்பான நிலைக்குக் கொண்டுவர வேன்ஸ் தம்மால் முடிந்த அனைத்தையும் செய்வார்' என்றார் டிரம்ப். வேன்ஸ் 2016ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் டிரம்ப்பைக் கடுமையாக விமர்சித்தார். டிரம்ப்பை 'அறிவற்றவர்' என்றும் 'அமெரிக்காவின் ஹிட்லர்' என்றும் வேன்ஸ் குறிப்பிட்டிருந்தார்.

கொலை முயற்சிக்கு ஆளான 2 நாட்களில் டிரம்ப் துணை ஜனாதிபதி வேட்பாளரை அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சீன கப்பலால் பிலிப்பைன்ஸ் கவலை

பிலிப்பைன்ஸ் கடற்பரப்பில் விமான தாங்கிக் கப்பலை சீனா நிறுத்தியுள்ளமை குறித்து மணிலா கவலை தெரிவித்துள்ளது.

மியாகோ தீவிலிருந்து 323 கடல் மைல் தொலைவில் சீனாவின் விமானதாங்கி போர்க்கப்பலான சாங்டொங் நிறுத்தப்பட்டுள்ளது.

அத்தோடு ஏவுகணைகளை தாக்கி அழிக்கும் சீனாவின் போர்க்கப்பலும் மற்றொரு கப்பலும் அப்பகுதியில் காணப்பட்டதாக பிலிப்பைன்ஸ் அரச செய்தி நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதுகுறித்து கவலை தெரிவித்துள்ள பிலிப்பைன்ஸ் ஆயுதப்படைகளின் பேச்சாளர் கேர்ணல் பிரான்சல் மார்கரெத் படில்லே, பிராந்தியத்தின் அமைதியையும் ஸ்திரத்தன்மையையும் பேணுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ளார்.

# மனைவி உட்பட 42 பெண்களை கொன்ற தொடர் கொலையாளி கென்யாவில் கைது





தனது மனைவி உட்பட 42 பெண்களை கொன்று அவர்களின் துண்டாடப்பட்ட உடல்களை குப்பைக் கிடங்கில் புதைத்ததாக வாக்குமூலம் அளித்த தொடர் கொலையாளி என சந்தேகிக்கப்படும் ஆடவர் ஒருவர் கென்ய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தலைநகர் நைரோபியின் தெற்கில் உள்ள முகுரு சேரிப் பகுதியில் உள்ள குப்பை களஞ்சியம் ஒன்றில் இருந்து கடந்த வெள்ளிக்கிழமை வரை பிளாஸ்டிக் பைகளில் இருந்து சிதைக்கப்பட்ட ஒன்பது உடல்கள் மீட்கப்பட்டது கென்யாவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் கொலின்ஸ் ஜுமைசி கலுஷா என்ற 33 வயது சந்தேக நபரை நைரோபிக்கு அருகில் வைத்து கடந்த திங்கட்கிழமை கைது செய்ததாக பதில் பொலிஸ்மா அதிபர் டக்லஸ் கன்ஜா தெரிவித்துள்ளார்.

'மனித உயிரை மதிக்காத மனநோயாளியான தொடர் கொலையாளி ஒருவரை நாம் கையாண்டு வருகிறோம்' என்று குற்றவியல் புலனாய்வு பணியகத்தின் தலைவர் முஹமது அமின் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

2022 மற்றும் இந்த ஆண்டு ஜூலை 11 ஆம் திகதிக்கு இடையே இந்த கொலைகளில் ஈடுபட்டதாக கலுஷா குறிப்பிட்டதாக அமின் தெரிவித்துள்ளார்.

இதில் 42 பெண்களை கொன்றதாக வாக்குமூலம் அளித்திருக்கும் சந்தேக நபர், முதல் கொலையாக தனது மனைவியை கழுத்தை நெரித்துக் கொன்றதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் குப்பைக் கிடங்கிற்கு அருகில் இருந்த சந்தேகநபரின் வீட்டைச் சோதனை செய்ததில், 10 கைபேசிகள், மடிக்கணினி, அடையாள அட்டைகள் மற்றும் பெண்களின் ஆடைகள், கொலை செய்ய பயன்படுத்தப்பட்ட கத்தி மற்றும் உடல்களை அப்புறப்படுத்த உபயோகித்த 9 பைகளை பொலிஸார் கைப்பற்றினர்.

கொல்லப்பட்ட ஒரு பெண்ணின் கைபேசியை ஆய்வு செய்ததை அடுத்தே சந்தேக நபர் பிடிபட்டதாக அமின் குறிப்பிட்டுள்ளார். கொல்லப்பட்ட சில பெண்களுடன் பாலியல் உறவில் ஈடுபட்டதாகவும் கலுஷா ஒப்புக்கொண்டுள்ளார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜூலை மாதம் 17ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.